US copy

தோட்டக்கலை மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அலுவலகம்
சேப்பாக்கம்
25 JUN 2025
சென்னை-5

12891
SS2/5013/2025

சுருக்கம்

வேளாண்மை–உழவர் நலத்துறை–வேளாண் நிதிநிலை அறிக்கை–2025–2026 – கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் – 2025–2026– வேளாண்மைத் துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை மற்றும் சர்க்கரைத்துறை மூலம் 2,338 கிராம ஊராட்சிகளில் திட்டம் செயல்படுத்துதல் - நிர்வாக அனுமதி, ரூ.267.159 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் அங்கீகரித்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை – உழவர் நலத் (வேஉ.6(1)) துறை

அரசாணை (நிலை) எண்.183

நாள்: 23.06.2025
திருவள்ளுவர் ஆண்டு, 2056
விசுவாவசு வருடம்
ஆனித் திங்கள் 9–ஆம் நாள்

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.59, வேளாண்மை–உழவர் நலத் (வஇபதி) துறை, நாள் 09.03.2022.
2. அரசாணை (நிலை) எண்.298, வேளாண்மை–உழவர் நலத் (வஇபதி) துறை, நாள் 16.12.2022.
3. அரசாணை (நிலை) எண்.156, வேளாண்மை–உழவர் நலத் (வஇபதி) துறை, நாள் 20.07.2023.
4. அரசாணை (நிலை) எண்.83, வேளாண்மை–உழவர் நலத் (வஇபதி) துறை, நாள் 16.03.2024.
5. மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் வேளாண்மை நிதிநிலை அறிக்கை 2025–2026, நாள்.15.03.2025 அறிவிப்பு எண்.8.
6. வேளாண்மை இயக்குநரின் கடிதம் எண். கலைஞர் திட்டம்/ 31677/2025, நாள். 25.03.2025.
7. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநரின் கடிதம் எண். மாதி.2/5013/2025, நாள் 08.05.2025 மற்றும் 20.06.2025.

*****

**ஆணை**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி, 2021–2022–ஆம் ஆண்டில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தினை 1997 கிராமப் பஞ்சாயத்துகளில், வேளாண்மைத் துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மற்றும் வேளாண்மைப்

பொறியியல் துறை மூலம் ஒருங்கிணைத்து செயல்படுத்திட ரூ.227.0588 கோடி நிதி ஒதுக்கீடு செய்தும், திட்ட செயலாக்கத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளை அங்கீகரித்தும் ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையின்படி, 2022-2023-ஆம் ஆண்டில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தினை 3,204 கிராமப் பஞ்சாயத்துகளில், வேளாண்மைத் துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை மற்றும் சர்க்கரைத்துறை மூலம் ஒருங்கிணைத்து செயல்படுத்திட ரூ.234.22926 கோடி நிதி ஒதுக்கீடு செய்தும், திட்ட செயலாக்கத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளை அங்கீகரித்தும் ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, 2023-2024 ஆம் ஆண்டில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தினை 2,504 கிராம ஊராட்சிகளில் வேளாண்மைத் துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை மற்றும் சர்க்கரைத்துறை மூலம் ஒருங்கிணைத்து செயல்படுத்திட ரூ.182.5527 கோடி நிதி ஒதுக்கீடு செய்தும், திட்ட செயலாக்கத்திற்கான மேற்படி துறைகள் குறித்த வழிகாட்டு நெறிமுறைகளை அங்கீகரித்தும் ஆணை வெளியிடப்பட்டது.

4. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, 2024-2025 ஆம் ஆண்டில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தினை 2,482 கிராம ஊராட்சிகளில் வேளாண்மைத் துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை மற்றும் சர்க்கரைத்துறை மூலம் ஒருங்கிணைத்து செயல்படுத்திட ரூ.176.1465 கோடி நிதி ஒதுக்கீடு செய்தும், திட்ட செயலாக்கத்திற்கான மேற்படி துறைகள் குறித்த வழிகாட்டு நெறிமுறைகளை அங்கீகரித்தும் ஆணை வெளியிடப்பட்டது.

5. மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில், 2025-2026 ஆம் ஆண்டிற்கான வேளாண்மை - உழவர் நலத்துறைக்கான நிதிநிலை அறிக்கையில் **"அனைத்து சிற்றூர்களையும் தன்னிறைவு பெறச் செய்யும் நோக்கத்தோடு தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றி உழவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடும் உன்னத முயற்சியில் "கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்" கடந்த நான்கு ஆண்டுகளில் 10,187 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து 2025-26-ஆம் ஆண்டில் மீதமுள்ள 2,338 கிராம ஊராட்சிகளில், சுமார் 9 இலட்சத்து 36 ஆயிரம் உழவர்கள் பயனடையும் வகையில் 269 கோடியே 50 இலட்சம் ரூபாய் மாநில நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்"** என்ற அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

6. வேளாண்மை இயக்குநர், மேலே ஆறாவதாகப் படிக்கப்பட்ட தனது கடிதத்தில், மாண்புமிகு வேளாண்மை- உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பினை செயல்படுத்தும்பொருட்டு, கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தினை, 2025-2026 ஆம் ஆண்டில், 2,338 கிராமப் பஞ்சாயத்துகளில், ரூ.269.509 கோடி மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும் கிராம ஊராட்சிகளில், இதர துறை திட்டங்களுடன் ஒருங்கிணைத்து செயல்படுத்த ஏதுவாக கீழ்க்கண்டவாறு திட்ட ஒப்புதல், அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு செய்து, உரிய வழிகாட்டு நெறிமுறைகளுடன் ஆணை வழங்குமாறு அரசினைக் கோரியுள்ளார்:-

i. நடப்பு 2025-2026 ஆம் ஆண்டில் "கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்" ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையினால் 2025-26 ஆம் ஆண்டில் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் செயல்படுத்திட தேர்வு செய்யப்பட்ட 2,338 கிராம பஞ்சாயத்துகளில் ஒருங்கிணைத்து செயல்படுத்த அனுமதி வழங்குமாறும்,

ii. 2025-2026-இல் மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், ஒருங்கிணைந்து செயல்படுத்த உள்ள வேளாண்மைத்துறைக்கு ரூ. 19.8224 கோடியும், வேளாண்மைப் பொறியியல் துறைக்கு ரூ.73.67 கோடியும், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறைக்கு ரூ.21.6591 கோடியும், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறைக்கு ரூ.154.00 கோடியும் மற்றும் சர்க்கரைத்துறைக்கு ரூ.0.3575 கோடியும் ஆக மொத்தம் ரூ.269.509 கோடியை மாநில நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்குமாறும்,

iii. 2021-22 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண். 255, வேளாண்மை - உழவர் நலத் (வஇபதி) துறை, நாள். 25.10.2022-இல் இத்திட்டத்தின் கீழ் தரிசு நிலத் தொகுப்புகளின் மேம்பாட்டிற்காக அமைக்கப்படும் ஆழ்துளை / குழாய் / திறந்தவெளி கிணறுகளுக்கு மின் இணைப்புகள் வழங்குவது தொடர்பாக ஆணை வெளியிடப்பட்டது. அதன்படி தரிசு நிலத் தொகுப்புகள் மற்றும் அத்தரிசு நிலத் தொகுப்புகளை ஒட்டியுள்ள புறம்போக்கு நிலங்களில் அமைக்கப்படும் ஆழ்துளை / குழாய் / திறந்தவெளி கிணறுகளுக்கு தட்கல் (TATKAL – Self Financing Scheme) திட்டத்தின் கீழ் ஆண்டு ஒன்றிற்கு அதிகபட்சமாக 2,000 மின் இணைப்புகள் வரை வழங்குமாறும், வேளாண்மைத் துறையால் கண்டறியப்படும் தரிசு நிலத் தொகுப்புகளுக்கு வேளாண்மை உதவி இயக்குநர் பதவியின் பெயரிலும், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையால் கண்டறியப்படும் தொகுப்புகளுக்கு தோட்டக்கலை உதவி இயக்குநர் பதவியின் பெயரிலும் விண்ணப்பித்து மின் இணைப்பு பெற அனுமதி வழங்குமாறும், மேற்கண்டவாறு வழங்கப்படும்

மின் இணைப்புகளுக்கு மின் அளவீட்டுக் கருவி பொருத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடனும் மற்றும் தரிசு நிலத் தொகுப்பிற்கு வழங்கப்பட்ட விவசாய மின்இணைப்புகளுக்கான மின் நுகர்வுக் கட்டணமானது மாண்புமிகு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயித்துள்ள மின்கட்டண விகிதத்தின்படி (Tariff Order) கணக்கிடப்பட அனுமதி வழங்குமாறும்,

iv. மேலும், மின்சாரக் கட்டணத்தை பொருத்தமட்டில் 2021-22, 2022-23, 2023-24, 2024-25 மற்றும் நடப்பு 2025-26 ஆம் ஆண்டுகளில் பெறப்பட்ட / பெறப்படவுள்ள மின் இணைப்புகளுக்கான நுகர்வு கட்டணம் இந்த நிதியாண்டின் தேவையை இறுதி செய்யும் பொழுது கூடுதல் நிதித் தொகை ஏற்படின் RE / FMA-இல் நிதி வழங்கும் பொருட்டு தனியான கருத்துரு பின்னர் சமர்ப்பிக்க அனுமதி வழங்குமாறும்,

v. வேளாண்மைத் துறை மூலமாக இத்திட்டத்தினை செயல்படுத்திட ரூ.19.8224 கோடியினை வேளாண்மை இயக்குநரின் கடிதத்தில் காணும் இணைப்பு I-இல் உள்ள அட்டவணை அ-ன் படி வேளாண்மை இயக்குநர் அவர்கள் செலவினம் மேற்கொள்ள உரிய அனுமதி வழங்குமாறும், திட்ட செயலாக்கத்தின் போது கள நிலவரத்தின் தேவைக்கேற்ப இனங்களின் நிதி இலக்கினை மிகாமல் பொருள் இலக்கினை மாற்றி அமைத்துக்கொள்ளவும் மற்றும் ஒரு இனத்திலிருந்து மற்றொரு இனத்திற்கு 20 சதவீதம் வரை தேவைக்கேற்ப பொருள் மற்றும் நிதி இலக்கினை மாற்றியமைத்துக் கொள்ளவும் வேளாண்மை இயக்குநருக்கு அனுமதி அளித்து அது தொடர்பான செயல் வழிகாட்டு நெறிமுறைகளை (Executive Guidelines) வேளாண்மை இயக்குநர் அவர்களே மாற்றி அமைத்துக்கொள்ளஅனுமதி வழங்குமாறும்,

vi. 2025-2026 ஆம் ஆண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் 2,338 கிராம பஞ்சாயத்துக்களில் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களின்படி விவசாயிகளுக்கு திட்ட இனங்களை செயல்படுத்த இயலாதவாறு போதிய எண்ணிக்கையில் பயனாளிகள் இல்லாத பட்சத்தில் அக்கிராமங்களுக்கென வழங்கப்பட்ட இலக்கினை நடப்பு ஆண்டில் அதே வட்டாரத்தில் தேர்வு செய்யப்பட்ட பிற கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட கிராமப் பஞ்சாயத்துக்களில் இலக்கினை மாற்றி அமைத்து திட்டத்தினை செயல்படுத்திட சம்பந்தப்பட்ட வட்டார வேளாண்மை - உழவர் நலத்துறை அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்க அனுமதி வழங்குமாறும்,

மேலும், அந்த வட்டாரத்திற்குள்ளும் போதிய விவசாயிகள் இல்லாத பட்சத்தில் அந்த மாவட்டத்திற்குள் தேர்வு செய்யப்பட்ட பிற கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட கிராமப் பஞ்சாயத்துக்களில் அவ்வினங்களை மாற்றி அமைத்துக்கொள்ள சம்பந்தப்பட்ட மாவட்ட

வேளாண்மை – உழவர் நலத்துறை அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்க அனுமதி வழங்குமாறும்,

அதற்கும் மேலாக அவ்வினத்தின் இலக்கினை மாவட்டத்திற்குள் செயல்படுத்த இயலாத நிலை ஏற்படும்போது அவ்விலக்கினை மாநிலத்திற்குள் வேறு சில மாவட்டத்தில் உள்ள பிற கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட கிராமப் பஞ்சாயத்துக்களில் மாற்றம் செய்துகொள்ள வேளாண்மைத் துறை இயக்குநருக்கு / தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநருக்கு / தலைமைப் பொறியாளருக்கு (வே.பொ) / சர்க்கரைத்துறை இயக்குநருக்கு மற்றும் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநருக்கும் அதிகாரம் வழங்குமாறும்,

vii. நீலகிரி மாவட்டம், திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கொடைக்கானல் வட்டாரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள வெள்ளிமலை வட்டாரம் ஆகிய பகுதிகளில் வேளாண்மைத் துறைக்கான அலுவலகங்கள் இல்லாததால் அப்பகுதிக்கு ஒதுக்கப்பட்ட வேளாண்மைத் துறையின் திட்டங்களின் இலக்குகள் சம்பந்தப்பட்ட தோட்டக்கலைத் துறையின் அலுவலகங்கள் மூலம் செயல்படுத்திட ஆணை வழங்குமாறும் இப்பகுதிக்குத் தேவையான இடுபொருட்கள் கொள்முதல் பணிகள், நிதி செலவினம் நீலகிரி மாவட்டத்திற்காக வேளாண்மை இணை இயக்குநர், கோயம்புத்தூர் அவர்கள், கொடைக்கானல் வட்டாரத்திற்காக வேளாண்மை இணை இயக்குநர், திண்டுக்கல் அவர்கள் மற்றும் வெள்ளிமலை வட்டாரத்திற்காக வேளாண்மை இணை இயக்குநர், கள்ளக்குறிச்சி அவர்கள் மூலமாக மேற்கொள்ள அனுமதி வழங்குமாறும், மேலும் இப்பகுதிகளுக்கான பயனாளிகள் தேர்வு மற்றும் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும் பணிகள் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலமாகவும் மேற்கொள்ள அனுமதி வழங்குமாறும்,

viii. தரிசு நிலங்களைப் பதிவு செய்வதற்கான செலவினம் மேற்கொள்ளத் தேவையான நிதி வேளாண்மைத் துறைக்கு மட்டுமே திட்டத்தில் ஒதுக்கீடு செய்ய கோரப்பட்டுள்ள நிலையில், கிராமப் பஞ்சாயத்துக்களில் தரிசு நிலத் தொகுப்புகளை அமைக்கும் பணிகளை தோட்டக்கலைத் துறை, விதைச்சான்றளிப்புத் துறை, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் மூலம் நியமிக்கப்பட்ட பொறுப்பு அலுவலர்கள் (Nodal Officers) மேற்கொள்ளும் போது தரிசு நிலத் தொகுப்புகளை பதிவு செய்வதற்கான செலவினங்களை அந்தந்த துறையின் பொறுப்பு அலுவலர்களே (கிராமப் பஞ்சாயத்துக்களில் தரிசு நிலத் தொகுப்புகளை அமைக்கும் பணிகளை தோட்டக்கலைத் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண்மை வணிகத் துறையின் மூலம் நியமிக்கப்பட்ட பொறுப்பு அலுவலர்கள்) மேற்கொள்ளவும் அவ்வாறான செலவினத் தொகையினை உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து சம்பந்தப்பட்ட வட்டார வேளாண்மை உதவி

இயக்குநரிடமிருந்து மீள பெற்றுக் கொள்ள அனுமதி வழங்குமாறும்,

ix. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலம் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்களுக்கான ரூ.21.6591 கோடி நிதியினை, வேளாண்மை இயக்குநரின் கடிதத்தில் காணும் இணைப்பு I–ல் உள்ள அட்டவணை–ஆ–வில் தெரிவித்துள்ளபடி, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்கள், செலவினம் மேற்கொள்ள அனுமதி வழங்குமாறும், திட்ட செயலாக்கத்தின் போது கள நிலவரத்தின் தேவைக்கேற்ப இனங்களின் நிதி இலக்கினை மிகாமல் பொருள் இலக்கினை மாற்றி அமைத்துக்கொள்ளவும் மற்றும் ஒரு இனத்திலிருந்து மற்றொரு இனத்திற்கு 20 சதவீதம் வரை தேவைக்கேற்ப பொருள் மற்றும் நிதி இலக்கினை மாற்றியமைத்துக் கொள்ளவும் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநருக்கு அனுமதி அளித்து அது தொடர்பான செயல் வழிகாட்டு நெறிமுறைகளை (Executive Guidelines) தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்களின் இயக்குநர் அவர்களே மாற்றி அமைத்துக்கொள்ள அனுமதி வழங்குமாறும்,

x. வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்களுக்கான ரூ.73.67 கோடி நிதியினை, வேளாண்மை இயக்குநரின் கடிதத்தில் காணும் இணைப்பு I–ல் உள்ள அட்டவணை–இ–இல் தெரிவித்துள்ளபடி, தலைமைப் பொறியாளர் (வே.பொ), வேளாண்மைப் பொறியியல் துறை அவர்கள் செலவினம் மேற்கொள்ள அனுமதி வழங்குமாறும், திட்ட செயலாக்கத்தின் போது கள நிலவரத்தின் தேவைக்கேற்ப இனங்களின் நிதி இலக்கிற்கு மிகாமல் பொருள் இலக்கினை மாற்றி அமைத்துக் கொள்ள தலைமைப் பொறியாளர் (வே.பொ), வேளாண்மைப் பொறியியல் துறை அவர்களுக்கு அனுமதி அளித்து அது தொடர்பான செயல் வழிகாட்டு நெறிமுறைகளை (Executive Guidelines) தலைமைப் பொறியாளர் (வே.பொ), வேளாண்மைப் பொறியியல் துறை அவர்களே மாற்றி அமைத்துக்கொள்ள அனுமதி வழங்குமாறும்,

xi. தொகுப்பில் உள்ள விவசாயக் குழுக்களுக்கு நீர் ஆதாரங்களை உருவாக்குதல் இனத்தின் கீழ் வேளாண்மை/ தோட்டக்கலை/ வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறைகளின் மூலம் கள ஆய்வின் அடிப்படையில் மொத்தமாக 50 தொகுப்புகள் உருவாக்கப்படலாம் என்ற நோக்கத்தில், நிலநீர் ஆய்வு மற்றும் நீர் மாதிரி ஆகியவற்றின் அடிப்படையில் நீர் ஆதாரங்களை உருவாக்குதல் மற்றும் வேளாண்மைப் பொறியியல் துறை சார்ந்த இதர பணிகளும் செயல்படுத்தப்படும் நிலையில், அரசாணை எண். 142, பொதுப் பணித் (R2) துறை, தேதி: 23.07.2014–இல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை தளர்வு செய்து மித அபாயகரமான நுகர்வு, அபாயகரமான நுகர்வு மற்றும் அதிநுகர்வு குறுவட்டங்களில் தலைமைப் பொறியாளர் (மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம்) அவர்களின் கடித எண்: OT9/AG–V/scheme/2022, நாள்

15.02.2022–இல் அளித்துள்ள குறிப்புரையின்படி கிணறுகளுக்கான இடைவெளி விதிமுறைகள் பின்பற்றுதல், தேவையான நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள் ஏற்படுத்துதல் மற்றும் கண்காணிப்புக் கிணறுகள் அமைத்தல் போன்றவற்றைத் தவறாமல் பின்பற்ற வேண்டுமென்ற நிபந்தனையின் அடிப்படையில் – இதனை சிறப்பு நிகழ்வாகக் கருதி பாதுகாப்பான குறுவட்டங்கள் உட்பட இதர குறுவட்டங்களிலும் கிணறுகள் அமைக்க சிறப்பு அனுமதி வழங்குமாறும்,

xii. தொகுப்பிலுள்ள விவசாயக் குழுக்களுக்கு நீர் ஆதாரங்களை உருவாக்குதல் இனத்தின் கீழ் மணற்பாங்கான மற்றும் வண்டல் மண் பகுதிகளில் குழாய்க் கிணறுகளும் (Tubewell), கடினப் பாறைப் பகுதிகளில் ஆழ்துளை கிணறுகளும் (Borewell) மற்றும் திறந்தவெளிக் கிணறுகளும் (Openwell) அமைக்கப்படுகின்றன. இதன் அடிப்படையில், தொகுப்புகளில் அமைக்கப்படும் கிணறுகளுக்கு மண்ணின் தன்மைக்கு ஏற்ப கிணற்றின் ஆழம் மற்றும் வகை மாறுபடுவதால் அவற்றிற்கான செலவும் மாறுபடுகிறது. எனவே, அதற்கேற்றவாறு இவ்வினத்தின் சராசரி அலகுத் தொகையினில் மாற்றம் செய்து கொள்ள தலைமைப் பொறியாளர் (வே.பொ), சென்னை அவர்களுக்கு அனுமதி வழங்குமாறும்,

xiii. மேலும், இத்திட்டத்தினை வேளாண்மைப் பொறியியல் துறை செயல்படுத்தப்படும்போது, கிணறுகள் அமைக்கும் பணியில் உள்ள உபஇனங்களில் (ஆழ்துளை/ குழாய்க் கிணறு) நிலநீர் ஆய்வு அறிக்கை அடிப்படையில் கிடைக்கக்கூடிய நீரின் அளவு பொறுத்து (Well yield) ஆழ்துளை/ குழாய்க் கிணறு தேவையின் அடிப்படையில் கிணறுகளின் எண்ணிக்கையில் மாற்றம் செய்துகொள்ள தலைமைப் பொறியாளர் (வே.பொ), வேளாண்மைப் பொறியியல் துறை அவர்களுக்கு அனுமதி வழங்குமாறும்,

xiv. நிலநீர் ஆய்வின் அடிப்படையில் கண்டறியப்படும் திறந்தவெளிக் கிணறுகள் அமைக்கும் பணிகள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலமாக ஒருங்கிணைந்து செயல்படுத்திடவும், பணிகள் முடிக்கப்பட்ட பின் நீரிறைக்கும் அமைப்பு (மின்/ சூரிய சக்தி) மற்றும் இதர பணிகள் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலமாக கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதி வழங்குமாறும்,

xv. பாதுகாப்பான குறுவட்டங்களில் அமைக்கப்படும் கிணறுகளுக்கு, சூரிய சக்தி மூலம் இயங்கும் பம்புசெட்டுகள் உத்தேசிக்கப்படும் இடங்களில், முதலமைச்சரின் சூரிய சக்தி பம்புசெட்டுகள் திட்ட நிதியினை ஒருங்கிணைத்தும், இதர குறுவட்டங்களில் அமைக்கப்படும் கிணறுகளுக்கு, சூரிய சக்தி மூலம் இயங்கும் பம்புசெட்டுகளுக்கு கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட நிதியிலிருந்தும் செயல்படுத்திட அனுமதி வழங்குமாறும், மேலும், முதலமைச்சரின் சூரிய சக்தி பம்புசெட்டுகள் திட்ட ஒதுக்கீடு முடிவுற்றால், சூரிய சக்தி மூலம் இயங்கும் பம்புசெட்டுகள்

உத்தேசிக்கப்படும் இடங்களில் கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட நிதியிலிருந்து முழுவதுமாக செயல்படுத்திட அனுமதி வழங்குமாறும்,

xvi. கிணறுகளுக்கு மின்சக்தி மூலம் இயங்கும் மின் மோட்டார் பம்புசெட்டுகள் அமைக்க உத்தேசிக்கப்படும் இடங்களுக்கு, சம்பந்தப்பட்ட உதவி வேளாண்மை இயக்குநர்/ உதவி தோட்டக்கலை இயக்குநர் அவர்களின் பெயரில் தட்கல் மின் இணைப்பு பெற தேவையான நிதியினை இத்திட்டத்திலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வழங்குமாறும்,

xvii. இத்திட்டத்தின் மூலம் உருவாக்கப்படும் கிணறுகளுக்கு மின்/ சூரிய சக்தி மூலம் நீர் இறைக்கும் அமைப்பு உருவாக்கப்பட்டபின், பாசன நீர் விநியோகக் குழாய்கள் மற்றும் சொட்டு நீர்ப்பாசன அமைப்புகளை வேளாண்மை/ தோட்டக்கலைத் துறையின் மூலம் ஏற்படுத்திட தொகுப்புகளின் விபரங்களை சம்பந்தப்பட்ட துறைகளிடம் ஒப்படைக்க அனுமதி வழங்குமாறும்,

xviii. தனிப்பட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினரால் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் 2025–26 ஆம் ஆண்டு பணி மேற்கொள்ள தேர்வு செய்யப்பட்ட 2,338 பஞ்சாயத்து கிராமங்களில் 400 பயனாளிகள் பயன்பெறும் வகையில் மின் சக்தி அல்லது சூரிய சக்தி மூலம் இயங்கும் பம்புசெட்டுடன் கிணறுகள் (ஆழ்துளை/ குழாய்க் கிணறு) அமைத்திட அனுமதி வழங்குமாறும் மேலும், கடந்த 2021–22 ஆம் ஆண்டு முதல் 2024–25 ஆம் ஆண்டு வரை இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட கிராம பஞ்சாயத்துகளில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகளின் தேவைகளை கருத்தில் கொண்டு அவற்றினைப் பூர்த்தி செய்யும் வகையில் 100 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகள் பயன்பெறும் வகையில் இப்பணிகளை மேற்கொள்ள அனுமதி வழங்குமாறும், இத்திட்டத்தின் மூலம் உருவாக்கப்படும் கிணறுகளுக்கு மின்/ சூரிய சக்தி மூலம் நீர் இறைக்கும் அமைப்பு உருவாக்கப்பட்ட பின், பாசன நீர் விநியோகக் குழாய்கள் மற்றும் சொட்டு நீர்ப்பாசன அமைப்புகளை வேளாண்மைத் துறை/ தோட்டக்கலைத் துறையின் மூலம் ஒருங்கிணைத்து ஏற்படுத்திட ஏதுவாக விபரங்கள் சம்பந்தப்பட்ட துறைகளிடம் ஒப்படைக்க அனுமதி வழங்குமாறும்,

xix. மழைநீரை விளைநிலங்களிலேயே சேமிக்க பண்ணைக் குட்டைகள் அமைக்கும் இனத்தின் கீழ், விவசாயிகளின் நிலங்களில் தேவைக்கேற்ற அளவில், அதிகபட்சமாக ஒரு பண்ணைக் குட்டைக்கு ரூ.1.40 இலட்சம் செலவில் 100 சதவீத மானியத்துடன் பண்ணைக்குட்டைகள் அமைத்திட அனுமதி வழங்குமாறும்,

xx. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சிறுபாசனக் குளங்கள், ஊருணிகள், குளங்கள், வரத்துக் கால்வாய்கள் மற்றும் இதர நீர் சேகரிப்புக் கட்டுமானங்களைத்

தூர்வாரி மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ள இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்திட அனுமதி வழங்குமாறும்,

xxi. கடந்த 2021-22 ஆம் ஆண்டு முதல் 2024-25 ஆம் ஆண்டு வரை மற்றும் 2025-26 ஆம் ஆண்டு தொகுப்புகளில் அமைக்கப்பட்ட/ அமைக்கப்படும் சமுதாய ஆழ்துளை/ குழாய்/ திறந்தவெளிக் கிணறுகளில் சாத்தியக் கூறுகள் உள்ள இடங்களையும், 2025-26 ஆம் ஆண்டில் தனிப்பட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகளுக்கு அமைக்கப்படும் ஆழ்துளை/ குழாய்க் கிணறுகளில் சாத்தியக் கூறுகள் உள்ள இடங்களையும் தேர்வு செய்து, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் வடிவமைக்கப்பட்டுள்ள குறைந்த செலவிலான நிலத்தடி நீர் செறிவூட்டும் கட்டமைப்புகளை அமைக்க அனுமதி வழங்குமாறும், மேலும், கலைஞர் திட்டத்தின் கீழ் ஆழ்துளை/ குழாய்/ திறந்தவெளிக் கிணறுகளில் 50 நீர் செறிவூட்டும் கட்டமைப்புகளும், தனிப்பட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகளுக்கு அமைக்கப்படும் ஆழ்துளை/ குழாய்க் கிணறுகளில் 100 நீர் செறிவூட்டும் கட்டமைப்புகளும் அமைக்க அனுமதி வழங்குமாறும்,

xxii. வரும் 2025-26 ஆம் நிதி ஆண்டின் வரவு செலவு திட்டத்தின்படி, வேளாண்மைப் பொறியியல் துறைக்கு 2401-00-113-AK-30903 கணக்குத் தலைப்பின் கீழ் ரூ.126.384 கோடி, 2401-00-113-AK-30502 கணக்குத் தலைப்பின் கீழ் ரூ.0.02 கோடி, 2401-00-789-AO-30903 கணக்குத் தலைப்பின் கீழ் ரூ.30.0162 கோடி, 2401-00-796-JP-30903 கணக்குத் தலைப்பின் கீழ் ரூ.1.5798 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எனினும், வேளாண்மைப் பொறியியல் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மற்றும் சர்க்கரைத் துறைகளின் இத்திட்டதிற்கான மொத்த நிதி தேவை, 2401-00-113-AK-30903 கணக்கு தலைப்பின் கீழ் ரூ.156.034 கோடியும், 2401-00-789-AO-30903 கணக்குத் தலைப்பின் கீழ் ரூ.69.9879 கோடியும் மற்றும் 2401-00-796-JP-30903 கணக்குத் தலைப்பின் கீழ் ரூ.1.9856 கோடியும் தேவைப்படுகிறது. எனவே, 2401-00-113-AK-30903 கணக்குத் தலைப்பின் கீழ் கூடுதலாகத் தேவைப்படும் நிதி ரூ.29.65 கோடியினையும், 2401-00-789-AO-30903 கணக்குத் தலைப்பின் கீழ் கூடுதலாகத் தேவைப்படும் நிதி ரூ.39.9717 கோடியினையும், 2401-00-796- JP-30903 கணக்குத் தலைப்பின் கீழ் கூடுதலாகத் தேவைப்படும் நிதி ரூ.0.4058 கோடியினையும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டில் வழங்கிடுமாறும்,

xxiii. 2025-26 ஆம் ஆண்டிற்கான இத்திட்டம் செயல்படுத்த தேர்ந்தெடுக்கப்பட்ட 2,338 கிராம பஞ்சாயத்துகளில் வேளாண்மைப் பொறியியல் துறை செயல்படுத்தும் இனங்களில் செயல் இலக்கிற்கான தகுதியான பயனாளிகள்/ இடங்களைத் தேர்வு செய்ய முடியாத போது, கடந்த 2021-22 ஆம் ஆண்டு முதல் 2024-25 ஆம் ஆண்டு வரை இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட 10,187 கிராம பஞ்சாயத்துகளில் அவற்றினை

மாற்றம் செய்து, அந்தந்த இனங்களுக்கு ஒப்பளிப்பு செய்யப்படும் நிதி இலக்கிற்கு மிகாமல் பணிகள் மேற்கொள்ள தலைமைப் பொறியாளர் (வே.பொ), வேளாண்மைப் பொறியியல் துறை அவர்களுக்கு அனுமதி வழங்குமாறும்,

xxiv. இத்திட்டம் ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மை முறை (Integrated Financial and Human Resources Management System) – காலாண்டு ஒதுக்கீடு (Quarterly Control) முறைப்படி நிதி வழங்கப்பட்டு, செலவினம் மேற்கொள்ளப்படுகிறது. இதன் அடிப்படையில் சர்க்கரைத்துறைக்கு காலாண்டு ஒதுக்கீட்டில் நிதி வழங்கப்படுகிறது. இதனால் சர்க்கரைத்துறை செயல்படுத்தும் இனங்களில் உரிய நேரத்தில் பருசீவல் நாற்றுகள் மற்றும் ஒரு பரு விதைக் கரணைகள் முழுவதும் கொள்முதல் செய்து விநியோகம் செய்ய இயலாத நிலை உள்ளதாக தெரிவிக்கப்பட்டதனைத் தொடர்ந்து இத்திட்டத்தில் சர்க்கரைத்துறைக்கான மொத்த நிதியான ரூ.0.3575 கோடியினை அரசாணை பெறப்பட்டவுடன் முதல் காலாண்டு நிதி ஒதுக்கீட்டில் முழுவதுமாக வழங்கிட தலைமைப் பொறியாளர் (வே.பொ), வேளாண்மைப் பொறியியல் துறை அவர்களுக்கு அனுமதி வழங்குமாறும்,

xxv. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மூலம் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்களுக்கான ரூ. 154.00 கோடி நிதியினை, வேளாண்மை இயக்குநரின் கடிதத்தில் காணும் இணைப்பு I–ல் உள்ள அட்டவணை–ஈ–இல் தெரிவித்துள்ளபடி வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை ஆணையர் அவர்கள் செலவினம் மேற்கொள்ள உரிய அனுமதி வழங்குமாறும்,

xxvi. இச்செலவினத்திற்காக ரூ.154.00 கோடி நிதியினை தலைமைப் பொறியாளர் (வே.பொ), வேளாண்மைப் பொறியியல் துறை அவர்கள் தமது துறையின் கணக்குத் தலைப்பு – "2401 – 00 – 113 – AK"– உப கணக்குத் தலைப்பான "309 – 03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை"–இல் இருந்து ரூ123.20 கோடி மற்றும் 2401–00–789–AO உப கணக்குத் தலைப்பான "309 – 03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை"–இல் இருந்து ரூ.29.26 கோடி மற்றும் 2401–00–796–JP உப கணக்குத் தலைப்பான "309 – 03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை"– இல் இருந்து ரூ.1.54 கோடியினைப் பெற்று ஆணையர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை அவர்களுக்கு வழங்கிட அனுமதி வழங்குமாறும்,

xxvii. இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படவுள்ள உலர்களங்களுடன் கூடிய தரம் பிரிப்புக் கூடங்கள் (Drying yard with Grading & Sorting Hall) அமைக்கும் பணிகளை தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய பொறியியல் பிரிவின் மூலம் மேற்கொள்ளவும், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறைக்கு ஒதுக்கப்படும் நிதியினை தமிழ்நாடு மாநில வேளாண்மை

விற்பனை வாரிய வைப்பு நிதியில் (TNSAMB – PD Account) வைத்து நிர்வகிக்க அனுமதி வழங்குமாறும்,

xxviii. சர்க்கரைத்துறை மூலம் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்களுக்கான ரூ.0.3575 கோடி நிதியினை, வேளாண்மை இயக்குநரின் கடிதத்தில் காணும் இணைப்பு I–ல் உள்ள அட்டவணை–உ–இல் தெரிவித்துள்ளபடி சர்க்கரைத்துறை இயக்குநர் அவர்கள் செலவினம் மேற்கொள்ள உரிய அனுமதி வழங்குமாறும்,

xxix. இச்செலவினத்திற்காக ரூ.0.3575 கோடி நிதியினை தலைமைப் பொறியாளர் (வே.பொ), வேளாண்மைப் பொறியியல் துறை அவர்கள் தமது துறையின் கணக்குத் தலைப்பு – "2401 – 00 – 113 – AK"– உப கணக்குத் தலைப்பான "309 – 03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை"–இல் இருந்து ரூ.0.286 கோடி மற்றும் 2401–00–789–AO உப கணக்குத் தலைப்பான "309 – 03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை"– இல் இருந்து ரூ.0.0679 கோடி மற்றும் 2401–00–796–JP உப கணக்குத் தலைப்பான "309 – 03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை"– இல் இருந்து ரூ.0.0036 கோடியினை பெற்று இயக்குநர், சர்க்கரைத்துறை அவர்களுக்கு வழங்கிட அனுமதி வழங்குமாறும், மேலும் இத்துறைக்காக ஒதுக்கப்படும் நிதியினை இத்திட்டத்திற்காக துவங்கப்பட்ட வங்கிக் கணக்கில் நிர்வகிக்க அனுமதி வழங்குமாறும்,

xxx. திட்ட இனங்களை கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைப்பகுதிகளில் சர்க்கரைத்துறை – செயலாட்சியர் / தலைமை நிர்வாகிகள் மூலமாகவும், தனியார் சர்க்கரை ஆலைப்பகுதிகளில் வேளாண்மைத்துறை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்கள் மூலமாகவும் செயல்படுத்திட அனுமதி வழங்குமாறும், திட்ட செயலாக்கத்தின்
போது கள நிலவரத்தின் தேவைக்கேற்ப இனங்களின் நிதி இலக்கினை மிகாமல் பொருள் இலக்கினை மாற்றி அமைத்துக்கொள்ளவும் திட்ட செயலாக்கத்தின் போது கள நிலவரத்தின் தேவைக்கேற்ப இனங்களின் நிதி இலக்கினை மிகாமல் பொருள் இலக்கினை மாற்றி அமைத்துக்கொள்ளவும் மற்றும் ஒரு இனத்திலிருந்து மற்றொரு இனத்திற்கு 20 சதவீதம் வரை தேவைக்கேற்ப பொருள் மற்றும் நிதி இலக்கினை மாற்றியமைத்துக் கொள்ளவும் இயக்குநர், சர்க்கரைத்துறை அவர்களுக்கு அனுமதி அளித்து அது தொடர்பான செயல் வழிகாட்டு நெறிமுறைகளை (Executive Guidelines) இயக்குநர், சர்க்கரைத்துறை அவர்களே மாற்றி அமைத்துக்கொள்ளஅனுமதி வழங்குமாறும்,

xxxi. வேளாண்மை–உழவர் நலத்துறையின் கீழ் செயல்படும் வேளாண்மை மற்றும் சகோதரத்துறைகளின் திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்துவது தொடர்பான அனைத்து துறைகளுக்கான பொதுவான திட்டசெயலாக்க வழிமுறைகள் மற்றும் வேளாண்மை மற்றும் சகோதரத் துறைவாரியாக மேற்கொள்ள வேண்டிய பணிகள் – வழிகாட்டு நெறிமுறைகளைப் வேளாண்மை இயக்குநரின் கடிதத்தில்

காணும் இணைப்பு–(II)–ல் உள்ளவாறும், தரிசு நிலத் தொகுப்புகளுக்கான மேம்பாடு மற்றும் திட்ட செயலாக்க வழிமுறைகளை இணைப்பு–(III)–ல் உள்ளவாறும், துறை வாரியான மற்றும் இனம் வாரியான வழிகாட்டு நெறிமுறைகளை இணைப்பு–(IV)–ல் உள்ளவாறும் கடைப்பிடித்திட அனுமதி வழங்குமாறும்,

xxxii. வேளாண்மை – உழவர் நலத்துறையின் மூலம் ஒன்றிய, மாநில நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் இதர திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்திட (Dovetailing of Schemes) அனுமதி வழங்குமாறும், அவ்வாறு ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படும் முக்கிய திட்டங்களில் 80 சதவீத திட்ட ஒதுக்கீடு (விதை, நாற்றுகள், நடவு பொருட்கள், உரங்கள், உயிர் உரங்கள், நுண்ணூட்டக் கலவை, அங்கக உரங்கள், உயிரி கட்டுப்பாட்டு காரணிகள் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசிய இனங்கள் நீங்கலாக) தேர்வு செய்யப்பட்ட கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட கிராம பஞ்சாயத்துக்களில் செயல்படுத்தவும், தேர்வுசெய்யப்பட்ட கிராமப் பஞ்சாயத்துக்களில் போதுமான அளவு பயனாளிகள் இல்லாத பட்சத்தில், நியாயமான காரணங்களினால் கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தினை அப்பஞ்சாயத்துக்களில் செயல்படுத்த இயலாத நிலையில் அவ்வொதுக்கீட்டினை பிற கிராமங்களுக்கு அளிக்கவும் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கான வழிகாட்டு நெறிமுறைகள் அந்தந்த திட்டங்களுக்காக கூறப்பட்ட நெறிமுறைகளையே கடைபிடித்திடவும் அனுமதி வழங்குமாறும்,

xxxiii. உழவர் நலன் சார்ந்த இதரத் துறைகளான 1) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 2) கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, 3) கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, 4) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, 5) நீர்வள ஆதாரத் துறை,6) எரிசக்தி துறை, 7) கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர் துறை ஆகிய துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களை கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும் கிராம பஞ்சாயத்துகளில் ஒருங்கிணைத்து செயல்படுத்துவதற்காக இத்திட்டத்திற்காக ஏற்கனவே வழங்கப்பட்ட அரசு ஆணை (நிலை) எண்.137 வேளாண்மை–உழவர் நலத் (வஇபதி) துறை, நாள் 08.07.2024–ல் கண்டவாறு கடைப்பிடித்திட அனுமதி வழங்குமாறும்,

xxxiv. இத்திட்டத்தினை சிறப்புடன் ஒருங்கிணைத்து செயல்படுத்திட மாநில அளவில் வேளாண்மை இயக்குநரும், மாவட்ட அளவில் சம்பந்தப்பட்ட வேளாண்மை இணை இயக்குநர்களும் திட்ட பொறுப்பு அலுவலர்களாக (Nodal Officer) செயல்பட அனுமதி வழங்குமாறும்,

xxxv. தேர்வு செய்யப்பட்ட 2,338 கிராம ஊராட்சிகளில் விவசாயிகள் நலன் சார்ந்த அனைத்துத் துறை திட்டங்களையும்

ஒருங்கிணைத்து வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கு, வேளாண்மை அலுவலர் / தோட்டக்கலை அலுவலர் / துணை வேளாண்மை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலரைத் தலைவராகவும், உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர் / உதவி விதை அலுவலர் / உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்) அவர்களை கிராம அளவிலான திட்ட பொறுப்பு அலுவலராகவும் (Nodal Officer), இதரத்துறை அலுவலர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு கிராம திட்ட செயலாக்கக் குழு ஒன்று வேளாண்மை இயக்குநரின் கடிதத்தில் காணும் இணைப்பு (V)ன்படி அமைத்திட அனுமதி வழங்குமாறும்,

xxxvi. மாவட்ட அளவில் அனைத்துத் துறை திட்டங்களையும் ஒருங்கிணைத்து, கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித்திட்டத்தினை கண்காணித்திட, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களைத் தலைவராகவும், வேளாண்மை இணை இயக்குநர் அவர்களை உறுப்பினர் செயலாளராகவும், இதரத்துறை அலுவலர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட மாவட்ட கண்காணிப்புக் குழு ஒன்று வேளாண்மை இயக்குநரின் கடிதத்தில் காணும் இணைப்பு (VI)ன்படி அமைத்திட அனுமதி வழங்குமாறும்,

xxxvii. மாநில அளவில், இத்திட்டத்தினை கண்காணித்திட மாநில அரசாணை (டி) எண்.176, வேளாண்மை – உழவர் நலத் (வே.உ.2) துறை, நாள். 29.10.2021 மற்றும் அரசாணை (டி) எண்.13, வேளாண்மை – உழவர் நலத் (வே.உ.2) துறை, நாள்.27.01.2022–இல் அரசு தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் ஏற்கனவே அமைக்கப்பட்ட மாநில அளவிலான உயர்நிலைக்குழு மூலம் கண்காணிக்க அனுமதி வழங்குமாறும்,

xxxviii. விரிவான கிராம வேளாண் வளர்ச்சித் திட்ட அறிக்கையினை (Detailed Project Report) அரசாணை (நிலை) எண்.59, வேளாண்மை–உழவர் நலத் (வஇபதி) துறை, நாள். 09.03.2022–இல் வழங்கப்பட்ட படிவங்களில் தயாரிக்க அனுமதி வழங்குமாறும், மேலும் வழங்கப்பட்ட படிவங்களில் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு வேளாண்மை இயக்குநர் அவர்களுக்கு அதிகாரம் அளித்திடவும்,

xxxix. நடப்பு 2025–26 ஆண்டானது இத்திட்டத்தின் இறுதி ஆண்டு என்பதால் முந்தைய ஆண்டுகளான 2021–22, 2022–23, 2023–24 மற்றும் 2024–25 ஆகிய ஆண்டுகளில் தேர்வு செய்யப்பட்ட கிராம பஞ்சாயத்து விவசாயிகளிடமிருந்து கோரிகை வரப்படின் தரிசு நிலத் தொகுப்புகள் ஏற்படுத்துதல், தொகுப்பிலுள்ள விவசாயக் குழுக்களுக்கு நீர் ஆதாரங்களை உருவாக்குதல் மற்றும் தரிசு நிலத் தொகுப்பு / தனிப்பட்ட விவசாயிகளின் நிலங்களில் உள்ள முட்புதர்களை அகற்றி, சமன்செய்து உழுதல் ஆகிய இனங்களை அக்கிராமப் பஞ்சாயத்துக்களில் நடப்பு 2025–26–ஆம் ஆண்டில் செயல்படுத்திட அனுமதி வழங்குமாறும்,

xl. நடப்பு 2025-26-ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும் 2,338 கிராம பஞ்சாயத்துக்களில் போதுமான எண்ணிக்கையில் ஆதிதிராவிட / பழங்குடியின தகுதி வாய்ந்த விவசாயிகள் இல்லாமை மற்றும் பிற காரணங்களால் திட்டத்தினை செயல்படுத்த இயலாமல் அப்பிரிவு விவசாயிகளுக்குத் திட்டப் பலன்கள் சென்றடைய முடியாத நிலை ஏற்படின், முந்தைய 4 ஆண்டுகளில் தேர்வு செய்யப்பட்ட கிராமப் பஞ்சாயத்துக்களில் உள்ள அதே பிரிவு விவசாயிகளுக்கு திட்டப் பலன்களை வழங்கிட அனுமதி வழங்குமாறும்,

xli. இத்திட்டப் பலன்கள் பழங்குடியின விவசாயிகள் முழுமையாக பயனடையும் வகையில், Forest Right Act (FRA) பட்டாதாரர்களுக்கும் (அடங்கல் இல்லாத போதிலும்) திட்டப் பலன்களை வழங்கிட அனுமதி வழங்குமாறும்,

xlii. இத்திட்டத்தில் உள்ள இனங்களை செயல்படுத்தும் போது கள நிலவரத்திற்கு ஏற்றவாறு வழிகாட்டு நெறிமுறைகளில் மாற்றங்கள் செய்து கொள்ள சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்குமாறும்,

xliii. இத்திட்டத்தின் பயன்கள் விவசாயிகளுக்கு விரைந்து சென்றடைய நிதி செலவினம் செய்வதற்கு ஏதுவாக 309-03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை கணக்குத் தலைப்பின் கீழ் நிதியினை தலைமைப்பொறியாளர் (வே.பொ) அவர்கள் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மற்றும் சர்க்கரைத்துறை ஆகிய துறைகளுக்கு திட்ட செலவினங்களுக்கு பெற்று வழங்க வேண்டியுள்ளதால் IFHRMS -இல் காலாண்டு நிதி கட்டுப்பாட்டினைத் தளர்வு செய்து (Quarterly control relaxation) ஆணை வழங்குமாறும், வேளாண்மை இயக்குநர் அவர்கள் அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

7. மேலும், கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தினை 2025-2026-ஆம் ஆண்டில் 2,338 கிராமப் பஞ்சாயத்துகளில் செயல்படுத்திட தேவைப்படும் துறை வாரியான, மற்றும் இன வாரியான திட்டப்பணிகளுக்கான நிதி ஒதுக்கீட்டினை கீழ்க்கண்டவாறு வழங்குமாறு வேளாண்மை இயக்குநர் அவர்கள் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்:-

**அட்டவணை-அ**

**வேளாண்மைத் துறை**

| வ. எண் | பணியின் விபரம் | ஒரு அலகு தொகை ரூபாய் | அலகு | பொருள் | நிதி (ரூ. கோடி) | உப கணக்குத் தலைப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றுதல் | | | | | |
| அ | தொகுப்பில் உள்ள விவசாயிகளின் தரிசு நிலங்களில் முட்புதர்களை அகற்றி சமன் செய்து உழுதல் | 50 % மானியம் அல்லது எக்டருக்கு ரூ.9,600/- இதில் எது குறைவோ | எக்டர் | 200 | 0.1920 | 311- 01 - தனித் திட்ட மானியம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆ | தனிப்பட்ட விவசாயிகளின் தரிசு நிலங்களில் முட்புதர்களை அகற்றி சமன் செய்து உழுதல் | 50 % மானியம் அல்லது எக்டருக்கு ரூ.9,600/- இதில் எது குறைவோ | எக்டர் | 7,500 | 7.2000 | 311- 01 - தனித் திட்ட மானியம் |
| 2 | வரப்புகளில் பயறு சாகுபடியை ஊக்குவித்தல் | 50 % மானியம் அல்லது எக்டருக்கு ரூ.300/- இதில் எது குறைவோ | எக்டர் | 1,00,000 | 3.0000 | 311- 01 - தனித் திட்ட மானியம் |
| 3 | நன்மை பயக்கும் நுண்ணுயிர்களை பெருக்கி மண்வளத்தை மேம்படுத்துவதற்கான செயல்விளக்கத் திடல்கள் அமைத்தல் | 50 % மானியம் அல்லது எக்டருக்கு ரூ.450/- இதில் எது குறைவோ | எக்டர் | 1,00,000 | 4.5000 | 311- 01 - தனித் திட்ட மானியம் |
| 4 | விசைத் தெளிப்பான் விநியோகம் (Battery/ Power operated) | 50 % மானியம் அல்லது ஒரு அலகிற்கு ரூ.3,000/- இதில் எது குறைவோ | எண்கள் | 7,000 | 2.1000 | 311- 01 - தனித் திட்ட மானியம் |
| 5 | தொகுப்புகளைப் பதிவு செய்தல் | ரூ.7000/- தொகுப்பு | எண்கள் | 50 | 0.0350 | 305-02- ஏனைய சில்லறை செலவுகள் |
| 6 | **கிராம அளவில்** | | | | | |
| அ | விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் கையேடு தயாரித்தல் | கிராமம் ஒன்றிற்கு ரூ.500/- வீதம் | கிராமங்கள் | 2,338 | 0.1169 | 305-02- ஏனைய சில்லறை செலவுகள் |
| ஆ | தகவல், கல்வி மற்றும் தகவல் பரிமாற்றம், முகாம் நடத்துதல், ஆவணப்படுத்துதல் | கிராமம் ஒன்றிற்கு ரூ.2500/- வீதம் | கிராமங்கள் | 2,338 | 0.5845 | 305-02- ஏனைய சில்லறை செலவுகள் |
| 7 | **மாவட்ட அளவில்** | | | | | |
| அ | மாவட்ட அளவிலான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் | மாவட்டம் ஒன்றிற்கு ரூ.5,000/- வீதம் | மாவட்டங்கள் | 37 | 0.0185 | 305-02- ஏனைய சில்லறை செலவுகள் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆ | மாவட்ட அளவிலான விளம்பரம், திட்ட செயலாக்கம், ஆவணப்படுத்துதல், ஆய்வுக் கூட்ட செலவினம் மற்றும் சில்லரை செலவினங்கள் | மாவட்டம் ஒன்றிற்கு ரூ.15,000/- வீதம் | மாவட்டங்கள் | 37 | 0.0555 | 305-02- ஏனைய சில்லறை செலவுகள் |
| 8 | **மாநில அளவில்** | | | | | |
| அ | திட்ட செயலாக்கம், விளம்பரம், ஆவணப்படுத்துதல், ஆய்வுக் கூட்ட செலவினம் மற்றும் சில்லரை செலவினங்கள் | ஒட்டு மொத்தம் | | | 0.0200 | 305-02- ஏனைய சில்லறை செலவுகள் |
| 9 | மின்சாரக் கட்டணங்கள் | ஒட்டு மொத்தம் | | | 2.0000 | 305 – 03 மின்சாரக் கட்டணங்கள் |
| | | | | **வேளாண்மைத் துறையின் மொத்தம்** | **19.8224** | |

## அட்டவணை-ஆ
## தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை

| வ. எண் | பணியின் விபரம் | ஒரு அலகு தொகை ரூபாய் | அலகு | பொருள் அலகுகள் | நிதி (ரூ. கோடி) | உப கணக்குத் தலைப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | பல்லாண்டு தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு விரிவாக்கம் (மா, கொய்யா, சப்போட்டா, கொடுக்காப்புளி, நாவல், சீத்தா, எலுமிச்சை, புளி, போன்றவை) | ரூ.60,000/-மொத்த செலவினத்தில், 50 சதவீத தொகையில், முதலாமாண்டில் 60 சதவீத மானியமாக எக்டர் ஒன்றிற்கு ரூ. 18,000/- | எக்டர் | 3,000 | 5.4000 | 311- 01 - தனித் திட்ட மானியம் |
| 2 | சந்தைகளில் காய்கறிகள் வரத்தினை அதிகரிக்க காய்கறி சாகுபடியை ஊக்குவித்தல் | எக்டர் ஒன்றுக்கு 75 சதவீதம் மானியமாக ரூ. 7,500/- | எக்டர் | 3000 | 2.2500 | 311- 01 - தனித் திட்ட மானியம் |
| 3 | ஊட்டச்சத்து தன்னிறைவை மேம்படுத்த பழச்செடி தொகுப்புகள் வழங்குதல் (போக்குவரத்து செலவினம் உட்பட) | ரூ. 200/- மதிப்பிலான 5 வகை பழச்செடிகள் அடங்கிய தொகுப்பிற்கு 100 சதவீத மானியம் | எண்கள் | 4,70,000 | 9.4000 | 311- 01 - தனித் திட்ட மானியம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | தென்னங் கன்றுகள் விநியோகம் | நெட்டை தென்னங்கன்று ஒன்றுக்கு ரூ.65 வீதம் (2 கன்றுகள் x ரூ.65 x 150 பண்ணைக் குடும்பம் x 2,338 கிராமங்கள்) – 100% மானியம் | எண்கள் | 7,01,400 | 4.5591 | 311- 01 - தனித் திட்ட மானியம் |
| 5 | திட்ட செயலாக்கம் மற்றும் ஆவணப்படுத்துதல் | - | | | 0.050 | 305-02- ஏனைய சில்லறை செலவுகள் |
| | தோட்டக்கலைத் துறையின் மொத்தம் | | | | 21.6591 | |

## அட்டவணை-இ
## வேளாண்மைப் பொறியியல் துறை

| வ. எண் | பணியின் விபரம் | சராசரி அலகுத் தொகை (ஒன்றிற்கு) | அலகு | பொருள் அலகுகள் | நிதி (ரூ. கோடி) | உப கணக்குத் தலைப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | தொகுப்பிலுள்ள விவசாயக் குழுக்களுக்கு நீர் ஆதாரங்களை உருவாக்குதல் | ரூ.9 இலட்சம் / தொகுப்பிற்கு | எண்கள் | 50 | 4.5000 | 309-03- குறிப்பிட்ட திட்டங்களுக் கான உதவித் தொகை |
| 2 | தனிப்பட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகளுக்கு கிணறுகள் (ஆழ்துளை அல்லது குழாய்க் கிணறுகள்) அமைத்தல் | ரூ.8 இலட்சம்/ எண்ணிற்கு | எண்கள் | 500 | 40.0000 | 309-03- குறிப்பிட்ட திட்டங்களுக் கான உதவித் தொகை |
| 3 | பண்ணைக் குட்டைகள் அமைத்தல் | ரூ.1.4 இலட்சம்/ எண்ணிற்கு | எண்கள் | 600 | 8.4000 | 309-03- குறிப்பிட்ட திட்டங்களுக் கான உதவித் தொகை |
| 4 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சிறுபாசன குளங்கள், ஊருணிகள், குளங்கள், வரத்து கால்வாய்கள் மற்றும் இதர நீர் சேகரிப்பு கட்டுமானங்களை தூர்வாரி மேம்படுத்துதல் | ரூ.1 இலட்சம்/ எண்ணிற்கு | எண்கள் | 2000 | 20.0000 | 309-03- குறிப்பிட்ட திட்டங்களுக் கான உதவித் தொகை |

| வ. எண் | பணியின் விபரம் | சராசரி அலகுத் தொகை (ஒன்றிற்கு) | அலகு | பொருள் அலகுகள் | நிதி (ரூ. கோடி) | உப கணக்குத் தலைப்பு |
|---|---|---|---|---|---|---|
| 5 | நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள் அமைத்தல் | ரூ.0.5 இலட்சம்/ எண்ணிற்கு | எண்கள் | 150 | 0.7500 | 309-03-குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை |
| 6 | நிர்வாக செலவினங்கள் | | | | 0.0200 | 305-02-ஏனைய சில்லறைச் செலவுகள் |
| | **வேளாண்மைப் பொறியியல் துறையின் மொத்தம்** | | | | 73.6700 | |

**அட்டவணை-ஈ**

**வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை**

| வ. எண் | பணியின் விபரம் | மானியவிபரம் | மொத்த அலகுகள் | நிதி (ரூ.கோடி) | உப கணக்குத் தலைப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | பண்ணை வழி வர்த்தகத்தை ஊக்குவித்திட உலர்களத்து டன் கூடிய தரம் பிரிப்பு கூடங்கள் | 100% மானியம். ஒரு அலகிற்கு ரூ.38.50 இலட்சம் | 400 எண்கள் | 154.0000 | 309-03-குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை |
| | **வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் மொத்தம்** | | | 154.0000 | |

**அட்டவணை- உ**

**சர்க்கரைத்துறை**

| வ. எண் | பணியின் விபரம் | மானிய விபரம் | மொத்த அலகுகள் | நிதி (ரூ.கோடியில்) | உப கணக்குத் தலைப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | பருசீவல் நாற்றுக்கள் விநியோகம் | 50 சதவீத மானியமாக எக்டர் ஒன்றிற்கு ரூ. 15,625/- | 200 எக்டர் | 0.3125 | 309-03-குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை |
| 2 | ஒருபரு விதைக் கரணைகள் விநியோகம் | 50 சதவீத மானியமாக எக்டர் ஒன்றிற்கு ரூ. 5,000/- | 90 எக்டர் | 0.0450 | 309-03-குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை |
| | **மொத்தம்** | | | 0.3575 | |

8. மேலே ஏழாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர், கடந்த ஆண்டுகளில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பழச்செடி தொகுப்புகள் 75 சதவீத மானியத்தில் வழங்கப்பட்டதைப் போன்று இவ்வாண்டும் 4,70,000 எண்கள் பழச்செடி தொகுப்புகளை 75 சதவீத மானியத்தில் வழங்குவதற்கு ஒப்புதல் வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

9. மேற்காணும் வேளாண்மை இயக்குநர் மற்றும் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் ஆகியோர்களின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலித்து, பின்வரும் இனங்களின் மீது கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடுகிறது:-

I. நடப்பு 2025-2026 ஆம் ஆண்டில் "கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தினை" ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினால் 2025-2026 ஆம் ஆண்டில் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் செயல்படுத்திட தேர்வு செய்யப்பட்ட 2,338 கிராம பஞ்சாயத்துகளில் ஒருங்கிணைத்து செயல்படுத்த அனுமதி வழங்கியும்,

II. 2025-2026-இல் மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தினை ஒருங்கிணைத்து செயல்படுத்திட வேளாண்மைத் துறைக்கு ரூ. 19.8224 கோடியும், வேளாண்மைப் பொறியியல் துறைக்கு ரூ.73.67 கோடியும், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறைக்கு ரூ.19.3091 கோடியும், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறைக்கு ரூ.154.00 கோடியும் மற்றும் சர்க்கரைத்துறைக்கு ரூ.0.3575 கோடியும் ஆக மொத்தம் ரூ.267.159 கோடியை மாநில நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கியும்,

III. 2021-2022 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண். 255, வேளாண்மை - உழவர் நலத் (வஇபதி) துறை, நாள். 25.10.2022-இல் இத்திட்டத்தின் கீழ் தரிசு நிலத் தொகுப்புகளின் மேம்பாட்டிற்காக அமைக்கப்படும் ஆழ்துளை/ குழாய்/திறந்தவெளிக் கிணறுகளுக்கு மின் இணைப்புகள் வழங்குவது தொடர்பாக ஆணை வெளியிடப்பட்டது. அதன்படி தரிசு நிலத் தொகுப்புகள் மற்றும் அத்தரிசு நிலத் தொகுப்புகளை ஒட்டியுள்ள புறம்போக்கு நிலங்களில் அமைக்கப்படும் ஆழ்துளை / குழாய் / திறந்தவெளி கிணறுகளுக்கு தட்கல் (TATKAL- Self Financing Scheme) திட்டத்தின் கீழ் ஆண்டு ஒன்றிற்கு அதிகபட்சமாக 2,000 மின் இணைப்புகள் வரை வழங்க அனுமதி வழங்கியும்,

IV. வேளாண்மைத் துறையால் கண்டறியப்படும் தரிசு நிலத் தொகுப்புகளுக்கு வேளாண்மை உதவி இயக்குநர் பதவியின் பெயரிலும், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையால் கண்டறியப்படும் தொகுப்புகளுக்கு தோட்டக்கலை உதவி இயக்குநர் பதவியின் பெயரிலும் விண்ணப்பித்து மின்இணைப்பு

பெற அனுமதி வழங்கியும், மேற்கண்டவாறு வழங்கப்படும் மின் இணைப்புகளுக்கு மின் அளவீட்டுக் கருவி பொருத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடனும் மற்றும் தரிசு நிலத் தொகுப்பிற்கு வழங்கப்பட்ட விவசாய மின்இணைப்புகளுக்கான மின் நுகர்வுக் கட்டணமானது மாண்புமிகு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயித்துள்ள மின்கட்டண விகிதத்தின்படி (Tariff Order) கணக்கிடப்பட அனுமதி வழங்கியும்,

V. மேலும், மின்சாரக் கட்டணத்தைப் பொருத்தமட்டில் 2021-22, 2022-23, 2023-24, 2024-25 மற்றும் நடப்பு 2025-26 ஆம் ஆண்டுகளில் பெறப்பட்ட/பெறப்படவுள்ள மின் இணைப்புகளுக்கான நுகர்வு கட்டணம் இந்த நிதியாண்டின் தேவையை இறுதி செய்யும் பொழுது கூடுதல் நிதித்தேவை ஏற்படின் RE/FMA-இல் நிதி வழங்கும் பொருட்டு தனியான கருத்துரு பின்னர் சமர்ப்பிக்க அனுமதி வழங்கியும்,

VI. வேளாண்மைத்துறை மூலமாக இத்திட்டத்தினைத் செயல்படுத்திட ரூ.19.8224 கோடியினை இவ்வரசாணையின் இணைப்பு I-ல் உள்ள அட்டவணை அ-ன் படி வேளாண்மை இயக்குநர் அவர்கள் செலவினம் மேற்கொள்ள உரிய அனுமதி வழங்கியும், திட்ட செயலாக்கத்தின் போது கள நிலவரத்தின் தேவைக்கேற்ப இனங்களின் நிதி இலக்கினை மிகாமல் பொருள் இலக்கினை மாற்றி அமைத்துக்கொள்ளவும் மற்றும் ஒரு இனத்திலிருந்து மற்றொரு இனத்திற்கு 20 சதவீதம் வரை தேவைக்கேற்ப பொருள் மற்றும் நிதி இலக்கினை மாற்றியமைத்துக் கொள்ளவும் வேளாண்மை இயக்குநருக்கு அனுமதி அளித்து அது தொடர்பான செயல் வழிகாட்டு நெறிமுறைகளை (Executive Guidelines) வேளாண்மை இயக்குநர் அவர்களே மாற்றி அமைத்துக்கொள்ளஅனுமதி வழங்கியும்,

VII. 2025-2026 ஆம் ஆண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் 2,338 கிராம பஞ்சாயத்துக்களில் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களின்படி விவசாயிகளுக்கு திட்ட இனங்களை செயல்படுத்த இயலாதவாறு போதிய எண்ணிக்கையில் பயனாளிகள் இல்லாத பட்சத்தில் அக்கிராமங்களுக்கென வழங்கப்பட்ட இலக்கினை நடப்பு ஆண்டில் அதே வட்டாரத்தில் தேர்வு செய்யப்பட்ட பிற கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்ட கிராம பஞ்சாயத்துக்களில் இலக்கினை மாற்றி அமைத்து திட்டத்தினை செயல்படுத்திட சம்பந்தப்பட்ட வட்டார வேளாண்மை - உழவர் நலத்துறை அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்க அனுமதி வழங்கியும்,

VIII. மேலும், அந்த வட்டாரத்திற்குள்ளும் `போதிய விவசாயிகள் இல்லாத பட்சத்தில் அந்த மாவட்டத்திற்குள் தேர்வு செய்யப்பட்ட பிற கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்ட கிராம பஞ்சாயத்துக்களில் அவ்வினங்களை மாற்றி அமைத்துக்கொள்ள சம்பந்தப்பட்ட மாவட்ட வேளாண்மை- உழவர் நலத்துறை அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்க அனுமதி வழங்கியும்,

IX. அதற்கும் மேலாக அவ்வினத்தின் இலக்கினை மாவட்டத்திற்குள் செயல்படுத்த இயலாத நிலை ஏற்படும்போது அவ்விலக்கினை மாநிலத்திற்குள் வேறு சில மாவட்டத்தில் உள்ள பிற கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்ட கிராமப் பஞ்சாயத்துக்களில் மாற்றம் செய்துகொள்ள வேளாண்மைத் துறை இயக்குநருக்கு / தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநருக்கு / தலைமைப் பொறியாளருக்கு (வே.பொ) / சர்க்கரைத்துறை இயக்குநருக்கு மற்றும் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநருக்கு அனுமதி வழங்கியும்,

X. நீலகிரி மாவட்டம், திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கொடைக்கானல் வட்டாரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள வெள்ளிமலை வட்டாரம் ஆகிய பகுதிகளில் வேளாண்மைத் துறைக்கான அலுவலகங்கள் இல்லாததால் அப்பகுதிக்கு ஒதுக்கப்பட்ட வேளாண்மைத் துறையின் திட்டங்களின் இலக்குகளை சம்பந்தப்பட்ட தோட்டக்கலைத் துறையின் அலுவலகங்கள் மூலம் செயல்படுத்திட அனுமதி வழங்கியும், இப்பகுதிக்குத் தேவையான இடுபொருட்கள் கொள்முதல் பணிகள், நிதி செலவினம் நீலகிரி மாவட்டத்திற்காக வேளாண்மை இணை இயக்குநர், கோயம்புத்தூர் அவர்கள், கொடைக்கானல் வட்டாரத்திற்காக வேளாண்மை இணை இயக்குநர், திண்டுக்கல் அவர்கள் மற்றும் வெள்ளிமலை வட்டாரத்திற்காக வேளாண்மை இணை இயக்குநர், கள்ளக்குறிச்சி அவர்கள் மூலமாக மேற்கொள்ள அனுமதி வழங்கியும், மேலும் இப்பகுதிகளுக்கான பயனாளிகள் தேர்வு மற்றும் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும் பணிகள் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலமாகவும் மேற்கொள்ள அனுமதி வழங்கியும்,

XI. தரிசு நிலங்களைப் பதிவு செய்வதற்கான செலவினம் மேற்கொள்ளத் தேவையான நிதி வேளாண்மைத் துறைக்கு மட்டுமே திட்டத்தில் ஒதுக்கீடு செய்யக் கோரப்பட்டுள்ள நிலையில், கிராமப் பஞ்சாயத்துக்களில் தரிசு நிலத் தொகுப்புகளை அமைக்கும் பணிகளை தோட்டக்கலைத் துறை, விதைச்சான்று துறை, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் மூலம் நியமிக்கப்பட்ட பொறுப்பு அலுவலர்கள் (Nodal Officers) மேற்கொள்ளும் போது தரிசு நிலத் தொகுப்புகளை பதிவு செய்வதற்கான செலவினங்களை அந்தந்த துறையின் பொறுப்பு அலுவலர்களே (கிராமப் பஞ்சாயத்துக்களில் தரிசு நிலத் தொகுப்புகளை அமைக்கும் பணிகளை தோட்டக்கலைத் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண்மை வணிகத் துறையின் மூலம் நியமிக்கப்பட்ட பொறுப்பு அலுவலர்கள்) மேற்கொள்ளவும் அவ்வாறான செலவினத் தொகையினை உரிய ஆவணங்களை சமர்ப்பித்து சம்பந்தப்பட்ட வட்டார வேளாண்மை உதவி இயக்குநரிடமிருந்து மீள பெற்றுக் கொள்ள அனுமதி வழங்கியும்,

XII. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலம் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்களுக்கான ரூ.19.3091 கோடி

நிதியினை, இவ்வரசாணையின் இணைப்பு I-ல் உள்ள அட்டவணை-ஆ-வில் தெரிவித்துள்ளபடி, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்கள், செலவினம் மேற்கொள்ள அனுமதி வழங்கியும், திட்ட செயலாக்கத்தின் போது கள நிலவரத்தின் தேவைக்கேற்ப இனங்களின் நிதி இலக்கிற்கு மிகாமல் பொருள் இலக்கினை மாற்றி அமைத்துக்கொள்ளவும் மற்றும் ஒரு இனத்திலிருந்து மற்றொரு இனத்திற்கு 20 சதவீதம் வரை தேவைக்கேற்ப பொருள் மற்றும் நிதி இலக்கினை மாற்றியமைத்துக் கொள்ளவும் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநருக்கு அனுமதி அளித்து அது தொடர்பான செயல் வழிகாட்டு நெறிமுறைகளை (Executive Guidelines) தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்களின் இயக்குநர் அவர்களே மாற்றி அமைத்துக்கொள்ள அனுமதி வழங்கியும்,

XIII. வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்களுக்கான ரூ.73.67 கோடி நிதியினை, இவ்வரசாணையின் இணைப்பு I-ல் உள்ள அட்டவணை-இ-இல் தெரிவித்துள்ளபடி, தலைமைப் பொறியாளர் (வே.பொ), வேளாண்மைப் பொறியியல் துறை அவர்கள் செலவினம் மேற்கொள்ள அனுமதி வழங்கியும், திட்ட செயலாக்கத்தின் போது கள நிலவரத்தின் தேவைக்கேற்ப இனங்களின் நிதி இலக்கிற்கு மிகாமல் பொருள் இலக்கினை மாற்றி அமைத்துக் கொள்ள தலைமைப் பொறியாளர் (வே.பொ), வேளாண்மைப் பொறியியல் துறை அவர்களுக்கு அனுமதி அளித்து அது தொடர்பான செயல் வழிகாட்டு நெறிமுறைகளை (Executive Guidelines) தலைமைப் பொறியாளர் (வே.பொ), வேளாண்மைப் பொறியியல் துறை அவர்களே மாற்றி அமைத்துக்கொள்ள அனுமதி வழங்கியும்,

XIV. தொகுப்பில் உள்ள விவசாயக் குழுக்களுக்கு நீர் ஆதாரங்களை உருவாக்குதல் இனத்தின் கீழ் வேளாண்மை/ தோட்டக்கலை/ வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறைகளின் மூலம் கள ஆய்வின் அடிப்படையில் மொத்தமாக 50 தொகுப்புகள் உருவாக்கப்படலாம் என்ற நோக்கத்தில், நிலநீர் ஆய்வு மற்றும் நீர் மாதிரி ஆகியவற்றின் அடிப்படையில் நீர் ஆதாரங்களை உருவாக்குதல் மற்றும் வேளாண்மைப் பொறியியல் துறை சார்ந்த இதர பணிகளும் செயல்படுத்தப்படும் நிலையில், அரசாணை எண். 142, பொதுப் பணித் (R2) துறை, தேதி: 23.07.2014-இல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை தளர்வு செய்து மித அபாயகரமான நுகர்வு, அபாயகரமான நுகர்வு மற்றும் அதிநுகர்வு குறுவட்டங்களில் தலைமைப் பொறியாளர் (மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம்) அவர்களின் கடித எண்:OT9/AG-V/scheme/2022, நாள் 15.02.2022-இல் அளித்துள்ள குறிப்புரையின்படி கிணறுகளுக்கான இடைவெளி விதிமுறைகள் பின்பற்றுதல், தேவையான நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள் ஏற்படுத்துதல் மற்றும் கண்காணிப்பு கிணறுகள் அமைத்தல் போன்றவற்றை தவறாமல் பின்பற்ற வேண்டுமென்ற நிபந்தனையின் அடிப்படையில் - இதனை சிறப்பு நிகழ்வாகக் கருதி பாதுகாப்பான குறுவட்டங்கள் உட்பட இதர குறுவட்டங்களிலும் கிணறுகள் அமைக்க சிறப்பு அனுமதி வழங்கியும்,

XV. தொகுப்பிலுள்ள விவசாயக் குழுக்களுக்கு நீர் ஆதாரங்களை உருவாக்குதல் இனத்தின் கீழ் மணற்பாங்கான மற்றும் வண்டல் மண் பகுதிகளில் குழாய்க் கிணறுகளும் (Tubewell), கடினப் பாறைப் பகுதிகளில் ஆழ்துளைக் கிணறுகளும் (Borewell) மற்றும் திறந்தவெளிக் கிணறுகளும் (Openwell) நில நீர் ஆய்வின் அடிப்படையில் அமைக்கப்படுகிறது. எனவே, தொகுப்புகளில் அமைக்கப்படும் கிணறுகளுக்கு மண்ணின் தன்மைக்கு ஏற்ப கிணற்றின் ஆழம் மற்றும் வகை மாறுபடுவதால் அவற்றிற்கான செலவும் மாறுபடுவதால், அதற்கேற்றவாறு இவ்வினத்தின் சராசரி அலகுத் தொகையினில் மாற்றம் செய்து கொள்ள தலைமைப் பொறியாளர் (வே.பொ), சென்னை அவர்களுக்கு அனுமதி வழங்கியும்,

XVI. மேலும், இத்திட்டத்தினை வேளாண்மைப் பொறியியல் துறை செயல்படுத்தப்படும்போது, கிணறுகள் அமைக்கும் பணியில் உள்ள உபஇனங்களில் (ஆழ்துளை/ குழாய்க் கிணறு) நிலநீர் ஆய்வு அறிக்கை அடிப்படையில் கிடைக்கக்கூடிய நீரின் அளவைப் பொறுத்து (Well yield) ஆழ்துளை/ குழாய்க் கிணறு தேவையின் அடிப்படையில் கிணறுகளின் எண்ணிக்கையில் மாற்றம் செய்துகொள்ள தலைமைப் பொறியாளர் (வே.பொ), வேளாண்மைப் பொறியியல் துறை அவர்களுக்கு அனுமதி வழங்கியும்,

XVII. நிலநீர் ஆய்வின் அடிப்படையில் கண்டறியப்படும் திறந்தவெளிக் கிணறுகள் அமைக்கும் பணிகள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலமாக ஒருங்கிணைந்து செயல்படுத்திடவும், பணிகள் முடிக்கப்பட்ட பின் நீரிறைக்கும் அமைப்பு (மின்/ சூரிய சக்தி) மற்றும் இதர பணிகள் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலமாக கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதி வழங்கியும்,

XVIII. பாதுகாப்பான குறுவட்டங்களில் அமைக்கப்படும் கிணறுகளுக்கு, சூரிய சக்தி மூலம் இயங்கும் பம்புசெட்டுகள் உத்தேசிக்கப்படும் இடங்களில், முதலமைச்சரின் சூரிய சக்தி பம்புசெட்டுகள் திட்ட நிதியினை ஒருங்கிணைத்தும், இதர குறுவட்டங்களில் அமைக்கப்படும் கிணறுகளுக்கு, சூரிய சக்தி மூலம் இயங்கும் பம்புசெட்டுகளுக்கு கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட நிதியிலிருந்தும் செயல்படுத்திட அனுமதி வழங்கியும், மேலும், முதலமைச்சரின் சூரிய சக்தி பம்புசெட்டுகள் திட்ட ஒதுக்கீடு முடிவுற்றால், சூரிய சக்தி மூலம் இயங்கும் பம்புசெட்டுகள் உத்தேசிக்கப்படும் இடங்களில் கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட நிதியிலிருந்து முழுவதுமாக செயல்படுத்திட அனுமதி வழங்கியும்,

XIX. கிணறுகளுக்கு மின்சக்தி மூலம் இயங்கும் மின் மோட்டார் பம்புசெட்டுகள் அமைக்க உத்தேசிக்கப்படும் இடங்களுக்கு, சம்பந்தப்பட்ட உதவி வேளாண்மை இயக்குநர்/ உதவி தோட்டக்கலை இயக்குநர் அவர்களின் பெயரில் தட்கல் மின் இணைப்பு பெற தேவையான நிதியினை இத்திட்டத்திலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வழங்கியும்,

XX. இத்திட்டத்தின் மூலம் உருவாக்கப்படும் கிணறுகளுக்கு மின்/ சூரிய சக்தி மூலம் நீர் இறைக்கும் அமைப்பு உருவாக்கப்பட்டபின், பாசன நீர் விநியோகக் குழாய்கள் மற்றும் சொட்டு நீர்ப்பாசன அமைப்புகளை வேளாண்மை/ தோட்டக்கலைத் துறையின் மூலம் ஏற்படுத்திட தொகுப்புகளின் விபரங்களை சம்பந்தப்பட்ட துறைகளிடம் ஒப்படைக்க அனுமதி வழங்கியும்,

XXI. தனிப்பட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினரால் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் 2025-26 ஆம் ஆண்டு பணி மேற்கொள்ள தேர்வு செய்யப்பட்ட 2,338 பஞ்சாயத்து கிராமங்களில் 400 பயனாளிகள் பயன்பெறும் வகையில் மின் சக்தி அல்லது சூரிய சக்தி மூலம் இயங்கும் பம்புசெட்டுடன் கிணறுகள் (ஆழ்துளை/ குழாய்க் கிணறு) அமைத்திட அனுமதி வழங்கியும், மேலும், கடந்த 2021-22 ஆம் ஆண்டு முதல் 2024-25 ஆம் ஆண்டு வரை இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட கிராமப் பஞ்சாயத்துகளில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகளின் தேவைகளை கருத்தில் கொண்டு அவற்றினைப் பூர்த்தி செய்யும் வகையில் 100 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகள் பயன்பெறும் வகையில் இப்பணிகளை மேற்கொள்ள அனுமதி வழங்கியும், இத்திட்டத்தின் மூலம் உருவாக்கப்படும் கிணறுகளுக்கு மின்/ சூரிய சக்தி மூலம் நீர் இறைக்கும் அமைப்பு உருவாக்கப்பட்ட பின், பாசன நீர் விநியோகக் குழாய்கள் மற்றும் சொட்டு நீர்ப்பாசன அமைப்புகளை வேளாண்மைத் துறை/ தோட்டக்கலைத் துறையின் மூலம் ஒருங்கிணைத்து ஏற்படுத்திட ஏதுவாக விபரங்கள் சம்பந்தப்பட்ட துறைகளிடம் ஒப்படைக்க அனுமதி வழங்கியும்,

XXII. மழைநீரை விளைநிலங்களிலேயே சேமிக்க பண்ணைக் குட்டைகள் அமைக்கும் இனத்தின் கீழ், விவசாயிகளின் நிலங்களில் தேவைக்கேற்ற அளவில் அதிகபட்சமாக ஒரு பண்ணைக் குட்டைக்கு ரூ.1.40 இலட்சம் செலவில் 100 சதவீத மானியத்துடன் பண்ணைக்குட்டைகள் அமைத்திட அனுமதி வழங்கியும்,

XXIII. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சிறுபாசனக் குளங்கள், ஊருணிகள், குளங்கள், வரத்துக் கால்வாய்கள் மற்றும் இதர நீர் சேகரிப்புக் கட்டுமானங்களைத் தூர்வாரி மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ள இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்திட அனுமதி வழங்கியும்,

XXIV. கடந்த 2021-22 ஆம் ஆண்டு முதல் 2024-25 ஆம் ஆண்டு வரை மற்றும் 2025-26 ஆம் ஆண்டு தொகுப்புகளில் அமைக்கப்பட்ட/ அமைக்கப்படும் சமுதாய ஆழ்துளை/ குழாய்/ திறந்தவெளிக் கிணறுகளில் சாத்திய கூறுகள் உள்ள இடங்களையும், 2025-26 ஆம் ஆண்டில் தனிப்பட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகளுக்கு அமைக்கப்படும் ஆழ்துளை/ குழாய்க் கிணறுகளில் சாத்திய

கூறுகள் உள்ள இடங்களையும் தேர்வு செய்து, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் வடிவமைக்கப்பட்டுள்ள குறைந்த செலவிலான நிலத்தடி நீர் செறிவூட்டும் கட்டமைப்புகளை அமைக்க அனுமதி வழங்கியும், மேலும், கலைஞர் திட்டத்தின் கீழ் ஆழ்துளை/ குழாய்/ திறந்தவெளிக் கிணறுகளில் 50 நீர் செறிவூட்டும் கட்டமைப்புகளும், தனிப்பட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகளுக்கு அமைக்கப்படும் ஆழ்துளை/ குழாய்க் கிணறுகளில் 100 நீர் செறிவூட்டும் கட்டமைப்புகளும் அமைக்க அனுமதி வழங்கியும்,

XXV. வரும் 2025-2026 ஆம் ஆண்டின் நிதி வரவு செலவு திட்டத்தின்படி, வேளாண்மைப் பொறியியல் துறைக்கு 2401-00-113-AK-30903 கணக்குத் தலைப்பின் கீழ் ரூ.126.384 கோடி, 2401-00-113-AK-30502 கணக்குத் தலைப்பின் கீழ் ரூ.0.02 கோடி, 2401-00-789-AO-30903 கணக்குத் தலைப்பின் கீழ் ரூ.30.0162 கோடி, 2401-00-796-JP-30903 கணக்குத் தலைப்பின் கீழ் ரூ.1.5798 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எனினும், வேளாண்மைப் பொறியியல் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மற்றும் சர்க்கரைத் துறைகளின் இத்திட்டதிற்கான மொத்த நிதி தேவை, 2401-00-113-AK-30903 கணக்கு தலைப்பின் கீழ் ரூ.156.034 கோடியும், 2401-00-789-AO-30903 கணக்குத் தலைப்பின் கீழ் ரூ.69.9879 கோடியும் மற்றும் 2401-00-796-JP-30903 கணக்குத் தலைப்பின் கீழ் ரூ.1.9856 கோடியும் தேவைப்படுகிறது. எனவே, 2401-00-113-AK-30903 கணக்குத் தலைப்பின் கீழ் கூடுதலாகத் தேவைப்படும் நிதி ரூ.29.65 கோடியினையும், 2401-00-789-AO-30903 கணக்குத் தலைப்பின் கீழ் கூடுதலாகத் தேவைப்படும் நிதி ரூ.39.9717 கோடியினையும், 2401-00-796- JP-30903 கணக்குத் தலைப்பின் கீழ் கூடுதலாகத் தேவைப்படும் நிதி ரூ.0.4058 கோடியினையும் கூடுதலாக வழங்கியும்,

XXVI. 2025-2026 ஆம் ஆண்டில் இத்திட்டம் செயல்படுத்த தேர்ந்தெடுக்கப்பட்ட 2,338 கிராம பஞ்சாயத்துகளில் வேளாண்மைப் பொறியியல் துறை செயல்படுத்தும் இனங்களில் செயல் இலக்கிற்கான தகுதியான பயனாளிகள்/ இடங்களைத் தேர்வு செய்ய முடியாத போது, கடந்த 2021-22 ஆம் ஆண்டு முதல் 2024-25 ஆம் ஆண்டு வரை இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட 10,187 கிராம பஞ்சாயத்துகளில் அவற்றினை மாற்றம் செய்து, அந்தந்த இனங்களுக்கு ஒப்பளிப்பு செய்யப்படும் நிதி இலக்கிற்கு மிகாமல் பணிகள் மேற்கொள்ள தலைமைப் பொறியாளர் (வே.பொ), வேளாண்மைப் பொறியியல் துறை அவர்களுக்கு அனுமதி வழங்கியும்,

XXVII. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மூலம் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்களுக்கான ரூ. 154.00 கோடி நிதியினை, இவ்வரசாணையின் இணைப்பு I-ல் உள்ள அட்டவணை-ஈ-இல் தெரிவித்துள்ளபடி வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை ஆணையர் அவர்கள் செலவினம் மேற்கொள்ள உரிய அனுமதி வழங்கியும்,

XXVIII. இச்செலவினத்திற்காக ரூ.154.00 கோடி நிதியினை தலைமைப் பொறியாளர் (வே.பொ), வேளாண்மைப் பொறியியல் துறை அவர்கள் தமது துறையின் கணக்குத் தலைப்பு – "2401 – 00 – 113 – AK"– உப கணக்குத் தலைப்பான "309 – 03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை"–இல் இருந்து ரூ123.20 கோடி மற்றும் 2401–00–789–AO உப கணக்குத் தலைப்பான "309 – 03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை"– இல் இருந்து ரூ.29.26 கோடி மற்றும் 2401–00–796–JP உப கணக்குத் தலைப்பான "309 – 03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை"– இல் இருந்து ரூ.1.54 கோடியினைப் பெற்று ஆணையர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை அவர்களுக்கு வழங்கிட அனுமதி வழங்கியும்,

XXIX. இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படவுள்ள உலர்களங்களுடன் கூடிய தரம் பிரிப்புக் கூடங்கள் (Drying yard with Grading & Sorting Hall) அமைக்கும் பணிகளை தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய பொறியியல் பிரிவின் மூலம் மேற்கொள்ளவும், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறைக்கு ஒதுக்கப்படும் நிதியினை தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய வைப்பு நிதியில் (TNSAMB – PD Account) வைத்து நிர்வகிக்க அனுமதி வழங்கியும்,

XXX. சர்க்கரைத்துறை மூலம் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்களுக்கான ரூ.0.3575 கோடி நிதியினை, இவ்வரசாணையின் இணைப்பு I–ல் உள்ள அட்டவணை–உ– இல் தெரிவித்துள்ளபடி சர்க்கரைத்துறை இயக்குநர் அவர்கள் செலவினம் மேற்கொள்ள உரிய அனுமதி வழங்கியும்,

XXXI. இச்செலவினத்திற்காக ரூ.0.3575 கோடி நிதியினை தலைமைப் பொறியாளர் (வே.பொ), வேளாண்மைப் பொறியியல் துறை அவர்கள் தமது துறையின் கணக்குத் தலைப்பு – "2401 – 00 – 113 – AK"– உப கணக்குத் தலைப்பான "309 – 03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை"–இல் இருந்து ரூ.0.286 கோடி மற்றும் 2401–00–789–AO உப கணக்குத் தலைப்பான "309 – 03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை"– இல் இருந்து ரூ.0.0679 கோடி மற்றும் 2401–00–796–JP உப கணக்குத் தலைப்பான "309 – 03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை"– இல் இருந்து ரூ.0.0036 கோடியினை பெற்று இயக்குநர், சர்க்கரைத்துறை அவர்களுக்கு வழங்கிட அனுமதி வழங்கியும், மேலும் இத்துறைக்காக ஒதுக்கப்படும் நிதியினை இத்திட்டத்திற்காக துவங்கப்பட்ட வங்கி கணக்கில் நிர்வகிக்க அனுமதி வழங்கியும்,

XXXII. திட்ட இனங்களை கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைப்பகுதிகளில் சர்க்கரைத்துறை – செயலாட்சியர் / தலைமை நிர்வாகிகள் மூலமாகவும், தனியார் சர்க்கரை ஆலைப்பகுதிகளில் வேளாண்மைத்துறை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்கள் மூலமாகவும் செயல்படுத்திட அனுமதி வழங்கியும், திட்ட செயலாக்கத்தின் போது கள நிலவரத்தின் தேவைக்கேற்ப இனங்களின் நிதி இலக்கிற்கு மிகாமல் பொருள் இலக்கினை மாற்றி அமைத்துக்கொள்ளவும் மற்றும் ஒரு

இனத்திலிருந்து மற்றொரு இனத்திற்கு 20 சதவீதம் வரை தேவைக்கேற்ப பொருள் மற்றும் நிதி இலக்கினை மாற்றியமைத்துக் கொள்ளவும் இயக்குநர், சர்க்கரைத்துறை அவர்களுக்கு அனுமதி அளித்து அது தொடர்பான செயல் வழிகாட்டு நெறிமுறைகளை (Executive Guidelines) இயக்குநர், சர்க்கரைத்துறை அவர்களே மாற்றி அமைத்துக்கொள்ள அனுமதி வழங்கியும்,

XXXIII. வேளாண்மை–உழவர் நலத்துறையின் கீழ் செயல்படும் வேளாண்மை மற்றும் சகோதரத்துறைகளின் திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்துவது தொடர்பான அனைத்து துறைகளுக்கான பொதுவான திட்டசெயலாக்க வழிமுறைகள் மற்றும் வேளாண்மை மற்றும் சகோரத் துறைவாரியாக மேற்கொள்ள வேண்டிய பணிகள் – வழிகாட்டு நெறிமுறைகளை இவ்வரசாணையின் இணைப்பு–(II)–ல் உள்ளவாறும், தரிசு நிலத் தொகுப்புகளுக்கான மேம்பாடு மற்றும் திட்ட செயலாக்க வழிமுறைகளை இணைப்பு–(III)–ல் உள்ளவாறும், துறை வாரியான மற்றும் இனம் வாரியான வழிகாட்டு நெறிமுறைகளை இணைப்பு–(IV)–ல் உள்ளவாறும் கடைப்பிடித்திட அனுமதி வழங்கியும்,

XXXIV. வேளாண்மை – உழவர் நலத்துறையின் மூலம் ஒன்றிய, மாநில நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் இதர திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்திட (Dovetailing of Schemes) அனுமதி வழங்கியும், அவ்வாறு ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படும் முக்கிய திட்டங்களில் 80 சதவீத திட்ட ஒதுக்கீடு (விதை, நாற்றுகள், நடவுப் பொருட்கள், உரங்கள், உயிர் உரங்கள், நுண்ணூட்டக் கலவை, அங்கக உரங்கள், உயிரி கட்டுப்பாட்டுக் காரணிகள் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசிய இனங்கள் நீங்கலாக) தேர்வு செய்யப்பட்ட கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட கிராமப் பஞ்சாயத்துக்களில் செயல்படுத்தப்பட அனுமதி வழங்கியும் மேலும், தேர்வுசெய்யப்பட்ட கிராம பஞ்சாயத்துக்களில் போதுமான அளவு பயனாளிகள் இல்லாத பட்சத்தில், நியாயமான காரணங்களினால் கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தினை அப்பஞ்சாயத்துக்களில் செயல்படுத்த இயலாத நிலையில் அவ்வொதுக்கீட்டினை பிற கிராமங்களுக்கு அளிக்கவும், ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு அந்தந்த திட்டங்களுக்காகக் கூறப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளையே கடைப்பிடித்திடவும் அனுமதி வழங்கியும்,

XXXV. இத்திட்டத்தினை சிறப்புடன் ஒருங்கிணைத்து செயல்படுத்திட மாநில அளவில் வேளாண்மை இயக்குநரும், மாவட்ட அளவில் சம்பந்தப்பட்ட வேளாண்மை இணை இயக்குநர்களும் திட்ட பொறுப்பு அலுவலர்களாக (Nodal Officer) செயல்பட அனுமதி வழங்கியும்,

XXXVI. தேர்வு செய்யப்பட்ட 2,338 கிராம ஊராட்சிகளில் விவசாயிகள் நலன் சார்ந்த அனைத்துத் துறை திட்டங்களையும் ஒருங்கிணைத்து வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கு, வேளாண்மை அலுவலர் / தோட்டக்கலை அலுவலர் / துணை வேளாண்மை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலரைத் தலைவராகவும், உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர் / உதவி விதை அலுவலர் / உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்) அவர்களை கிராம அளவிலான திட்ட பொறுப்பு அலுவலராகவும் (Nodal Officer), இதரத்துறை அலுவலர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு கிராம திட்ட செயலாக்கக் குழு ஒன்று இவ்வரசாணையின் இணைப்பு (V)ன்படி அமைத்திட அனுமதி வழங்கியும்,

XXXVII. மாவட்ட அளவில் அனைத்துத் துறை திட்டங்களையும் ஒருங்கிணைத்து, கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித்திட்டத்தினைக் கண்காணித்திட, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களைத் தலைவராகவும், வேளாண்மை இணை இயக்குநர் அவர்களை உறுப்பினர் செயலாளராகவும், இதரத்துறை அலுவலர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட மாவட்ட கண்காணிப்புக் குழு ஒன்று இவ்வரசாணையின் இணைப்பு (VI)ன்படி அமைத்திட அனுமதியும்,

XXXVIII. மாநில அளவில், இத்திட்டத்தினைக் கண்காணித்திட அரசாணை (டி) எண்.176, வேளாண்மை – உழவர் நலத் (வே.உ.2) துறை, நாள்.29.10.2021 மற்றும் அரசாணை (டி) எண்.13, வேளாண்மை – உழவர் நலத் (வே.உ.2) துறை, நாள்.27.01.2022–இல் அரசு தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் ஏற்கனவே அமைக்கப்பட்ட மாநில அளவிலான உயர்நிலைக்குழு மூலம் கண்காணிக்க அனுமதி வழங்கியும்,

XXXIX. விரிவான கிராம வேளாண் வளர்ச்சித் திட்ட அறிக்கையினை (Detailed Project Report) அரசாணை (நிலை) எண். 59, வேளாண்மை – உழவர் நலத் (வஇபதி) துறை, நாள். 09.03.2022–இல் வழங்கப்பட்ட படிவங்களில் தயாரிக்க அனுமதி வழங்கியும், மேலும் வழங்கப்பட்ட படிவங்களில் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு வேளாண்மை இயக்குநர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கியும்,

XL. நடப்பு 2025–26 ஆண்டானது இத்திட்டத்தின் இறுதி ஆண்டு என்பதால் முந்தைய ஆண்டுகளான 2021–22, 2022–23, 2023–24 மற்றும் 2024–25 ஆகிய ஆண்டுகளில் தேர்வு செய்யப்பட்ட கிராமப் பஞ்சாயத்து விவசாயிகளிடமிருந்து கோரிக்கை வரப்பெறின் தரிசு நிலத் தொகுப்புகள் ஏற்படுத்துதல், தொகுப்பிலுள்ள விவசாயக் குழுக்களுக்கு நீர் ஆதாரங்களை உருவாக்குதல் மற்றும் தரிசு நிலத் தொகுப்பு / தனிப்பட்ட விவசாயிகளின் நிலங்களில் உள்ள முட்புதர்களை அகற்றி, சமன்செய்து உழுதல் ஆகிய இனங்களை அக்கிராமப் பஞ்சாயத்துக்களில் நடப்பு 2025–26–ஆம் ஆண்டில் செயல்படுத்திட அனுமதி வழங்கியும்,

XLI. நடப்பு 2025–26–ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும் 2,338 கிராம பஞ்சாயத்துக்களில் போதுமான எண்ணிக்கையில் ஆதிதிராவிட/ பழங்குடியின தகுதி வாய்ந்த விவசாயிகள்

இல்லாமை மற்றும் பிற காரணங்களால் திட்டத்தினை செயல்படுத்த இயலாமல் அப்பிரிவு விவசாயிகளுக்கு திட்டப் பலன்கள் சென்றடைய முடியாத நிலை ஏற்படின், முந்தைய 4 ஆண்டுகளில் தேர்வு செய்யப்பட்ட கிராம பஞ்சாயத்துக்களில் உள்ள அதே பிரிவு விவசாயிகளுக்கு திட்டப் பலன்களை வழங்கிட அனுமதி வழங்கியும்,

XLII. இத்திட்டத்தில் பழங்குடியின விவசாயிகள் முழுமையாகப் பயனடையும் வகையில், Forest Right Act (FRA) பட்டாதாரர்களுக்கும் (அடங்கல் இல்லாத போதிலும்) திட்டப் பலன்களை வழங்கிட அனுமதி வழங்கியும்,

XLIII. இத்திட்டத்தில் உள்ள இனங்களைச் செயல்படுத்தும் போது கள நிலவரத்திற்கு ஏற்றவாறு வழிகாட்டு நெறிமுறைகளில் தேவையான மாற்றங்கள் செய்து கொள்ள சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கியும்,

XLIV. இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியில், தனிப்பட்ட விவசாயிகளுக்கான கூறுகளைப் பொருத்தவரையில் விகிதாச்சார அடிப்படையில் பொது (80%) ஆதிதிராவிடர் (19%) மற்றும் பழங்குடியினர் (1%) என்ற கணக்கீட்டின்படி விவசாயிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்து வழங்கவும் அரசு ஆணையிடுகிறது.

10. உழவர் நலன் சார்ந்த இதரத் துறைகளான 1) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 2) கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, 3) கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர்நலத்துறை, 4) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, 5) நீர்வள ஆதாரத் துறை, 6) எரிசக்தி துறை, 7) கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை ஆகிய துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களை கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும் கிராம பஞ்சாயத்துகளில் ஒருங்கிணைத்து செயல்படுத்துதல் குறித்து உழவர் நலன் சார்ந்த இதர துறைவாரியான திட்ட விபரங்கள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் பின்னர் தனியே வெளியிடப்படும்.

11. மேலே பத்தி 9(II)–இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையான ரூ.267.159 கோடியினை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்படவேண்டும்:–

| வ. எண் | துறை | கணக்குத் தலைப்பு | வரவு செலவு திட்டத் தில் ஒதுக்கப் பட்ட தொகை (ரூ. கோடி யில்) | இத்திட்டத்திற்காக தற்போது கோரும் நிதி (ரூ. கோடியில்) | கூடுதலாக கோரும் நிதி (ரூ. கோடியில்) | நிதி ஒப்படைப்பு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | வேளாண்மைத் துறை | 2401-00 பயிர் வளர்ப்பு 104 வேளாண்மைப் பண்ணைகள்– மாநில செலவினங்கள்– AG – கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் 311 மானியங்கள் – . 01 – தனித் திட்ட மானியம் (த.தொ.கு 2401 00 104 AG 311 01) | 15.92890 | 13.59360 | 0 | 2.33530 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 2401-00 பயிர் வளர்ப்பு 789 ஆதிதிராவிடர்களுக்கான சிறப்பு கூறுகள் திட்டம் -மாநில செலவினங்கள்- AG -கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் 311 மானியங்கள் - 01 - தனித் திட்ட மானியம் (த.தொ.கு 2401 00 789 AG 311 01) | 4.75550 | 3.22848 | 0 | 1.52702 |
| | | 2401-00 பயிர் வளர்ப்பு -796 பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம்- மாநில செலவினங்கள்- AC-கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் 311 மானியங்கள் - 01 - தனித் திட்ட மானியம் (த.தொ.கு 2401 00 796 AC 311 01 ) | 0.26270 | 0.16992 | 0 | 0.09278 |
| | | 2401-00 பயிர் வளர்ப்பு 104 வேளாண்மைப் பண்ணைகள்- மாநில செலவினங்கள்- AG - கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் 305 அலுவலகச் செலவுகள் - 02 ஏனைய சில்லறைச் செலவுகள் (த.தொ.கு 2401 00 104 AG 305 02) | 1.22610 | 0.83040 | 0 | 0.39570 |
| | | 2401-00 பயிர் வளர்ப்பு 104 வேளாண்மைப் பண்ணைகள்- மாநில செலவினங்கள்- AG - கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் 305 அலுவலகச் செலவுகள் - 03 - மின்கட்டணங்கள் (த.தொ.கு 2401 00 104 AG 305 03) | 1.55400 | 2.00000 | 0.44600 | 0 |
| | | **மொத்தம்** | **23.72720** | **19.82240** | **0.44600** | **4.35080** |
| 2 | தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை | 2401-00 பயிர் வளர்ப்பு - 119 தோட்டக்கலையும் காய்கறிப் பயிர் வளர்ப்பும் - மாநில செலவினங்கள் BI -கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் 311 மானியங்கள் - 01 - தனித் திட்ட மானியம் (த.தொ.கு 2401-00-119 BI 311 - 01 ) | 12.00000 | 15.40728 | 3.40728 | 0 |
| | | 2401-00 பயிர் வளர்ப்பு 789 ஆதிதிராவிடர்களுக்கான சிறப்பு கூறுகள் திட்டம் - மாநில செலவினங்கள் AN -கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் 311 மானியங்கள் - 01 - தனித் திட்ட மானியம் (த.தொ.கு2401-00-789-AN - 311 - 01) | 2.85000 | 3.65923 | 0.80923 | 0 |
| | | 2401-00 பயிர் வளர்ப்பு - 796 பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் - மாநில செலவினங்கள் AH -கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் 311 மானியங்கள் - 01 - தனித் திட்ட மானியம் (த.தொ.கு 2401-00-796-AH- 311 - 01) | 0.15000 | 0.19259 | 0.04259 | 0 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 2401-00 பயிர் வளர்ப்பு - 119 தோட்டக்கலையும் காய்கறிப் பயிர் வளர்ப்பும் - மாநில செலவினங்கள் BI - கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் 305 அலுவலகச் செலவுகள் - 02 - ஏனைய சில்லறைச் செலவுகள் (த.தொ.கு 2401-00-119-BI - 305 - 02 ) | 0.02070 | 0.05000 | 0.02930 | 0 |
| | | **மொத்தம்** | **15.02070** | **19.30910** | **4.28840** | **0** |
| 3 | வேளாண்மைப் பொறியியல் துறை | 2401 00 பயிர் வளர்ப்பு 113 வேளாண்மைப் பொறியியல் மாநிலச் செலவினங்கள் - AK கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் 309 உதவித் தொகை 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை (த.தொ.கு 2401 00 113 AK 309 03 ) | 126.38400 | வே.பொ. துறைக்கு<br>32.5480<br>வே.வி (ம) வே.வ துறைக்கு<br>123.2000<br>சர்க்கரை துறைக்கு<br>0.28600<br>மொத்தம்<br>156.034 | 29.65000 | 0 |
| | | 2401-00 பயிர் வளர்ப்பு 789 ஆதிதிராவிடர்களுக்கான சிறப்பு கூறுகள் திட்டம்- மாநிலச் செலவினங்கள் AO கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் 309 உதவித் தொகை 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை (த.தொ.கு 2401 00 789 AO 309 03) | 30.01620 | வே.பொ. துறைக்கு<br>40.6600<br>வே.வி (ம) வே.வ துறைக்கு<br>29.2600<br>சர்க்கரை துறைக்கு<br>0.0679<br>மொத்தம்<br>69.9879 | 39.97170 | 0 |
| | | 2401-00 பயிர் வளர்ப்பு 796 பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் - மாநிலச் செலவினங்கள் JP கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் 309 உதவித் தொகை 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை ( த. தொ.கு 2401 00 796 JP 309 03) | 1.57980 | வே.பொ. துறைக்கு<br>0.4420<br>வே.வி (ம) வே.வ துறைக்கு<br>1.5400<br>சர்க்கரை துறைக்கு<br>0.0036<br>மொத்தம்<br>1.9856 | 0.40580 | 0 |
| | | 2401-00 பயிர் வளர்ப்பு 113 வேளாண்மைப் பொறியியல்-மாநிலச் செலவினங்கள் AK கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் 305 அலுவலகச் செலவுகள் 02 ஏனைய சில்லறைச் செலவுகள் (த.தொ.கு 2401 00 113 AK 305 02) | 0.02000 | 0.02000 | 0 | 0 |
| | | மொத்தம் | 158.00000 | 228.02750 | 70.02750 | 0 |
| | | ஆக மொத்தம் | 196.74790 | 267.15900 | 74.76190 | 4.35080 |

12. மேலே பத்தி 9(II)-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.74,76,19,000/- யினை 2025-2026-ஆம் நிதி ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினம் 2025-2026-ஆம் நிதி ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் ஒரு குறிப்பிட்ட தொகையினை சேர்ப்பதன் மூலம் சிறப்பு நிகழ்வாக(SI) கொணர்ந்து சட்ட மன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 9(II)-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை உரிய துறைத்தலைவர்/அலுவலர்களுக்குப் பெற்று வழங்கிட வேளாண்மை இயக்குநர்/ தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர்/ தலைமைப் பொறியாளர் (வேபொ) ஆகியோர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 9(II)-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை 2025-2026-ஆம் நிதி ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதித் ( வே.(ம) உ.ந / வ.செ.பொ-I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு வேளாண்மை இயக்குநர்/தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர்/ தலைமைப் பொறியாளர் (வேபொ) ஆகியோர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

13. மேலும், இவ்வரசாணை கோ.எண்.e-441/வேஉ.6(1)/ 2025-இல் நிதித்துறையின் குறிப்பு# 18-23, நாள்: 20.06.2025 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு (IFHRMS ASL No) எண். 2025060499 -இல் ஒப்புதலைப் பெற்று வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**வ. தட்சிணாமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசு செயலாளர்**

பெறுநர்

வேளாண்மை இயக்குநர், சென்னை-5.
இயக்குநர், சர்க்கரைத்துறை, சென்னை -35.
இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை-5.
ஆணையர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம், சென்னை-32.
தலைமைப் பொறியாளர் (வே.பொ), வேளாண்மை பொறியியல் துறை, அண்ணாசாலை, சென்னை-35.
துணைத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு விதை மேம்பாட்டு முகமை, சென்னை-5.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி மேம்பாட்டு முகமை, சென்னை-5.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நீர்வளத்துறை, தலைமைச் செயலகம், சென்னை -9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தலைமைச் செயலகம், சென்னை -9.
பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-3.

இயக்குநர், விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத்துறை, சென்னை–32.

முதன்மை மாநில கணக்காயர் (G&SSA), சென்னை–18.

முதன்மை மாநில கணக்காயர் (E&SSA), சென்னை–18.

மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை–18.

உறைவிட தணிக்கை அலுவலர், முதன்மை மாநில கணக்காயர் அலுவலகம், சென்னை –9.

சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–8.

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை–9.

மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை–9.

மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை –9.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை –9.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம் சென்னை –9.

தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலர், தலைமைச் செயலகம், சென்னை –9.

வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் அவர்களின் தனிச் செயலாளர், வேளாண்மை – உழவர் நலத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.

நிதித் (வேளாண்–உந/வ.செ (செலவினம்.I /II) /வ.வ.நி) துறை, சென்னை–9.

வேளாண்மை – உழவர் நலத் (அனைத்து திட்டப்பிரிவுகள்) துறை, சென்னை –9,

சம்மந்தப்பட்ட கோப்பு எண்.e– 441/வேஉ.6(1)/2025

இருப்புக் கோப்பு/உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

கு. அபிராமி 23/6/25

(கு. அபிராமி)

அரசு சார்புச் செயலாளர்

23/6/25

அரசாணை (நிலை) எண்.183, வேளாண்மை–உழவர்நலத் (வேஉ.6(1) துறை, நாள் 23.06.2025

இணைப்பு – I

## கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் 2025–2026

## துறை வாரியாக திட்டப்பணி விவரங்கள்

### அட்டவணை–அ

**வேளாண்மைத் துறை**

| வ. எண் | பணியின் விபரம் | ஒரு அலகு தொகை ரூபாய் | அலகு | பொருள் | நிதி (ரூ. கோடி) | உப கணக்குத் தலைப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றுதல் | | | | | |
| அ | தொகுப்பில் உள்ள விவசாயிகளின் தரிசு நிலங்களில் முட்புதர்களை அகற்றி சமன் செய்து உழுதல் | 50 % மானியம் அல்லது எக்டருக்கு ரூ.9,600/– இதில் எது குறைவோ | எக்டர் | 200 | 0.1920 | 311– 01 – தனித் திட்ட மானியம் |
| ஆ | தனிப்பட்ட விவசாயிகளின் தரிசு நிலங்களில் முட்புதர்களை அகற்றி சமன் செய்து உழுதல் | 50 % மானியம் அல்லது எக்டருக்கு ரூ.9,600/– இதில் எது குறைவோ | எக்டர் | 7,500 | 7.2000 | 311– 01 – தனித் திட்ட மானியம் |
| 2 | வரப்புகளில் பயறு சாகுபடியை ஊக்குவித்தல் | 50 % மானியம் அல்லது எக்டருக்கு ரூ.300/– இதில் எது குறைவோ | எக்டர் | 1,00,000 | 3.0000 | 311– 01 – தனித் திட்ட மானியம் |
| 3 | நன்மை பயக்கும் நுண்ணுயிர்களை பெருக்கி மண்வளத்தை மேம்படுத்துவதற்கான செயல்விளக்கத் திடல்கள் அமைத்தல் | 50 % மானியம் அல்லது எக்டருக்கு ரூ.450/– இதில் எது குறைவோ | எக்டர் | 1,00,000 | 4.5000 | 311– 01 – தனித் திட்ட மானியம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | விசைத் தெளிப்பான் விநியோகம் (Battery / Power operated) | 50 % மானியம் அல்லது ஒரு அலகிற்கு ரூ.3,000/- இதில் எது குறைவோ | எண்கள் | 7,000 | 2.1000 | 311- 01 - தனித் திட்ட மானியம் |
| 5 | தொகுப்புகளைப் பதிவு செய்தல் | ரூ.7000/- தொகுப்பு | எண்கள் | 50 | 0.0350 | 305-02- ஏனைய சில்லறை செலவுகள் |
| 6 | **கிராம அளவில்** | | | | | |
| அ | விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் கையேடு தயாரித்தல் | கிராமம் ஒன்றிற்கு ரூ.500/- வீதம் | கிராமங்கள் | 2,338 | 0.1169 | 305-02- ஏனைய சில்லறை செலவுகள் |
| ஆ | தகவல், கல்வி மற்றும் தகவல் பரிமாற்றம், முகாம் நடத்துதல், ஆவணப்படுத்துதல் | கிராமம் ஒன்றிற்கு ரூ.2500/- வீதம் | கிராமங்கள் | 2,338 | 0.5845 | 305-02- ஏனைய சில்லறை செலவுகள் |
| 7 | **மாவட்ட அளவில்** | | | | | |
| அ | மாவட்ட அளவிலான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் | மாவட்டம் ஒன்றிற்கு ரூ.5,000/- வீதம் | மாவட்டங்கள் | 37 | 0.0185 | 305-02- ஏனைய சில்லறை செலவுகள் |
| ஆ | மாவட்ட அளவிலான விளம்பரம், திட்ட செயலாக்கம், ஆவணப்படுத்துதல், ஆய்வுக் கூட்ட செலவினம் மற்றும் சில்லரை செலவினங்கள் | மாவட்டம் ஒன்றிற்கு ரூ.15,000/ - வீதம் | மாவட்டங்கள் | 37 | 0.0555 | 305-02- ஏனைய சில்லறை செலவுகள் |
| 8 | **மாநில அளவில்** | | | | | |
| அ | திட்ட செயலாக்கம், விளம்பரம், ஆவணப்படுத்துதல், ஆய்வுக் கூட்ட செலவினம் மற்றும் சில்லரை செலவினங்கள் | ஒட்டு மொத்தம் | | | 0.0200 | 305-02- ஏனைய சில்லறை செலவுகள் |
| 9 | மின்சாரக் கட்டணங்கள் | ஒட்டு மொத்தம் | | | 2.0000 | 305 - 03 மின்சாரக் கட்டணங்கள் |
| | **வேளாண்மைத் துறையின் மொத்தம்** | | | | 19.8224 | |

அட்டவணை–ஆ

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை

| வ. எ ண் | பணியின் விபரம் | ஒரு அலகு தொகை ரூபாய் | அலகு | பொருள் அலகுகள் | நிதி (ரூ. கோடி) | உப கணக்குத் தலைப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | பல்லாண்டு தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு விரிவாக்கம் (மா, கொய்யா, சப்போட்டா, கொடுக்காப்புளி, நாவல், சீத்தா, எலுமிச்சை, புளி, போன்றவை) | ரூ.60,000/– மொத்த செலவினத்தில், 50 சதவீத தொகையில், முதலாமாண்டில் 60 சதவீத மானியமாக எக்டர் ஒன்றிற்கு ரூ. 18,000/– வழங்கப்படும். | எக்டர் | 3,000 | 5.4000 | 311– 01 – தனித் திட்ட மானியம் |
| 2 | சந்தைகளில் காய்கறிகள் வரத்தினை அதிகரிக்க காய்கறி சாகுபடியை ஊக்குவித்தல் | எக்டர் ஒன்றுக்கு 75 சதவீதம் மானியமாக ரூ. 7,500/– வழங்கப்படும். | எக்டர் | 3000 | 2.2500 | 311– 01 – தனித் திட்ட மானியம் |
| 3 | ஊட்டச்சத்து தன்னிறைவை மேம்படுத்த பழச்செடி தொகுப்புகள் வழங்குதல் (போக்குவரத்து செலவினம் உட்பட) | ரூ. 200/– மதிப்பிலான 5 வகை பழச்செடிகள் அடங்கிய தொகுப்பிற்கு 75 சதவீத மானியமாக ரூ.150/– வழங்கப்படும். | எண்கள் | 4,70,000 | 7.0500 | 311– 01 – தனித் திட்ட மானியம் |
| 4 | தென்னங்கன்றுகள் விநியோகம் | நெட்டை தென்னங்கன்று ஒன்றுக்கு ரூ.65 வீதம் (2 கன்றுகள் x ரூ.65 x 150 பண்ணைக் குடும்பம் x 2,338 கிராமங்கள்) – 100% மானியம் | எண்கள் | 7,01,400 | 4.5591 | 311– 01 – தனித் திட்ட மானியம் |
| 5 | திட்ட செயலாக்கம் மற்றும் ஆவணப் படுத்துதல் | – | | | 0.050 | 305–02– ஏனைய சில்லறை செலவுகள் |
| | தோட்டக்கலைத் துறையின் மொத்தம் | | | | 19.3091 | |

**அட்டவணை–இ**

**வேளாண்மைப் பொறியியல் துறை**

| வ. எண் | பணியின் விபரம் | சராசரி அலகுத் தொகை (ஒன்றிற்கு) | அலகு | பொருள் அலகுகள் | நிதி (ரூ. கோடி) | உப கணக்குத் தலைப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | தொகுப்பிலுள்ள விவசாயக் குழுக்களுக்கு நீர் ஆதாரங்களை உருவாக்குதல் | ரூ.9 இலட்சம் / தொகுப்பிற்கு | எண்கள் | 50 | 4.5000 | 309-03-குறிப்பிட்ட திட்டங்களுக் கான உதவித் தொகை |
| 2 | தனிப்பட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகளுக்கு கிணறுகள் (ஆழ்துளை அல்லது குழாய்க் கிணறுகள்) அமைத்தல் | ரூ.8 இலட்சம்/ எண்ணிற்கு | எண்கள் | 500 | 40.0000 | 309-03-குறிப்பிட்ட திட்டங்களுக் கான உதவித் தொகை |
| 3 | பண்ணைக் குட்டைகள் அமைத்தல் | ரூ.1.4 இலட்சம்/ எண்ணிற்கு | எண்கள் | 600 | 8.4000 | 309-03-குறிப்பிட்ட திட்டங்களுக் கான உதவித் தொகை |
| 4 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சிறுபாசனக் குளங்கள், ஊருணிகள், குளங்கள், வரத்துக் கால்வாய்கள் மற்றும் இதர நீர் சேகரிப்பு கட்டுமானங்களை தூர்வாரி மேம்படுத்துதல் | ரூ.1 இலட்சம்/ எண்ணிற்கு | எண்கள் | 2000 | 20.0000 | 309-03-குறிப்பிட்ட திட்டங்களுக் கான உதவித் தொகை |
| 5 | நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள் அமைத்தல் | ரூ.0.5 இலட்சம்/ எண்ணிற்கு | எண்கள் | 150 | 0.7500 | 309-03-குறிப்பிட்ட திட்டங்களுக் கான உதவித் தொகை |
| 6 | நிர்வாக செலவினங்கள் | | | | 0.0200 | 305-02-ஏனைய சில்லறைச் செலவுகள் |
| | **வேளாண்மைப் பொறியியல் துறையின் மொத்தம்** | | | | 73.6700 | |

## அட்டவணை–ஈ

## வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை

| வ. எண் | பணியின் விபரம் | மானிய விபரம் | மொத்த அலகுகள் | நிதி (ரூ.கோடி) | உப கணக்குத் தலைப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | பண்ணை வழி வர்த்தகத்தை ஊக்குவித்திட உலர்களத்துடன் கூடிய தரம் பிரிப்புக் கூடங்கள் | 100% மானியம். ஒரு அலகிற்கு ரூ.38.50 இலட்சம் | 400 எண்கள் | 154.0000 | 309-03-குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை |
| | வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் மொத்தம் | | | 154.0000 | |

## அட்டவணை– உ

## சர்க்கரைத்துறை

| வ. எண் | பணியின் விபரம் | மானிய விபரம் | மொத்த அலகுகள் | நிதி (ரூ.கோடியில்) | உப கணக்குத் தலைப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | பருசீவல் நாற்றுக்கள் விநியோகம் | 50 சதவீத மானியமாக எக்டர் ஒன்றிற்கு ரூ. 15,625/- | 200 எக்டர் | 0.3125 | 309-03-குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை |
| 2 | ஒருபரு விதைக் கரணைகள் விநியோ கம் | 50 சதவீத மானியமாக எக்டர் ஒன்றிற்கு ரூ. 5,000/- | 90 எக்டர் | 0.0450 | 309-03-குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை |
| | மொத்தம் | | | 0.3575 | |

வ. தட்சிணாமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

//உண்மை நகல்//

23/6/25

பிரிவு அலுவலர்

23/6/25

அரசாணை (நிலை) எண்.183, வேளாண்மை–உழவர்நலத் (வேஉ.6(1) துறை, நாள் 23.06.2025

## இணைப்பு – II

## கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் 2025–26

### அ. அனைத்து துறைகளுக்கான பொதுவான திட்டசெயலாக்க வழிமுறைகள்

1. கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், அனைத்து கிராமங்களும் ஒட்டுமொத்த வேளாண் வளர்ச்சி மற்றும் தன்னிறைவு அடைந்திடும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படுகிறது.

i. வேளாண்மை – உழவர் நலத் துறை திட்டங்களுடன், உழவர் நலன் சார்ந்த இதர துறைகளான வருவாய்–பேரிடர் மேலாண்மைத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, கூட்டுறவு, உணவு மற்றும் பொது விநியோகத்துறை, எரிசக்தித்துறை, நீர்வள ஆதாரத்துறை, கால்நடை பராமரிப்பு, பால் வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்துறை ஆகிய பிற துறை திட்டங்களும் கிராம பஞ்சாயத்துகளில் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படும்.

ii. "கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்" செயல்படுத்தப்பட்ட கிராமங்கள் முன்மாதிரி கிராமங்களாக அமையும்.

iii. இத்திட்டத்தில் பங்குபெறும் பயனாளிகள் இதே திட்டத்தின் பல்வேறு இனங்களிலும் மற்றும் வேளாண்மை – உழவர் நலத்துறையின் கீழ் செயல்படும் துறைகளில் ஒரு துறையில் பயனடைந்த பயனாளி வேறு துறையின் திட்டங்களிலும் வரையரைக்குட்பட்டு பயன்பெறலாம்.

### 2. திட்டத்தின் நோக்கங்கள்

i. கிராமத்தில் உள்ள தரிசு நிலங்களை சாகுபடிக்குக் கொண்டு வருதல்

ii. வேளாண்மை–உழவர் நலத்துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின் 80சதவீத நிதியினை 2,338 கிராமங்களுக்கு ஒதுக்குதல்.

iii. பிற துறைகளின் முக்கிய திட்டங்களை இக்கிராமங்களில் ஒருங்கிணைத்தல்.

iv. நீர்வள ஆதாரங்களைப் பெருக்குதல்.

v. சூரியசக்தி பம்புசெட்டுகள் அமைத்தல்.

vi. வேளாண் விளைபொருட்களை மதிப்புக் கூட்டி சந்தைப்படுத்துதல்.

vii. நுண்ணீர்ப் பாசன முறையைப் பின்பற்றுதல்.

viii. கால்நடைகளின் நலன்காத்து பால் உற்பத்தியை பெருக்குதல்.

ix. வருவாய்த்துறையின் மூலம் புதிய பட்டா / பட்டா மாறுதல் வழங்குதல்.

x. கூட்டுறவு சங்கங்கள் மூலம் அதிக அளவு பயிர்க்கடன்கள் வழங்குதல்.

xi. கால்வாய் பாசனநீர் வழித்தடங்களைத் தூர்வாருதல்.

xii. மாநிலத்தில் உள்ள எல்லா கிராமப் பஞ்சாயத்துகளிலும் ஐந்து ஆண்டுகளில் ஒட்டுமொத்த வளர்ச்சியினை அடையச் செய்தல்.

நடப்பு 2025-26 ஆம் ஆண்டில் "கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்" ரூ.267.159 கோடி செலவில் மாநில நிதி உதவியுடன் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையினால் செயல்படுத்தப்படவுள்ள அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்திற்காக தேர்வு செய்யப்பட்ட 2,338 கிராம பஞ்சாயத்துகளில் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும். மேலும் இத்திட்டம் 37 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும். நீலகிரி மாவட்டம், திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கொடைக்கானல் வட்டாரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள வெள்ளிமலை வட்டாரங்களைப் பொருத்தமட்டில் தரிசு நில தொகுப்புகளை அமைத்தல், பதிவு செய்தல், விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் இத்திட்டம் தொடர்பான அனைத்து திட்டப்பணிகளும் தோட்டக்கலைத் துறை மூலம் மேற்கொள்ளப்படும்.

### 3. திட்ட செயல்பாட்டு வழிகாட்டு நெறிமுறைகள்

**அ) திட்டம் செயல்படுத்த ஆலோசனை கூட்டம் நடத்துதல்:**

மாவட்ட ஆட்சியர் தலைமையில், வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை உள்ளிட்ட மாவட்ட கண்காணிப்புக் குழு உறுப்பினர்களைக் கொண்டு மாவட்ட அளவிலான ஆலோசனைக்கூட்டம் நடத்தவேண்டும். கிராமப் பஞ்சாயத்துகளில் துறைவாரியாக செயல்படுத்தும் திட்டங்களைக் குறித்து விவாதிக்க வேண்டும்.

**ஆ) கிராமப் பஞ்சாயத்து தேர்வு**

i. இவ்வாண்டில், தேர்வு செய்யப்பட்ட 2,338 கிராமப் பஞ்சாயத்துகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

ii. ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு பொறுப்பு அலுவலராக உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர் / உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்)/ உதவி விதை அலுவலர்கள் (Nodal Officer) நியமிக்கப்பட வேண்டும்.

### 4. கிராம திட்ட செயலாக்கக் குழு அமைத்தல்

தேர்வு செய்யப்பட்ட கிராமப் பஞ்சாயத்துகளில் திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்த கிராம திட்ட செயலாக்கக்குழு இணைப்பு – V இன்படி அமைக்கப்பட வேண்டும்.

**கிராம திட்ட செயலாக்கக்குழுக்கான பணிகள்**

i. கிராம திட்டசெயலாக்கக்குழு விரிவான கிராம வேளாண் வளர்ச்சித் திட்ட அறிக்கையினை படிவம் IIIன் படி (**அரசாணை (நிலை) எண்.59 நாள்–09.03.2022–இல் உள்ள இணைப்பு படிவங்களைக் காணவும்**) தயாரிக்க வேண்டும். கிராமங்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில், கிராம திட்ட செயலாக்கக் குழுவால், இனம் வாரியாக தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கையை கிராம அளவிலான திட்ட செயலாக்க குழு உறுப்பினர்களால் கையொப்பமிடப்பட்டு, கிராம திட்ட செயலாக்கக் குழுவின் தலைவர் அவர்களால் மேலோப்பம் இடப்பட்டு தொடர்புடைய வேளாண்மை உதவி இயக்குநர் மூலம் வேளாண்மை இணை இயக்குநருக்கு அனுப்பிட வேண்டும். வேளாண்மை இணை இயக்குநர் பெறப்பட்ட கிராம திட்ட செயலாக்க விரிவான திட்ட அறிக்கைகளைத் தொகுத்து மாவட்ட விரிவான திட்ட அறிக்கையினை தயாரித்து மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி வைக்க வேண்டும். மாவட்ட ஆட்சியர், தொடர்புடைய துறைகளின் மாவட்ட அலுவலருக்கு, அவர்கள் தொடர்புடைய இனங்களை அனுப்பி அத்துறைகளின் மூலம் திட்டம் செயல்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். திட்டம் முடிவுற்ற பின் அந்நிதியாண்டின் இறுதி அறிக்கையையும் அனுப்பி வைக்க வேண்டும்.

ii. பொறுப்பு அலுவலர்கள் வாரத்தில் இரு முறை கிராம பஞ்சாயத்துகளில் முகாமிட்டு திட்ட செயல்பாட்டை மேற்கொள்ளவேண்டும்.

iii. வேளாண்மை அலுவலர் / தோட்டக்கலை அலுவலர்கள் வாரத்திற்கு குறைந்தபட்சம் ஒருமுறை கிராம பஞ்சாயத்துகளில் திட்டசெயல்பாட்டை ஆய்வு செய்யவேண்டும்.

iv. வேளாண்மை உதவி இயக்குநர் / தோட்டக்கலை உதவி இயக்குநர் மாதத்திற்கு குறைந்தபட்சம் இரு முறை திட்ட செயல்பாட்டை ஆய்வு செய்யவேண்டும்.

v. திட்ட செயல்பாட்டில் ஏற்படும் இடர்ப்பாடுகளுக்கு, ஆய்வு அலுவலர்கள் உரிய தீர்வினை விரைந்து வழங்கி திட்டத்தினை வெற்றிகரமாக செயல்படுத்த வேண்டும்.

vi. திட்டத்தினைக் கண்காணிக்க மண்டல அலுவலர்களாக (Zonal Officers) வேளாண்மை துணை இயக்குநர் /தோட்டக்கலை துணை இயக்குநர் / செயற்பொறியாளர் (வே.பொ) /உதவி செயற்பொறியாளர் (வே.பொ) சம்பந்தப்பட்ட மாவட்ட வேளாண்மை இணை இயக்குநரால் நியமனம் செய்யப்பட வேண்டும்.

**5. தரிசு நிலத் தொகுப்பு விவசாயிகளை தேர்வு செய்தல்**

i. நியமிக்கப்பட்ட துறையின் பொறுப்பு அலுவலர்கள் தரிசு நிலத் தொகுப்புகளை உருவாக்க வேண்டும். உருவாக்கப்பட்ட தரிசு நிலத்

தொகுப்பில் இறுதிப் பணியான நுண்ணீர் பாசனம் அமைத்து, பல்லாண்டு பயிர்களை நடவு செய்யும் வரை அனைத்து பணிகளுக்கும் சம்பந்தப்பட்ட துறையின் பொறுப்பு அலுவலர்களே பொறுப்பு ஆவார்கள்.

ii. தொகுப்பு தரிசு நிலத்திற்குள் அடங்கும் தேர்வு செய்யப்பட்ட விவசாயிகளின் விபரம் முறையாக சேகரிக்கப்பட வேண்டும்.

iii. தேர்வு செய்யப்படும் விவசாயிகள் கிராம எல்லைக்குள் / அருகில் குடியிருப்பவராக இருக்க வேண்டும்.

iv. ஆதிதிராவிடர், பழங்குடியின விவசாயிகள், சிறுபான்மையினர், சிறு / குறு விவசாயிகள் மற்றும் பெண் விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

6. **தரிசு நில தொகுப்புகளை கண்டறியும் வழிமுறைகள் மற்றும் பதிவு செய்தல்**

i. கிராம திட்ட செயலாக்கக்குழு, ஊராட்சிக்குட்பட்ட தரிசு நிலம் உள்ள கிராமம்/குக்கிராமங்களைக் கண்டறிய வேண்டும்.

ii. 10 முதல் 15 ஏக்கர் தரிசு நிலத் தொகுப்புகளைக் கண்டறிய வேண்டும். அவ்வாறு கண்டறியும் போது தரிசு நிலத் தொகுப்புகள் தொடர்ச்சியாக அமையாத போது (Non contiguous) இடையில் உள்ள 2 முதல் 3 ஏக்கர் வரை சாகுபடி நிலங்களையும் தொகுப்புக்குள் கொண்டு வந்து தொடர்ச்சியான தரிசு நிலத் தொகுப்பாக அமைத்து கொள்ளலாம்.

iii. தரிசு நிலதொகுப்பில் உள்ள விவசாயி ஒருவருக்கு அதிக பட்சமாக 2 ஏக்கர் வரை திட்டப்பலன்கள் வழங்கப்படும்.

iv. ஒவ்வொரு தரிசுநில தொகுப்பும் குறைந்தபட்சம் எட்டு விவசாயிகள் கொண்டதாக இருக்க வேண்டும்.

v. அவ்வாறு அமைக்கப்பட்ட தரிசு நில தொகுப்புகள் 1975ம் வருட தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டத்தின் கீழ் சங்கங்களாக வேளாண்மைத்துறை / தோட்டக்கலைத்துறை / வேளாண்மை விற்பனை துறைகள் மூலம் பதிவு செய்யப்பட வேண்டும். அவ்வாறு பதிவு செய்யப்பட்ட தரிசு நிலத் தொகுப்புக் குழுக்களே சங்கங்களின் அனைத்து விதமான செயல்பாடுகளுக்கு பொறுப்பேற்க வேண்டும்.

vi. தரிசு நில தொகுப்பு உரிமையாளர், விவசாயிகள் விவரம் **படிவம் – I** மற்றும் படிவம் – I (அ), இதர திட்ட பயனாளிகள் விவரம் **(படிவம்–II மற்றும் படிவம்–IIஅ)** படிவங்களில் சேகரிக்க வேண்டும் **(அரசாணை (நிலை) எண்.59 நாள்– 09.03.2022-இல் உள்ள இணைப்புப் படிவங்களைக் காணவும் ).**

7. **தரிசு நிலத் தொகுப்புகளை பயிர் சாகுபடிக்குக் கொண்டுவருவதற்கான வழிமுறைகள்**

i. கிராம திட்ட செயலாக்கக் குழு – தரிசு நிலத்திற்கு உட்பட்ட விவசாயிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்த வேண்டும்.

ii. தரிசு நிலத்தில் மண் ஆய்வு, நிலத்தடி நீர் ஆய்வு மற்றும் விவசாயிகளோடு ஆலோசனை செய்து பயிரிடத் தகுந்த பழ / மரக்கன்றுகளைத் தேர்வு செய்யவேண்டும்.

iii. ஆழ்துளைக்கிணறு / குழாய்க்கிணறு பொதுவாக அரசு புறம்போக்கில் அமைக்க வேண்டும்.

iv. மேற்படி கிணறு அமைப்பதற்கு அரசு புறம்போக்கு நிலம் கிடைக்கவில்லை என்றால், ஏற்படுத்தப்பட்ட விவசாய சங்கங்களே நிலங்களைப் பெற்றுத்தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்கான வழிகாட்டுதல் மற்றும் நடவடிக்கைகள் கிராம திட்ட செயலாக்கக் குழுவினால் மேற்கொள்ளப்பட வேண்டும். தரிசு நில தொகுப்பில் நிலத்தை வைத்திருக்கும் தனிநபர் (குழுவில் உள்ள விவசாயிகளில் ஒருவர்) பட்டா நிலத்தை அரசுக்கு தானமாக எழுதி கொடுக்க ஒப்புதல் அளிக்க வேண்டும். இந்த ஒப்பந்தம் ஆழ்துளைக் கிணறு/குழாய்க் கிணறு அமைக்கும் பகுதியிலுள்ள நில உரிமையாளரால் மின் சக்தியால் இயங்கும் பம்புசெட்டு அமைப்பதற்கு 100 சதுர அடியும் (10அடி x 10அடி) அல்லது சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டு அமைப்பதற்கு 900 சதுர அடியும் (30அடி x 30அடி) நிலப்பரப்பினை தானமாக வழங்கிட வேண்டும்.

1. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் ஏற்படுத்தப்படும் திறந்த வெளிக் கிணறுகள், பட்டா நிலத்தில் அமையும் பட்சத்தில் உரிய நபர் (குழுவில் உள்ள விவசாயிகளில் ஒருவர்), அக்கிணற்றினை அமைப்பதற்கும் மற்றும் மின் சக்தியால் இயங்கும் பம்பு செட் அல்லது சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட் அமைப்பதற்கும் தேவையான நிலப்பரப்பினை அரசுக்கு தானமாக வழங்கிட வேண்டும்.

2. தரிசு நிலத் தொகுப்பு அமைக்கப்பட்ட தனிநபர் நிலத்தில் திறந்தவெளிக் கிணறு உருவாக்கப்படும் பட்சத்தில், திறந்தவெளிக் கிணறு மட்டும் அமைப்பதற்கு தோராயமாக 600 சதுர அடி நிலப்பரப்பு, மின்சக்தியால் இயங்கும் பம்புசெட்டு மற்றும் இதர கட்டமைப்புகள் அமைப்பதற்கு தோராயமாக 100 சதுர அடி (10 அடி X 10 அடி) நிலப்பரப்பு மற்றும் சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டு அமைப்பதற்கு 900 சதுர அடி (30 அடி X 30 அடி ) நிலப்பரப்பினை தானமாக வழங்கிட விவசாய குழுக்களில் உள்ள தனிநபர் முன்வர வேண்டும். எனவே மின் இணைப்புடன் கூடிய திறந்தவெளிக் கிணறு அமைக்க தானமாக வழங்க வேண்டிய மொத்த நிலப்பரப்பு 700 சதுர அடி மற்றும் சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுடன் கூடிய திறந்தவெளிக் கிணறு அமைக்க தானமாக வழங்க வேண்டிய மொத்த நிலப்பரப்பு 1,500 சதுர அடி ஆகும்.

3. கள நிலவரத்தின் அடிப்படையிலும் மற்றும் வடிவத்தின் அடிப்படையிலும் இந்நிலப்பரப்பின் அளவு மாறுபடும்.

v. தொகுப்பு நிலத்தில் ஆழ்துளைக்கிணறு / குழாய்க் கிணறு அமைப்பது, நீர்இறைப்பதற்கு மின் இணைப்பு அல்லது சூரியசக்தி பம்புசெட் அமைப்பது ஆகியன வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் செய்யப்படவேண்டும்.

vi. குறைந்த நீர்த் தேவையுடைய பயிர்கள் மட்டுமே சாகுபடி செய்யப்பட வேண்டும். குறிப்பாக தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி மேற்கொள்ள ஊக்குவிக்க வேண்டும். நீர் அதிகம் தேவைப்படும் நெல், கரும்பு, வாழை, தென்னை, எண்ணெய்ப்பனை உள்ளிட்ட பயிர்கள் பயிரிட அனுமதிக்கக் கூடாது.

vii. திறந்த கால்வாய்ப் பாசனத்திற்கு அனுமதி இல்லை.

viii. பலன் தரும் மரப்பயிர் மற்றும் பழமரங்கள் சாகுபடி செய்திட ஊக்குவித்திடலாம்.

ix. தேவை / சூழலின்/கள நிலவரத்தின் அடிப்படையில் தரிசு நிலத் தொகுப்பில் வேளாண் காடுகள் சாகுபடி செய்ய ஏதுவான கன்றுகள் நடவு செய்ய ஊக்குவிக்கலாம்.

தரிசு நிலத்தொகுப்பு மேம்பாடு திட்ட செயலாக்க வழிமுறைகள் **இணைப்பு III** ல் கண்ட படி கடைப்பிடித்திட வேண்டும்.

**8. இடுபொருள் கொள்முதல்**

தமிழக அரசு அரசாணை (நிலை) எண். 94, நிதி(சம்பளம்)துறை, நாள். 30.03.2023-இல் தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளி வெளிப்படைத் தன்மைக்கான சட்டம் 1998 மற்றும் ஒப்பந்தப்புள்ளி விதிகள் 2000-இல் தெரிவித்துள்ளபடி 01.04.2023 முதல் ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் அனைத்து இனங்களும் அரசின் வலைதளத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும் (Web portal – https://tntenders.gov.in.) என ஆணையிடப்பட்டுள்ளது. எனவே இத்திட்டத்திற்கான இடுபொருட்கள் ஒப்பந்தப்புள்ளி மூலம் கொள்முதல் செய்யும் நிகழ்வில், அவ்வரசாணையில் தெரிவிக்கப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றி இடுபொருள் கொள்முதல் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**9. திட்ட கண்காணிப்பு**

**மாவட்ட கண்காணிப்புக்குழு**

i. மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட கண்காணிப்புக் குழு **இணைப்பு-VI இன்படி** அமைக்கப்பட வேண்டும்.

ii. மாவட்ட கண்காணிப்புக்குழு மாதம் இருமுறை திட்ட செயல்பாட்டை ஆய்வு செய்யும்.

iii. மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் உழவர் நலன் தொடர்புடைய சகோதர துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைப்பு திட்டங்களுக்கு (Dovetailed Scheme) அந்தந்த மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) அவர்கள் ஒருங்கிணைப்பு அலுவலராக (Co–ordinating Officer) செயல்பட வேண்டும்.

**மாநில கண்காணிப்புக் குழு**

கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் உள்ளிட்ட வேளாண்மை –உழவர் நலத்துறையின் முக்கிய திட்டங்களை ஆய்வு செய்திட அரசு தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட மாநில உயர்நிலைக்குழு மாதமொருமுறை அல்லது தேவைக்கேற்ப திட்ட செயல்பாட்டை ஆய்வு செய்யும்.

**10. தகவல், கல்வி மற்றும் தகவல் பரிமாற்றம் (IEC)**

வேளாண்மை இணை இயக்குநர்கள் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்த பத்திரிகைச் செய்திகள், சுவர் விளம்பரங்கள், விளம்பரப் பலகைகள், துண்டு பிரசுரங்கள், தொலைக்காட்சி, வானொலி, சமூக வலைதளம் மற்றும் தகவல் பரிமாற்றக்குழு மூலம் தகவல் மற்றும் தகவல் பரிமாற்ற செய்திகளை வழங்குவார்கள்.

**11. ஆவணப்படுத்துதல்**

i. கிராம அளவில் கிராம வரைபடம், வட்டார வரைபடம், கிராம குறிப்புரை மற்றும் கிராம அளவிலான திட்ட பொறுப்பு அலுவலர் விவரங்களுடன், திட்டத்திற்கு முன்பாகவும், பின்பாகவும் விரிவான கிராம வேளாண் வளர்ச்சித் திட்ட அறிக்கையினை தயாரிக்க வேண்டும்.
ii. திட்டம் குறித்து கிராம, மாவட்ட அளவில் விளம்பரங்கள்செய்ய வேண்டும்.
iii. மாவட்ட அளவில் திட்டம் செயல்படுத்தப்படும் அனைத்து கிராமங்களுக்கான விரிவான கிராம வேளாண் வளர்ச்சித் திட்ட அறிக்கையினை ஒருங்கிணைத்து மாவட்ட அளவில் ஒட்டுமொத்த அறிக்கையினைத் தயாரிக்கவேண்டும்.

மாவட்ட ஆட்சித் தலைவரின் வழிகாட்டுதலின்படி கிராமப் பஞ்சாயத்துகளில் செயல்படுத்தப்படும் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் ஆரம்பக்கட்ட ஆய்வு, பயிற்சிகள், செயல் விளக்கங்கள், விவசாயிகளின் வெற்றிக்கதைகள் ஆகியவற்றை வேளாண்மை இணை இயக்குநர்கள் ஆவணப்படுத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

12. வாராந்திர / மாதாந்திர / ஆண்டு – திட்ட முன்னேற்ற அறிக்கை சமர்ப்பித்தல்.

i. கலைஞரின்அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், நேரடியாக செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு, அந்தந்த துறைத் தலைவர்களே முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும்.

ii. வேளாண்மை – உழவர்நலத்துறையின் கீழ் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைப்பு திட்டங்களுக்கு (Dovetailed Schemes) அந்தந்த துறைத் தலைவர்களே முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும்.

iii. வேளாண் துறை அல்லாத பிற துறைகளின் இத்திட்டத்தின் கீழ் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கான முன்னேற்ற அறிக்கைகளை அந்தந்த மாவட்டத்தின் மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) அவர்கள் மாவட்ட ஆட்சியர் வாயிலாக சமர்ப்பிக்க வேண்டும். வேளாண்மை – உழவர் நலத்துறை தொடர்புடைய துறைகளின் திட்டங்களை கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கிராம பஞ்சாயத்துகளில் ஒருங்கிணைத்து செயல்படுத்தும் பணியினை மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) அவர்கள் மேற்கொள்ள வேண்டும்.

iv. மேலே கூறப்பட்ட துறைகள் தொடர்புடைய முன்னேற்ற அறிக்கைகளை கண்காணித்து ஆய்வு செய்து, அவ்வறிக்கைகள் ஒவ்வொரு மாதமும் அனுப்பப்படுவதை அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்களின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) அவர்கள் உறுதி செய்யவேண்டும்.

13. திட்ட மதிப்பீட்டுஆய்வு

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இத்திட்டம் குறித்து மாதம்தோறும் ஆய்வுக்கூட்டம் நடத்தி திட்ட முன்னேற்றம் குறித்து அரசுக்கு ஒவ்வொரு மாதம் 10 ஆம் தேதிக்குள் அறிக்கை அனுப்ப வேண்டும்.

**ஆ.வேளாண்மை மற்றும் சகோதரத் துறை வாரியாக மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள்– வழிகாட்டு நெறிமுறைகள்**

1. **வேளாண்மைத்துறை – பொது வழிகாட்டு நெறிமுறைகள்**

i. கிராம திட்ட செயலாக்கக்குழு கண்டறிந்த தரிசு தொகுப்பு நிலங்களில் மண் பரிசோதனை செய்ய வேண்டும்.

ii. தரிசு தொகுப்பு நிலங்களில் பயிரிடக்கூடிய பலன் தரும் மர மற்றும் பழ மரக்கன்றுகளை விவசாயிகளுடன் கலந்து ஆலோசித்து தேர்வு செய்ய வேண்டும்.

iii. நுண்ணீர்ப்பாசனம் அமைக்கும் முறைகளை துளி நீரில் அதிக பயிர் திட்டக்கூறின் படி அமைத்திட வேண்டும்.

iv. 2,338 கிராம பஞ்சாயத்துகளில் வேளாண்மை மற்றும் அதன் தொடர்புடைய துறைகளின் அலுவலர்களுடன் இணைந்து முகாம்கள் நடத்தி, அம்முகாம்களில் விவசாயிகளின் தேவைகளை பூர்த்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

v. தரிசு நிலத் தொகுப்பில் உள்ள சிறு / குறு முட்புதர்களை அகற்றி சாகுபடிக்கு உரிய நிலமாகக் கொண்டுவர தேவையான ஏற்பாடுகளைச் செய்ய விவசாயிகளுக்கு உரிய ஆலோசனைகள் வழங்க வேண்டும். தரிசு நிலத் தொகுப்பில் உள்ள சிறு / குறு / அடர்ந்த முட்புதர்களை அகற்றி சாகுபடிக்கு கொண்டுவர இத்திட்டத்தில் வேளாண்மைத் துறையின் இனங்களில் தக்க நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

vi. தேர்வு செய்யப்பட்ட 2,338 கிராம பஞ்சாயத்துகளில் அமைக்கப்படும் வேளாண் முன்னேற்றக் குழுவின் செயல்பாடுகள் அனைத்தும் செவ்வனே நடைபெறவும், அக்குழுவின் செயல்பாடுகளை இக்கிராம பஞ்சாயத்துக்கள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ளவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

vii. தேர்வு செய்யப்பட்ட கிராம ஊராட்சியில் தரிசு நில தொகுப்பு அல்லாத இதர விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து திட்டங்களையும் ஒருங்கிணைத்து செயல்படுத்துதல் மற்றும் இதர திட்டப் பயனாளிகளின் விவரம் சேகரிக்க வேண்டும்.

viii. தேவையான இடுபொருட்களை உரிய நேரத்தில் கிராமக் கூட்டங்கள் வாயிலாக பயனாளிகளுக்கு வழங்க வேண்டும்.

ix. அறுவடை மற்றும் சந்தைப்படுத்தும் வரை விவசாயிகளுடன் ஒருங்கிணைந்து திட்டத்தை செயல்படுத்த வேண்டும்.

x. இத்திட்டத்திற்குத் தேவையான இடுபொருட்கள் வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் விநியோகம் செய்யப்பட வேண்டும்.

xi. எதிர்பார்க்கப்படும் வேளாண் விளைபொருட்களின் மகசூல் விவரங்களை, வேளாண்மை விற்பனைத் துறைக்கு வழங்கி சந்தைப்படுத்த வழிவகை செய்ய வேண்டும்.

xii. தேர்வு செய்யப்படும் கிராம ஊராட்சி விவசாயிகள், அரசின் ஒன்றிற்கு மேற்பட்ட திட்டங்களில் பயன்பெறலாம்.

xiii. அட்மா திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் பண்ணைப் பள்ளி, பயிற்சி, கண்டுணர் சுற்றுலா, செயல்விளக்கங்கள் போன்ற செயல்பாடுகளை இத்திட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் செயல்படுத்திடல் வேண்டும்.

xiv. கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் மொத்தக் கூறுகளையும் ஒருங்கிணைத்து செவ்வனே செய்திடல் வேண்டும்.

xv. வேளாண்மை உதவி இயக்குநர் பதவியின் பெயரில் தரிசு நிலத் தொகுப்பிற்கு மின் இணைப்பு பெற்று உரிய காலத்தில் மின் நுகர்வுக் கட்டணம் செலுத்திட வேண்டும்.

xvi. தரிசு நிலத் தொகுப்பு நிலங்களை சாகுபடிக்குக் கொண்டு வந்து தொடர்ந்து விளைநிலங்களாக பராமரித்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**2. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை– பொது வழிகாட்டு நெறிமுறைகள்:**

i. கிராம திட்ட செயலாக்கக் குழுவினால் கண்டறியப்பட்ட தரிசு நிலத் தொகுப்பு நிலங்களில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்வதற்கு ஆய்வு செய்து, வழிவகை செய்ய வேண்டும்.

ii. கிராம திட்ட செயலாக்கக்குழு கண்டறிந்த தரிசு நிலத் தொகுப்பு நிலங்களில் மண் பரிசோதனை செய்ய வேண்டும்.

iii. தரிசுநில தொகுப்புகளில் உள்ள சிறு/குறு முட்புதர்களை அகற்றி சாகுபடிக்கு உகந்த நிலமாகக் கொண்டு வரத் தேவையான ஏற்பாடுகளை செய்ய விவசாயிகளுக்கு உரிய ஆலோசனைகள் வழங்க வேண்டும்.

iv. தேர்வு செய்யப்பட்ட கிராம பஞ்சாயத்துகளில் தரிசு நில தொகுப்பு அல்லாத இதர விவசாயிகளுக்கு தேவையான திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் இதர திட்ட பயனாளிகளின் விவரம் சேகரிக்க வேண்டும் .

v. தரிசுநில தொகுப்புகளில் பயிரிடக்கூடிய தோட்டக்கலைப் பயிர்களை விவசாயிகளுடன் கலந்து ஆலோசித்து தேர்வு செய்து, சாகுபடி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

vi. நுண்ணீர்ப்பாசனம் அமைக்கும் முறைகளை துளி நீரில் அதிக பயிர் திட்டக்கூறின் படி அமைத்திட வேண்டும்.

vii. தேவையான இடுபொருட்களை உரிய நேரத்தில் கிராமக் கூட்டங்கள் வாயிலாக பயனாளிகளுக்கு வழங்க வேண்டும்.

viii. அட்மா திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் பண்ணைப்பள்ளி, பயிற்சி, கண்டுணர் சுற்றுலா, செயல் விளக்கங்கள் போன்ற செயல்பாடுகளை இத்திட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் செயல்படுத்திட வேண்டும்.

ix. எதிர்பார்க்கப்படும் தோட்டக்கலை விளைபொருட்களின் மகசூல் விவரங்களை வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறைக்கு வழங்கி உழவர் சந்தை மூலம் சந்தைப்படுத்த வழிவகை செய்ய வேண்டும்.

x. அறுவடை மற்றும் சந்தைப்படுத்தும் வரை விவசாயிகளுடன் ஒருங்கிணைந்து திட்டத்தை செயல்படுத்த வேண்டும்.

xi. தேர்வு செய்யப்படும் கிராம ஊராட்சி விவசாயிகள், அரசின் ஒன்றிற்கு மேற்பட்ட திட்டங்களில் பயன்பெறலாம்.

xii. கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்வளர்ச்சித் திட்டத்தின் மொத்தக் கூறுகளையும் ஒருங்கிணைத்து செவ்வனே செயல்படுத்த வேண்டும்.

xiii. தோட்டக்கலை உதவி இயக்குநர் பதவியின் பெயரில் தரிசுநிலத் தொகுப்பிற்கு மின் இணைப்பு பெற்று உரிய காலத்தில் மின் நுகர்வு கட்டணம் செலுத்திட வேண்டும்.

xiv. தரிசுநில தொகுப்புகளை சாகுபடிக்குக் கொண்டு வந்து தொடர்ந்து விளை நிலங்களாக பராமரித்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**<u>கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் தொகுப்புகளுக்கு நுண்ணீர் பாசனம் அமைப்பதற்கான வழிமுறைகள்</u>**

i. MIMIS வலைதளத்தில் குழு பதிவு மற்றும் விவசாயிகள் பதிவு ஆகியவை சம்பந்தப்பட்ட பொறுப்பு அலுவலரின் (Nodal officer) உதவி இயக்குநரால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ii. சம்பந்தப்பட்ட வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலர்களால் உருவாக்கப்பட்ட ஆழ்துளைக் கிணற்றின் நீர்வரத்து அறிக்கையினை பொறுப்பு அலுவலரின் வட்டார அளவிலான உதவி இயக்குநரிடம் வழங்க வேண்டும்.

iii. பொறுப்பு அலுவலர், பொறுப்பு அலுவலரின் வட்டார அளவிலான உதவி இயக்குநர், வட்டார அளவிலான வேளாண் பொறியியல் துறை பொறியாளர் மற்றும் சம்பந்தப்பட்ட நுண்ணீர் பாசன நிறுவனத்தார் ஆகியோர் அடங்கிய குழு, தொகுப்பில் கிடைக்கப் பெற்ற நீரின் அளவு குறித்து ஆய்வு செய்து, அந்நிலத்தின் சூழலுக்கு உகந்த பல்லாண்டுப் பயிரினை தேர்வு செய்தல் வேண்டும்.

iv. அதன் அடிப்படையிலேயே நுண்ணீர்ப் பாசன வரைபடம் (Layout) மற்றும் அதற்குண்டான விலைப்புள்ளி (Quotation) தயார் செய்யப்பட வேண்டும். இதனைத் தொகுப்பின் விவசாயிகளிடம் தெரிவித்து, இதற்கான குழுத் தீர்மான நகலினை MIMIS வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

v. தொகுப்பின் விலைப்புள்ளியானது நுண்ணீர்ப் பாசனத் திட்டத்தின் நிதி, துணைநீர் மேலாண்மை செயல்பாடுகள் திட்ட நிதி, வேளாண்மைப் பொறியியல் துறையின் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட நிதி மற்றும் விவசாயிகளின் பங்களிப்புத் தொகை போன்றவற்றை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

vi. இவ்வாறு தயார் செய்யப்பட்ட விலைப்புள்ளி பட்டியலில் பொறுப்பு அலுவலர், பொறுப்பு அலுவலரின் வட்டார உதவி இயக்குநர், வட்டார அளவிலான பொறியாளர் இணைந்து ஒப்புதல் கையொப்பமிட்டு MIMIS இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

vii. பணி முடிவுற்ற பிறகு சம்பந்தப்பட்ட பொறுப்பு அலுவலர், பொறுப்பு அலுவலரின் வட்டார உதவி இயக்குநர், வேளாண்மைப் பொறியியல் துறை உதவிப் பொறியாளர் / இளநிலை பொறியாளர்கள் / உதவி செயற்பொறியாளர் (வே.பொ) மற்றும் சம்பந்தப்பட்ட தரிசு நிலத்

தொகுப்பில் உள்ள விவசாயிகளுடன் சேர்ந்து கூட்டாய்வின் மூலம் பணி முடிக்கப்பட்டுள்ளதை உறுதி செய்ய வேண்டும்.

viii. அதன் கூட்டாய்வு அறிக்கையினுடன் அனைவருடனும் சேர்ந்து புவியியல் குறியீடு (latitude-longitude), தேதி மற்றும் நேரம் குறிப்பிட்டுள்ளவாறு புகைப்படத்தை MIMIS வலைதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

ix. தரிசு நில தொகுப்புகளில் அமைக்கப்பட்ட ஆழ்துளைக் கிணறுகளில் ஏற்படும் குறைபாடுகள் தொடர்புடைய தொழில்நுட்ப அறிவுரைகளை வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலர்கள், பொறுப்பு அலுவலர், பொறுப்பு அலுவலரின் வட்டார உதவி இயக்குநர்கள் அவ்வப்போது விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்.

x. குழுவில் அமைக்கப்பட்ட நுண்ணீர்ப்பாசன அமைப்புகள் சம்பந்தப்பட்ட நுண்ணீர் பாசன நிறுவனங்களால் குறைந்த பட்சம் மூன்று வருடங்கள் பராமரிக்கப்பட வேண்டும்.

xi. தோட்டக்கலைப் பயிர்களுக்கான தொழில்நுட்ப அறிவுரைகளை சம்மந்தப்பட்ட பொறுப்பு அலுவலருக்கு அப்பகுதி உதவி தோட்டக்கலை அலுவலர் வழங்க வேண்டும்

xii. ஏனையவை, துளி நீரில் அதிக பயிர் – நுண்ணீர்ப் பாசன திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி செயல்படுத்தப்பட வேண்டும்.

**3. வேளாண்மைப் பொறியியல் துறை – பொது வழிகாட்டு நெறிமுறைகள்:**

i. கிராம திட்ட செயலாக்கக் குழு கண்டறிந்த தரிசு நிலத்தொகுப்பு விவசாயிகளுடன் ஆலோசனை செய்ய வேண்டும்.

ii. தொகுப்பில் உள்ள தரிசு நிலங்களில் நிலநீர் ஆய்வின் மூலமாக நீர்வள ஆதாரம் கண்டறிந்து, திட்ட மதிப்பீடு தயாரிக்க வேண்டும்.

iii. தொகுப்பில் உள்ள தரிசு நிலங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் நீர்வள ஆதாரம் இருப்பின் ஆழ்துளை/ குழாய்க் கிணறு அமைத்து மின்/சூரியசக்தி இணைப்பு பெற வழிவகை செய்து பம்புசெட்டுகளுடன் தேவையான கட்டமைப்புகளை ஏற்படுத்த வேண்டும்.

iv. இத்திட்டத்தில் மேற்கொள்ளப்படும் அனைத்துத் திட்டப் பணிகளுக்கான மதிப்பீடுகள் கள ஆய்வின் மூலம் தயாரிக்கப்பட்டு, தொழில்நுட்ப அடிப்படையில் சரிபார்க்கப்பட்டு, உதவி செயற்பொறியாளர் (வே.பொ)/ செயற்பொறியாளர் (வே.பொ)களால் உரிய அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும்.

v. மேற்படி பணிகள் உரிய அலுவலர்களால் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு (Tamil Nadu Transparency in Tenders Act, 1998 & Rule 2000, 2012-ன் படி) பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

vi. இத்திட்டத்தின் அனைத்து பணிகளும் நடைபெறும் பொழுது பல்வேறு நிலைகளில் உதவி செயற்பொறியாளர் (வே.பொ)/ செயற்பொறியாளர் (வே.பொ)/ கண்காணிப்புப் பொறியாளர் (வே.பொ) ஆகியோர்களால் அவற்றின் தரம் மற்றும் முன்னேற்றம் குறித்து கண்காணிக்கப்பட வேண்டும்.

vii. மேற்கொள்ளப்படும் பணிகளின் அனைத்து நிலைகளிலும் புகைப்படம் எடுத்து ஆவணப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். தொகுப்புகளில் உருவாக்கப்படும் நீர் ஆதார அமைப்புகள் (ஆழ்துளை/ குழாய்/ திறந்தவெளிக் கிணறு) சம்பந்தப்பட்ட வேளாண்மை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை உதவி இயக்குரிடம் பாசன நீர்க் குழாய்கள் மற்றும் நுண்ணீர்ப் பாசனம் அமைத்திட ஒப்படைக்கப்பட வேண்டும்.

viii. இத்திட்டத்தில் வேளாண்மைப் பொறியியல் துறையால் மேற்கொள்ளப்படும் அனைத்துப் பணிகளும் Geo – tagging செய்யப்பட வேண்டும்.

ix. வேளாண்மைத் துறை/ தோட்டக்கலைத் துறையால் உருவாக்கப்படும் தரிசுநிலத் தொகுப்புக் குழுக்களில் உள்ள விவசாயிகளுக்கும் வேளாண்மைப் பொறியியல் துறைக்கும், இடையிலேயான கூட்டு ஒப்பந்தம் வேளாண்மைத் துறை/ தோட்டக்கலைத் துறை பொறுப்பு அலுவலர் முன்னிலையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

x. ஒவ்வொரு தொகுப்பிலும் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் மேற்கொள்ளப்படும் பணி குறித்த விவரங்கள் உதவி செயற்பொறியாளர் (வே.பொ) அலுவலகத்தில் தனியாக ஒரு பதிவேட்டில் பராமரிக்கப்பட வேண்டும்.

xi. தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுப்புகளில் உருவாக்கப்பட்ட கிணறுகளிலிருந்து கிடைக்கப்பெறும் நீரின் அளவைப் பொறுத்து, தொகுப்பில் உள்ள விவசாயிகளின் நிலப்பரப்பிற்கு ஏற்றவாறும், வேளாண்மைத் துறை/ தோட்டக்கலைத் துறையினரால் பரிந்துரைக்கப்படும் பயிர்களுக்கு ஏற்பவும் – நீர்ப்பங்கீடு செய்வதற்கு ஏதுவாக தரிசு நிலத்தொகுப்பு குழுவிற்கு சம்பந்தப்பட்ட உதவி செயற்பொறியாளர் (வே.பொ)களால் உரிய அறிவுரைகள் வழங்கப்பட வேண்டும்.

xii. திட்ட செயலாக்கத்தின் போது திட்ட வழிகாட்டு நெறிமுறைகளைத் தவறாது பின்பற்ற வேண்டும்.

**4. வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை – பொது வழிகாட்டு நெறிமுறைகள்:**

i. கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட கிராமங்களில், 2025–26 ஆம் நிதி ஆண்டில் உலர்களத்துடன் கூடிய தரம்பிரிப்புக் கூடங்கள் ஏற்படுத்தப்படும்.

ii. இப்பணிகள் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய பொறியியல் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும்.

iii. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையில் பெறப்படும் நிதியினை தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய வைப்பு நிதியில் (TNSAMB – PD Account) நிர்வகிக்கப்படும்.

**5. சர்க்கரைத்துறை – பொது வழிகாட்டு நெறிமுறைகள்:**

i. புதிய கரும்பு இரகங்களைப் பெருக்கம் செய்து விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்.

ii. கூட்டுறவு மற்றும் பொதுத்துறை ஆலைப் பகுதிகளில் செயலாட்சியர் / தலைமை நிர்வாகிகள் மூலமாகவும், தனியார் சர்க்கரை ஆலைப் பகுதிகளில் வேளாண்மைத் துறையின் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்கள் மூலமாகவும் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும். இதற்கான ஆலைவாரியான, மாவட்ட வாரியான இலக்குகள் சர்க்கரைத்துறை ஆணையரால் பிரித்தளிக்கப்பட வேண்டும்.

**6. விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்ம சான்றளிப்புத்துறை – பொது வழிகாட்டு நெறிமுறைகள்:**

i. கிராம பஞ்சாயத்துகளில் அமைக்கப்பட்டுள்ள விதைப்பண்ணைகளுக்கு விதைச்சான்றளிப்புப்பணி மேற்கொண்டு விதைச்சான்று அளிக்க வேண்டும்.

ii. விதைப்பண்ணை விவசாயிகளுக்கு வேளாண்மைத்துறையுடன் இணைந்து தரமான விதை உற்பத்தி குறித்து பயிற்சி அளிக்க வேண்டும்.

iii. கிராமப் பஞ்சாயத்துகளில் உள்ள விதை விற்பனை நிலையங்களை தீவிர கண்காணிப்புப்பணி மேற்கொண்டு தரமான விதைகள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

iv. உயிர்ம வேளாண்மை செய்யும் விவசாயிகள் மற்றும் விவசாயக் குழுக்களுக்கு உயிர்ம சான்றளிப்புப் பயிற்சி வழங்கி உயிர்ம சான்றளிப்பில் பதிவு செய்து உயிர்ம சான்றிதழ் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**7. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் – பொது வழிகாட்டு நெறிமுறைகள்:**

i. வேளாண் அறிவியல் நிலைய தொழில் நுட்ப வல்லுநர்களைக் கொண்டு தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில், வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் விற்பனை மற்றும் சர்க்கரைத்துறையுடன் ஒருங்கிணைந்து விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி, விழிப்புணர்வு முகாம்களில் தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்க வேண்டும்.

ii. திட்டம் செயல்படுத்தப்படும் கிராமங்களுக்கு, வயல்வெளிப் பயிற்சி பெற இளங்கலை வேளாண்மை நான்காம் ஆண்டு பயிலும் மாணவர்களை அனுப்பிடவேண்டும்.

iii. 2,338 கிராமப் பஞ்சாயத்துகளில் வேளாண் / தோட்டக்கலை / வேளாண்மை பொறியியல் இளங்கலை இறுதி ஆண்டு மாணவர்களை கொண்டு (கிராமப்புரப் பயிற்சி) ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை, ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை, விதை நேர்த்தி, விதை கடினப்படுத்துதல், இயற்கை வேளாண்மை, உயிர்ம வேளாண்மை தொடர்பாக பயிற்சிப் பட்டறை / பயிலரங்கம் நடத்தி விவசாயிகளை நல்வழிப்படுத்த வேண்டும்.

வ. தட்சிணாமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

## இணைப்பு – III

## கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட தரிசு நிலத் தொகுப்பு மேம்பாடு திட்ட செயலாக்க வழிமுறைகள் 2025-2026

### அ. தரிசு நிலத் தொகுப்புகள் அமைக்கும் முன் மேற்கொள்ள வேண்டிய பணிகள்

1. **கிராம திட்ட செயலாக்க குழு அமைத்தல்:**

- இத்திட்டம் சிறப்புற செயல்படுத்திட தேர்வு செய்யப்பட்ட கிராமப் பஞ்சாயத்தில் பணிபுரியும் வேளாண்மை மற்றும் வேளாண்மை தொடர்புடைய துறைகளின் அலுவலர்களைக் கொண்டு கிராம திட்ட செயலாக்க குழு அமைக்கப்பட்டுள்ளது.
- அச்செயலாக்கக் குழுவிற்கு வேளாண்மை அலுவலர் / தோட்டக்கலை அலுவலர் / துணை வேளாண்மை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர் தலைவராக செயல்படுவார்.
- தேர்வு செய்யப்பட்ட ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்திற்கும் உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர் / உதவி விதை அலுவலர் / உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்) இவர்களில் ஒருவரை கிராம அளவிலான திட்ட பொறுப்பு அலுவலராக (Nodal Officer) நியமிக்கப்பட்டுள்ளனர்.

2. **கிராம திட்ட செயலாக்கக் குழுவின் கூட்டம் நடத்துதல்:**

- குழுவின் தலைவர் கிராம திட்ட செயலாக்கக் குழுவைக் கூட்டி, தேர்வு செய்யப்பட்ட கிராமப் பஞ்சாயத்தில் இத்திட்டத்தின் நோக்கம், முக்கிய அம்சங்கள், திட்ட செயல்பாடுகள், அனைத்துத் துறைகளின் பங்கேற்பின் மூலம் கிராமத் தன்னிறைவு பெற்றிட திட்ட விபரங்களை எடுத்துரைக்க வேண்டும்.
- பின்னர், அக்கிராமப் பஞ்சாயத்தில் தரிசு நிலத் தொகுப்பு அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க வேண்டும்.

3. **அடிப்படைப் புள்ளி விபரங்கள் சேகரித்தல்:**

- திட்டத்தில் கிராமப் பஞ்சாயத்துகள் தேர்வு செய்யப்பட்டவுடன், சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் / அலுவலர்களிடம் இருந்து கிராம வரைபடத்தையும், "அ" பதிவேட்டையும் பெற்று, இதர தரிசு (other fallow) என்ற பிரிவின் கீழ், ஓராண்டுக்கு மேல், ஐந்து ஆண்டுகள் வரை சாகுபடி செய்யப்படாமல் உள்ள நிலங்களையும், சாகுபடிக்கு லாயக்கான தரிசு (Cultivable waste) என்ற பிரிவின் கீழ், ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக சாகுபடி செய்யப்படாத நிலங்களையும், சர்வே எண் வாரியாகவும், விவசாயிகள் வாரியாகவும் சேகரிக்க வேண்டும்.

- கிராமப் பஞ்சாயத்துக்களில் கீழ் உள்ள வருவாய் கிராமங்கள் மற்றும் குக்கிராமங்களில் உள்ள தரிசு நில ஆய்விற்கு, அந்தக் கிராமங்களில் வசித்துவரும் ஓய்வு பெற்ற கிராமமுனுசீப், கிராம கணக்காளர், கிராம உதவியாளர் மற்றும் முன்னோடி விவசாயிகளின் உதவியை நாடலாம்.
- கிராமப் பஞ்சாயத்துகளில் உள்ள அனைத்து தரிசு நிலங்களையும் பொறுப்பு அலுவலர்கள் நேரிடையாக ஆய்விட வேண்டும். அவ்வாறு ஆய்வு செய்யும்போது, சிறு மலைக்குன்றுகள் இருந்தால் மலைக் குன்றுகளுக்கு இடையில் உள்ள தரிசுநிலங்களையும் விடுபடாமல் கணக்கில் எடுத்துக்கொண்டு, தொகுப்பு அமைக்க வேண்டும். எக்காரணம் கொண்டும், கிராமப் பஞ்சாயத்துக்களில் உள்ள தரிசு தொகுப்பு நிலங்கள் விடுபட்டுவிடக்கூடாது.
- பெறப்பட்ட புள்ளிவிவரங்கள் அடிப்படையிலும் கிராம செயலாக்கக் குழுக் கூட்டத்தில் பெறப்பட்ட ஆலோசனையின் அடிப்படையிலும் பொறுப்பு அலுவலர் கிராமப் பஞ்சாயத்தில் உள்ள தரிசு நிலங்களை சம்பந்தப்பட்ட விவசாயிகளுடன் நேரில் பார்வையிட வேண்டும்.
- பெறப்பட்ட புள்ளி விபரங்களின் அடிப்படையில் 10 லிருந்து 15 ஏக்கர் வரை தொகுப்பாக உள்ள தரிசு நிலங்களையும் 10 ஏக்கருக்குக் குறைவான பரப்பு கொண்ட தரிசு நிலங்களையும் தனித்தனியாக பிரிக்க வேண்டும்.
- 10 லிருந்து 15 ஏக்கர் வரை தரிசு நிலங்களைத் தொகுப்புகளாக அமைக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
- தரிசு நிலங்களில் உள்ள முட்புதர்களை அகற்றி சாகுபடிக்கு கொண்டுவரும் நோக்கில் மாநில / ஒன்றிய / ஒன்றிய மற்றும் மாநில நிதிப் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் இதர திட்டங்களில் வழங்கப்பட்டுள்ள நிதி உதவி மூலம் மேற்கொள்ளலாம்.

4. <u>தரிசு நிலத் தொகுப்புகளுக்கான தகுதிகள்:</u>

- தரிசு நிலங்கள் 10 முதல் 15 ஏக்கர் வரை தொடர்ச்சியாக இருக்க வேண்டும். நிலவகைப்பாட்டில் உள்ள இதர தரிசு நிலங்கள் மற்றும் பயிரிடுவதற்கேற்ற தரிசு நிலங்கள் சாகுபடிக்கு கொண்டுவர வேண்டும். நடப்பு தரிசு நிலங்களை இத் தரிசு நிலத் தொகுப்பிற்குள் சேர்க்கக்கூடாது.
- தரிசு நிலங்கள் தொடர்ச்சியாக ஒரே இடத்தில் இல்லாத பட்சத்தில், இடையில் உள்ள 2 முதல் 3 ஏக்கர் வரையிலான விளை நிலங்கள் இருந்தால், அதையும் சேர்த்து, தரிசு நலத் தொகுப்போடு கணக்கிட்டுக் கொள்ளலாம். அவ்வாறு சேர்த்துக்கொள்ளப்பட்ட விளை நிலங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட நீர் ஆதாரத்தில் இருந்து நீர்ப் பங்கீட்டினைத் தவிர்க்க வேண்டும்.
- 10 ஏக்கருக்கும் குறைவாகவே உள்ள தரிசு நிலங்கள் கிராமங்களில் அதிக அளவில் இருப்பதாகத் தெரிய வரும் நிலையில், கிராம நிர்வாக

அலுவலர் அல்லது அலுவலர்களிடம் இருந்து 10 லிருந்து 15 ஏக்கர் வரை தரிசு நிலத் தொகுப்புகள் ஏதும் இக்கிராமங்களில் ஒரே இடத்தில் அமையவில்லை என்பதற்கான சான்றினை உரிய படிவத்தில் பெற்றுப் பராமரிக்க வேண்டும்.

- ஒவ்வொரு தரிசு நில தொகுப்பும் குறைந்தபட்சம் 8 விவசாயிகள் கொண்டதாக இருக்க வேண்டும்.
- தரிசு நில தொகுப்பு விவசாயிகள் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும்.

| வ. எண் | தொகுப்பு நிலத்திற்குள் அடங்கும் விவசாயி பெயர் மற்றும் தகப்பனார் பெயர் | சிறு / குறு / இதர விவசாயி | ஆதி திராவிடர் / பழங் குடியினர் / மிகவும் பிற்படுத்தப் பட்டோர் / சிறு பான்மையினர் | தொகுப்பு நிலத்திற்கு உட்பட்ட புல எண்கள் | பரப்பு (ஏக்கர் ) | நில வகைப் பாடு (நஞ்சை/ புஞ்சை/ மானாவாரி) | நில உரிமை யாளர் பெயர் (நடப்பு கணினி – அ பதிவேடு படி) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | மொத்தம் | | | |

- தரிசு நிலத்தொகுப்பில் உள்ள ஒரு விவசாயி இத்திட்டத்தின் கீழ் அதிகபட்சமாக 2 ஏக்கர் வரை மட்டுமே பயன் பெற இயலும்.
- தரிசுநிலத் தொகுப்பு அமைப்பதில் ஆதிதிராவிடர், பழங்குடியினர், மிகவும் பிற்பட்ட வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினருக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.
- தரிசு நிலத் தொகுப்புகளில் உள்ள மண் வளத்தினை அறிய, மண் பரிசோதனை வேளாண் துறையால் மேற்கொள்ளப்படும்.

5. <u>நிலத்தடி நீர் ஆய்வு (Geo–Physical Survey):</u>

- தரிசு நிலத் தொகுப்புகள் ஏற்படுத்தப்பட்ட பின் அத்தொகுப்பு தொடர்பான விபரங்களை (விவசாயியின் பெயர் வாரியாக, பரப்பு மற்றும் சர்வே எண், அமைந்துள்ள குக்கிராமம்) சம்மந்தப்பட்ட உதவி செயற் பொறியாளர் (வேளாண் பொறியியல்) அவர்களிடம் அளித்து நிலத்தடி நீர் ஆய்வு மேற்கொள்ள கேட்டுக்கொள்ள வேண்டும்.
- வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் நிலத்தடி நீர் ஆய்வு உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

- ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பெறப்பட்ட அறிக்கையினை சம்பந்தப்பட்ட வேளாண்மை உதவி இயக்குனர் / தோட்டக்கலை உதவி இயக்குனருக்கு வழங்கிட வேண்டும்.
- அறிக்கையின் அடிப்படையில் அத்தொகுப்பினை சங்கங்களாகப் பதிவு செய்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

6. <u>தரிசு நில சங்கங்கள் பதிவு செய்தல் மற்றும் செயல்பாடுகள்:</u>

**பதிவு செய்தல்:**

- தகுதிவாய்ந்த தரிசு நிலத் தொகுப்புகள் 1975–ஆம் ஆண்டின் தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டத்தின் கீழ் சங்கங்களாக சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும்.
- தரிசு நிலத் தொகுப்பினை பதிவு செய்வதற்கு கீழ்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
  - ஆழ்துளை/குழாய்க் கிணறு / திறந்தவெளி கிணறு அமையவுள்ள தரிசு நிலத் தொகுப்புகளில் உள்ள விவசாயிகளிடம் ஆதார் அடையாள அட்டை, நிரந்தர கணக்கெண் (PAN Card) போன்ற ஆவண நகலினைப் பெற வேண்டும்.
  - தரிசு நிலத் தொகுப்பிற்கு ------------(கிராம பஞ்சாயத்து பெயர் சேர்த்து ) தரிசு நிலத்தொகுப்புக் குழு என்று பெயரிடப்பட வேண்டும்.
  - தரிசு நிலத் தொகுப்புக் குழுவில் உள்ள விவசாயிகள் அனைவரும் கூடி, தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.
  - தரிசு நிலத் தொகுப்பின் பெயரில் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளரைக் கொண்டு அருகில் உள்ள வங்கியில் ஒரு கூட்டு வங்கிக்கணக்கு (நடப்பு / சேமிப்பு) தொடங்க வேண்டும்.
  - பதிவு விண்ணப்பத்தில் சாட்சிக் கையொப்பம் இட இரண்டு நபர்களைத் தேர்வு செய்து அவர்களின் அடையாளத்திற்கான அட்டை நகலினையும் பெற வேண்டும்.
  - அவ்வாறு பதிவு செய்யப்பட்ட தரிசுநிலத் தொகுப்புக் குழு உறுப்பினர்கள் அனைவரும் சங்கத்தின் அனைத்து விதமான செயல்பாடுகளில் தவறாது பங்கேற்க வேண்டும்.
  - பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் பதிவுச்சான்று நகலினை சம்மந்தப்பட்ட உதவி செயற்பொறியாளர் (வேபொ) அவர்களிடம் அளிக்கவேண்டும்.

**செயல்பாடுகள்:**

i. ஒவ்வொரு குழு உறுப்பினரும் மாதம் ஒன்றுக்கு குறைந்த பட்சம் ரூ.100/– என்ற அளவில் வங்கிக்கணக்கில் செலுத்தி சேமித்திட வேண்டும் (பின்னர் இத்தொகை ஏற்படுத்தப்பட்ட நீர் ஆதார கட்டமைப்புகளின் பராமரிப்பு செலவிற்கு பயன்படுத்தப்படும்).

ii. மாதம் ஒரு முறை, தரிசு நில சங்க உறுப்பினர்களை அழைத்து, கூட்டத்தினை நடத்த வேண்டும். அக்கூட்டத்தில் தரிசு நில சங்க நிர்வாகம் தொடர்பான அனைத்து விபரங்களையும் விவாதித்து, கூட்ட நடவடிக்கைகளையும், நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும் கூட்ட நடவடிக்கைப் பதிவேட்டில் பதிவிட வேண்டும்.

iii. ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரம் மாதம் 1–ஆம் தேதி கணக்குகள் துவங்கப்பட்டு அடுத்த ஆண்டு மார்ச் 31–ஆம் தேதியில் முடிக்கப்பட வேண்டும்.

iv. சங்கத்தின் ஒவ்வொரு நிதியாண்டு முடிந்ததும் அந்த நிதியாண்டின் கணக்குகள் தணிக்கை செய்யப்பட வேண்டும்.

v. மேலும், சங்கத்தினை வருடத்திற்கு ஒருமுறை புதுப்பித்தல் போன்ற அனைத்து நிபந்தனைகளையும் குழு பின்பற்ற வேண்டும்.

7. <u>பாசன நீர் பங்கீட்டு முறை</u>

i. தரிசு நிலத்தொகுப்பில் திறந்தவெளி பாசனம் அனுமதிக்கப்படுவதில்லை. நுண்ணீர்ப் பாசனத்தின் மூலம் மட்டுமே பாசனம் செய்யப்பட வேண்டும்.

ii. நீர் அதிகமாக தேவைப்படும் நெல், கரும்பு, வாழை, தென்னை, எண்ணெய்ப்பனை உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்ய அனுமதிக்க கூடாது.

iii. நீர் பங்கீட்டு முறையை செயல்படுத்துவதற்காக பொறுப்பு அலுவலர் (Nodal Officer), உதவி பொறியாளர்/ இளநிலைப் பொறியாளர் (வேளாண் பொறியியல்
துறை) உள்ளிட்ட அலுவலர்கள் மற்றும் விவசாயிகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட குழுவானது, தங்களுக்குள் பாசனத்திற்கான நீரைப் பயன்படுத்துவது தொடர்பாக கூடி முடிவெடுக்க வேண்டும். கிணற்றிலிருந்து கிடைக்கும் நீர் இருப்பின் அளவைப்பொருத்தும், மண்ணின் தன்மைக்கு ஏற்பவும், தட்பவெப்ப நிலைக்கு ஏற்பவும் மற்றும் ஒரு நாளுக்கு கிடைக்கும் மின் விநியோக நேரத்திற்கு ஏற்பவும் நீர் பங்கீட்டுமுறை கணக்கிடப்பட வேண்டும்.

iv. பாசனம் மேற்கொள்ளும் போது, சொட்டு நீர் பாசன கருவிகள், சூரிய ஒளி தகடுகள், மின் இணைப்பு மற்றும் மோட்டார்களில் ஏற்படும் குறைபாடுகளுக்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களைத் தொடர்பு கொண்டு உத்திரவாத காலத்திற்குள் இருப்பின், நிவர்த்தி செய்வதற்கு குழு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

v. சொட்டு நீர்ப் பாசனம் அமைத்து, சாகுபடி செய்யப்படும் மர/பழ மரங்களின் நீர் தேவைக்கு ஏற்றவாறும், விவசாயிகளின் பாசனப் பரப்பிற்கு ஏற்றவாறும் நீர் பங்கீடு செய்யப்பட வேண்டும்.

vi. கிணற்றிலிருந்து கிடைக்கும் நீரின் அளவைப்பொருத்து தொகுப்பிலுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் பாசன நீர் கிடைக்கும் பொருட்டு, சுழற்சி (Rotation) முறையைக் கடைப்பிடித்து பாசன நீர் வழங்கலாம். அவ்வாறு சுழற்சி முறையைக் கடைபிடிக்கும் போது ஆழ்துளை / குழாய்க் கிணறு

அமைந்துள்ள இடத்திலிருந்து தொலைவில் உள்ள விவசாயிகளின் நிலங்களுக்கு முன்னுரிமை கொடுத்து பாசன நீர் வழங்கப்பட வேண்டும்.

vii. மேலும் சிறுதானியங்கள், பயறுவகைப் பயிர்கள், எண்ணெய்வித்துப் பயிர்கள் உள்ளிட்ட குறுகிய கால மற்றும் மானாவாரிப் பயிர்களை ஊடுபயிராக சாகுபடி மேற்கொள்ள வேண்டும். அத்தகைய பயிர்களுக்கு கிணற்றில் இருந்து கிடைக்கும் நீரினை பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

viii. பருவ மழைக் காலங்களில் மழைநீரை முறையாக சேகரித்து, அவற்றின் மூலம் ஊடுபயிராக மானாவாரிப் பயிர்கள் சாகுபடி மேற்கொள்ளப்பட வேண்டும்.

ix. மேலே கூறப்பட்டுள்ள நீர் பங்கீட்டு முறைகளில், ஒவ்வொரு தரிசுநிலத் தொகுப்பு நிலங்களில் நிலவும் கள சூழ்நிலைக்கு ஏற்றவாறு சிறு மாற்றங்கள் செய்து பாசன நீரை பங்கிட்டு வழங்கலாம். சுருங்கக்கூறின் நீர் பங்கீட்டு விநியோகம் தொகுப்பில் உள்ள அனைத்து நிலங்களுக்கும் சம நிலை பங்கீட்டு முறையில் (Equity distribution) பாசன நீர் வழங்கப்பட வேண்டும். மேலும், சமநிலை பங்கீட்டு முறையில் பாசனம் மேற்கொள்வதற்கான கால அட்டவணை (Irrigaion Time Schedule) தயாரித்து, ஒப்பந்தம் மேற்கொண்டு அதனைத் தவறாது பின்பற்ற வேண்டும்.

8. <u>மின் இணைப்பு மற்றும் பராமரிப்பிற்கான வழிமுறைகள் ;</u>

i. மின் இணைப்புகள் வேளாண்மை உதவி இயக்குநர் / தோட்டக்கலை உதவி இயக்குநர் பெயரில் பெற வேண்டும்.

ii. மின் இணைப்புகளுக்கு மின் அளவீட்டுக் கருவி பொருத்தப்பட்டு மின் நுகர்வு கணக்கிடப்படும்.

iii. அத்தகைய மின் நுகர்விற்கான கட்டணத்தினை 2401 – 00 – 104 AG 30503 கணக்குத் தலைப்பில் வேளாண்மை உதவி இயக்குநர் / தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலர்களுக்கு உரிய நிதி வழங்கப்படும்.

iv. மின் கட்டணத்தினை உரிய தேதியில் தவறாது செலுத்த வேண்டும்.

v. ஒவ்வொரு காலாண்டும் வேளாண்மை உதவி இயக்குநர் அல்லது தோட்டக்கலை உதவி இயக்குநர் தரிசு நிலத் தொகுப்பிற்கு வருகை புரிந்து மின்மோட்டார் இயங்குவதை ஆய்வு செய்ய வேண்டும்.

9. <u>அறுவடை மற்றும் சந்தைப்படுத்துதலுக்கான வழிமுறைகள் :</u>

i. அறுவடைக்குத் தேவையான இயந்திரங்களை உரிய நேரத்தில் ஏற்பாடு செய்து தர வேண்டும்.

ii. அறுவடையான வேளாண் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைத்திடும் பொருட்டு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அல்லது உழவர் சந்தையில் விற்பனை மேற்கொள்ள தரிசு நில சங்கக் குழு ஊக்குவிக்கப்பட வேண்டும்.

iii. மதிப்பு கூட்ட வாய்ப்புள்ள வேளாண் விளைபொருட்களுக்கு மதிப்பு கூட்டி விற்பனை மேற்கொள்ள வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மூலம் உரிய ஏற்பாடுகள் செய்து தர வேண்டும்.

வ. தட்சிணாமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

## இணைப்பு – IV

## துறை வாரியான மற்றும் இனம் வாரியான வழிகாட்டு நெறிமுறைகள்

### I) வேளாண்மைத் துறை திட்டத்தின் இனவாரியான வழிகாட்டு நெறிமுறைகள்

1. **தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றுதல்**

அ. தரிசு நிலத் தொகுப்பில் முட்புதர்களை அகற்றி சமன் செய்து உழுதல்

i. வேளாண்மை – உழவர் நலத் துறையில் உள்ள பொறுப்பு அலுவலர்களால், தேர்வு செய்யப்பட்ட கிராமப் பஞ்சாயத்துகளில் இதர தரிசு நிலங்கள் மற்றும் பயிரிடுவதற்கு ஏற்ற தரிசு நிலங்களை தொகுப்புகளாக ஏற்படுத்தி அந்நிலத்தில் உள்ள முட்புதர்கள்/ மரங்கள்/ சிறுகற்களை போன்றவற்றை நீக்குவதற்காகவும் நிலத்தினை சமன் செய்து உழுவதற்காகவும் இவ்வினத்தில் நிதி உதவி அளிக்கப்படுகிறது.

ii. விவசாயிகள் தாங்களாகவோ அல்லது வாடகை இயந்திரங்கள் மூலமாகவோ தங்கள் நிலத்தில் உள்ள முட்புதர்கள்/மரங்கள்/ சிறுகற்களை நீக்கி, சமன் செய்து, உழவு மேற்கொள்ள இவ்வினத்தின் கீழ் அனுமதிக்கப்படுகிறது.

iii. மேற்கண்ட பணிகளுக்கு எக்டர் ஒன்றிற்கு 50% மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.9,600/- வரை பின்னேற்பு மானியமாக விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

iv. முட்புதர்களை அகற்றி, நிலத்தினை சமன்செய்து உழவுப்பணி மேற்கொண்டபின் நீர் ஆதாரங்களை ஏற்படுத்துவதற்கு முன் உள்ள கால இடைவெளியில் பருவமழையின் உதவியுடன் குறுகிய கால வேளாண் பயிர்களை சாகுபடி செய்ய வேளாண்மை-உழவர் நலத் துறையின் கீழ் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைப்புத் திட்டங்கள் மூலம் சாகுபடி மேற்கொள்ள வழிவகை செய்யவேண்டும்.

v. நடப்பாண்டு அடங்கலில், இத்தரிசு நிலங்கள் சாகுபடி நிலங்களாக மாற்றப்பட்ட விவரம் பதிவு செய்வதை உறுதி செய்ய வேண்டும். இதற்கு ஆதாரமாக இத்திட்டம் செயல்படுத்தியதற்கு கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட முந்தைய ஆண்டு அடங்கல் நகல் மற்றும் நடப்பாண்டு அடங்கல், புகைப்பட ஆவணங்கள் இணைக்க வேண்டும்.

vi. முட்புதர்களை அகற்றி, நிலத்தினை சமன்செய்து உழவுப்பணி மேற்கொள்ள ஒவ்வொரு பணிக்கும் அனுமதிக்கப்படும் செலவினம் மற்றும் மானிய விவரம் கீழே உள்ள அட்டவணைப்படி அனுமதிக்கப்படும்.

| வ. எண் | பணி விவரம் | மொத்த விலை |
|---|---|---|
| 1. | தரிசு நிலங்களில் முட்புதர்கள் நீக்கம் (புல்டோசர் மூலம் ஒரு மணி நேரத்திற்கு ரூ.1,500/- வீதம், 5 மணி நேரத்திற்கு) | 5xரூ.1,500=ரூ.7,500/- |
| 2. | தரிசு நிலங்களை சமன்படுத்துதல் (புல்டோசர் மூலம் ஒரு மணி நேரத்திற்கு ரூ.1,500/- வீதம், 5 மணி நேரத்திற்கு) (நிலங்களை compartmental bunding ஆக அமைத்துக் கொள்ளலாம். | 5xரூ.1,500=ரூ.7,500/- |
| 3. | உழவுப்பணி மேற்கொள்ளுதல் (ஒரு மணி நேரத்திற்கு ரூ.700/- வீதம், 6 மணி நேரத்திற்கு) | 6xரூ.700=ரூ.4,200/- |
| | மொத்தம் | ரூ. 19,200/- |
| இதில் 50% மானியம் ரூ.9,600/- வழங்கப்படும் | | |
| மேற்கூறப்பட்ட பணிகளின் செலவில் மாறுபாடு இருந்தால், இவ்வினத்திற்கான மொத்த செலவில் சரிசெய்து கொள்ளலாம். | | |

**ஆ. தனிநபர் விவசாயிகளின் தரிசு நிலங்களில் முட்புதர்களை அகற்றி சமன்செய்து உழுதல்**

i. தேர்வு செய்யப்பட்ட கிராமப் பஞ்சாயத்துகளில் இதர தரிசு நிலங்கள் மற்றும் பயிரிடுவதற்கு ஏற்ற தரிசு நிலங்களை உடைய தனிப்பட்ட விவசாயிகளின் நிலத்தில் உள்ள முட்புதர்கள்/மரங்கள்/சிறுகற்கள் போன்றவற்றை நீக்குவதற்காகவும் நிலத்தினை சமன் செய்து உழுவதற்காகவும் இவ்வினத்தில் நிதி உதவி அளிக்கப்படுகிறது.

ii. தனிநபர் விவசாயிகள் தாங்களாகவோ அல்லது வாடகை இயந்திரங்கள் மூலமாகவோ தங்கள் நிலத்தில் உள்ள முட்புதர்கள்/மரங்கள்/ சிறுகற்களை நீக்கி, சமன் செய்து, உழவு மேற்கொள்ள இவ்வினத்தின் கீழ் அனுமதிக்கப்படுகிறது.

iii. மேற்கண்ட பணிகளுக்கு எக்டர் ஒன்றிற்கு 50% மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.9,600/- வரை பின்னேற்பு மானியமாக விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

iv. ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 2 எக்டர் வரை மானியம் வழங்க அனுமதி வழங்கப்படுகிறது.

v. தனிநபர் விவசாயிகளின் விருப்பத்திற்கேற்ப சீர்செய்யப்பட்ட தரிசு நிலங்களில் பயிர்களை தேர்வு செய்து, வேளாண்மை உழவர் நலத் துறையின் கீழ் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைப்பு திட்டங்கள் மூலம் சாகுபடி மேற்கொள்ள வழிவகை செய்யவேண்டும்.

vi. நடப்பாண்டு அடங்கலில், இத்தரிசு நிலங்கள் சாகுபடி நிலங்களாக மாற்றப்பட்ட விவரம் பதிவு செய்வதை உறுதி செய்ய வேண்டும். இதற்கு ஆதாரமாக இத்திட்டம் செயல்படுத்தியதற்கு கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட முந்தைய ஆண்டு அடங்கல் நகல் மற்றும் நடப்பாண்டு அடங்கல், புகைப்பட ஆவணங்கள் இணைக்க வேண்டும்.

vii. முட்புதர்களை அகற்றி, நிலத்தினை சமன்செய்து உழவுப்பணி மேற்கொள்ள ஒவ்வொரு பணிக்கும் அனுமதிக்கப்படும் செலவினம் மற்றும் மானிய விவரம் கீழே உள்ள அட்டவணைப்படி அனுமதிக்கப்படும்.

| வ. எண் | பணி விவரம் | மொத்த விலை |
|---|---|---|
| 1. | தரிசு நிலங்களில் முட்புதர்கள் நீக்கம் (புல்டோசர் மூலம் ஒரு மணி நேரத்திற்கு ரூ.1,500/- வீதம், 5 மணி நேரத்திற்கு) | 5xரூ.1,500=ரூ.7,500/- |
| 2. | தரிசு நிலங்களை சமன்படுத்துதல் (புல்டோசர் மூலம் ஒரு மணி நேரத்திற்கு ரூ.1,500/- வீதம், 5 மணி நேரத்திற்கு) (நிலங்களை compartmental bunding ஆக அமைத்துக் கொள்ளலாம். | 5xரூ.1,500=ரூ.7,500/- |
| 3. | உழவுப்பணி மேற்கொள்ளுதல் (ஒரு மணி நேரத்திற்கு ரூ.700/- வீதம், 6 மணி நேரத்திற்கு) | 6xரூ.700=ரூ.4,200/- |
| | மொத்தம் | ரூ. 19,200/- |
| இதில் 50% மானியம் ரூ..9,600/- வழங்கப்படும் | | |
| மேற்கூறப்பட்ட பணிகளின் செலவில் மாறுபாடு இருந்தால், இவ்வினத்திற்கான மொத்த செலவில் சரிசெய்து கொள்ளலாம். | | |

2. **வரப்புகளில் பயறு சாகுபடியை ஊக்குவித்தல்**

i. நன்மை செய்யும் பூச்சிகளைக் கவர்ந்திழுத்து, முதன்மை பயிர்களில் ஏற்படும் பூச்சித் தாக்குதலைக் கட்டுப்படுத்திடவும், விவசாயிகள் கூடுதல் வருமானம் ஈட்டிடவும், வரப்புகளில் பயறு சாகுபடி செய்ய இவ்வினத்தின் கீழ் ஊக்குவிக்கப்படுகிறது.

ii. இவ்வினத்தின் கீழ் கிராமப் பஞ்சாயத்துகளில் நடவு/விதைப்பு மேற்கொள்ளப்பட்ட வயல்களின் வரப்புகளில் பயறு சாகுபடி மேற்கொள்ள பயறு விதைகள் மானியத்தில் வழங்கப்படுகின்றன.

iii. விவசாயிகளின் விருப்பத்திற்கேற்ப மற்றும் வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருப்பில் உள்ள பச்சைப் பயறு, உளுந்து, காராமணி, துவரை அல்லது இதர பயறு வகைப் பயிர்கள் வரப்பு பயிராக சாகுபடி செய்ய ஊக்கமளிக்கப்படுகிறது.

iv. வரப்புப் பயிர் சாகுபடிக்கு ஒரு எக்டருக்கு 5 கிலோ பயறு விதைகளுக்கு 50% மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.300/- மானியம் அனுமதிக்கப்படுகிறது.

v. ஒரு விவசாயிக்கு அதிக பட்சமாக 2 எக்டர் வரை மானியம் வழங்க அனுமதி வழங்கப்படுகிறது.

vi. இவ்வினத்திற்குத் தேவையான பயறு விதைகள் விதைப்பண்ணைகள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு, வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருப்பில் உள்ள பயறு விதைகள் விவசாயிகளின் விருப்பத்திற்கேற்ப வழங்கப்பட வேண்டும். அவ்வாறு வழங்கப்படும் போது மானியத்தொகை மற்றும் விவசாயிகளின் பங்குத்தொகை TANSEDA வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்.

3. **நன்மை பயக்கும் நுண்ணுயிர்களைப் பெருக்கி மண்வளத்தை மேம்படுத்துவதற்கான செயல்விளக்கத் திடல்கள் அமைத்தல்**

i. மண் வளத்தை மேம்படுத்துவதற்கும், நிலத்தில் இடப்படும் உரங்கள் பயிர்களுக்கு எளிதில் கிடைக்கச் செய்வதற்கும் நுண்ணுயிர்கள் பெரிதும் உதவுகின்றன.

ii. நுண்ணுயிர்களால் ஏற்படும் நன்மைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கும் பொருட்டு செயல் விளக்கத் திடல்கள், தேர்வு செய்யப்பட்ட கிராமப் பஞ்சாயத்துக்களில் அமைக்கப்படும்.

iii. சாகுபடி மேற்கொள்ளப்படும் பயிருக்கு ஏற்றவாறு, திரவ உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போபேக்டீரியா, அசோபாஸ், பொட்டாஷ், பாக்டீரியா, ரைசோபியம், துத்தநாக சத்தை கரைக்கும் பாக்டீரியம் போன்ற பல்வேறு உயிர் உரங்களை, பரிந்துரை செய்யப்பட்ட அளவிற்கு ஏற்றவாறு தேவையின் அடிப்படையில் விவசாயிகளுக்கு இச்செயல் விளக்கத் திடல் இனத்தில் வழங்கப்பட வேண்டும். மேலும் மேற்கண்ட திரவ உயிர் உரங்களுடன் மக்கிய தொழு உரத்தையும் கலந்து, விவசாயிகள் தங்களது செயல்விளக்கத் திடல்களில் இட வேண்டும்.

iv. இச்செயல் விளக்கத் திடல் அமைத்திட எக்டர் ஒன்றிற்கு ரூ.450/- வரை மானியமாக வழங்கப்பட வேண்டும்.

v. தனிநபர் விவசாயி ஒருவருக்கு குறைந்தபட்சமாக ஒரு ஏக்கரும் அதிகபட்சமாக 5 ஏக்கர் வரை மட்டுமே மானியம் வழங்கப்பட வேண்டும்.

vi. திட்டத்திற்குத் தேவையான திரவ உயிர் உரங்கள் துறையின் உயிர் உரங்கள் உற்பத்தி மையம் மூலம் உற்பத்தி செய்து வழங்கப்பட வேண்டும்.

vii. செயல் விளக்கத் திடலுக்கு ஒரு எக்டர் பரப்பிற்குப் பரிந்துரைக்கப்பட்ட அளவான 250 கிலோ (சுமார் ரூ.450/-) தொழுஉரம் மற்றும் பயிருக்கு

ஏற்றவாறு பரிந்துரை செய்யப்பட்ட அளவிலான திரவ உயிர் உரங்கள் ஆகிய இரண்டையும் சேர்த்து ரூ.450/- வரை மானியமாக வழங்கப்படும்.

viii. இச்செயல் விளக்கத் திடல்களுக்குத் தேவைப்படும் மக்கிய தொழு உரத்திற்கான விலையினை விவசாயிகளே ஏற்று அதற்கான இரசீதினை விவசாயிகள் தங்களது மானியம் கோரும் விண்ணப்பப் படிவத்துடன் சேர்த்து சமர்ப்பிக்க வேண்டும்.

ix. நிதி செலவினத்தில் மீதம் ஏதும் ஏற்படின், மொத்த நிதி ஒதுக்கீட்டிற்கு மிகாமல் பொருள் இலக்கினை மாற்றி அமைத்துக் கொள்ளலாம்.

| வ. எண் | இடுபொருட்கள் | அளவு | விலை (ரூ.) |
|---|---|---|---|
| 1. | திரவ உயிர் உரங்கள் - அசோஸ்பைரில்லம்/ பாஸ்போபாக்டீரியா/ பொட்டாஷ் பாக்டீரியா/ துத்தநாகம் கரைக்கும் பாக்டீரியா போன்ற திரவ உயிர் உரங்கள் | 1.5 லிட்டர்/ எக்டர் | 450/- |
| 2. | தொழு உரம் | 250 கிலோ/ எக்டர் | 450/- |
| | **மொத்தம்** | | **900/-** |
| இதில் 50% மானியம் ரூ.450/- வழங்கப்படும் | | | |
| செயல்விளக்க திடல்கள் அமைக்கப்படும் பயிருக்கு ஏற்ப, இடுபொருள் அளவில் மாறுதல் செய்து கொள்ளவும், மொத்த செலவினத்தில் சரிசெய்து கொள்ளவும் அனுமதிக்கப்படுகிறது. | | | |

4. **விசைத்தெளிப்பான் விநியோகம் (Power / Battery Operated)**

i. இவ்வினத்தின் கீழ் மானியமாக ஒரு விசைத் தெளிப்பானுக்கு (Power / Battery Operated) ரூ.3,000/- அல்லது 50 சதவீதம் மானியம் இதில் எது குறைவோ அந்த தொகை மட்டும் மானியமாக வழங்கப்பட வேண்டும்.

ii. ஒரு விவசாயக் குடும்பத்திற்கு அதிகபட்சமாக ஒரு விசைத் தெளிப்பான் மட்டும் வழங்கப்பட வேண்டும்.

iii. சிறு / குறு விவசாயிகள் / ஆதி திராவிடர் / பழங்குடியினர் / பெண் விவசாயிகளுக்கு கைத் தெளிப்பான் விநியோகத்தில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்,

iv. விசைத் தெளிப்பான்கள் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் 2025-26 ஆம் ஆண்டிற்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் (Approved firms) இருந்து கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

v. இவ்வினத்தின் கீழ் வழங்கப்படும் தெளிப்பான்களுக்கு சரக்கு மற்றும் சேவை வரி செலவுகளைப் பயனாளிகளே ஏற்க வேண்டும்.

vi. நிதி செலவீனத்தில் மீதம் ஏதும் ஏற்படின், மொத்த நிதி ஒதுக்கீட்டிற்கு மிகாமல் பொருள் இலக்கினை அதிகரித்துக் கொள்ளலாம்.

vii. இந்த இனத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 70 சதவீதம் சிறு, குறு விவசாயிகளுக்கு வழங்கப்படவேண்டும்.

5. **தரிசு நில தொகுப்புகளைப் பதிவு செய்தல்**

i. கண்டறியப்பட்ட தரிசு நிலத் தொகுப்புகளை அந்தந்த மாவட்டத்தில் உள்ள சங்கங்களின் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் தமிழ்நாடு சங்கங்களின் பதிவு சட்டம் 1975ன் படி பதிவு செய்தல் வேண்டும்.

ii. பதிவு செய்த பின் பெறப்படும் பதிவு சான்றிதழினை சம்பந்தப்பட்ட வேளாண்மை பொறியியல் துறை அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும்.

iii. சங்கமாக குழுவினைப் பதிவு செய்வதற்கான பதிவுக் கட்டணம் ஒரு குழுவிற்கு ரூ.5,100/- மற்றும் ஆவண செலவிற்காக ரூ.1,900/-வரை மொத்தம் ரூ.7000/- வரை இவ்வினத்தின் கீழ் செலவு மேற்கொள்ளலாம்.

6. கிராம அளவில் :

**அ) விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் கையேடு தயாரித்தல்**

i. கிராம அளவிலான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல், துண்டுப் பிரசுரங்கள், விளம்பரம், கையேடு தயாரித்தல் போன்ற பணிகளுக்கும் கிராம அளவிலான திட்டக் கையேடு தயாரித்தலுக்கு கிராமம் ஒன்றிற்கு ரூ.500/- வரை இவ்வினத்தின் கீழ் செலவினம் மேற்கொள்ளலாம்.

**ஆ) தகவல், கல்வி மற்றும் தகவல் பரிமாற்றம், முகாம் நடத்துதல், ஆவணப்படுத்துதல்**

i. திட்ட செயலாக்கம் தொடர்பான தகவல், கல்வி, தகவல் பரிமாற்றம், முகாம் நடத்துதல் மற்றும் ஆவணங்கள் தயாரித்தல் தொடர்பான பணிகளுக்காக கிராமம் ஒன்றிற்கு ரூ.2,500/- வரை இவ்வினத்தின் கீழ் செலவினம் மேற்கொள்ளலாம்.

7. மாவட்ட அளவில்:

<u>அ) மாவட்ட அளவிலான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல்</u>

i. மாவட்ட அளவிலான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல், துண்டுப் பிரசுரங்கள், விளம்பரம், கையேடு தயாரித்தல் போன்ற பணிகளுக்கும் மாவட்ட அளவிலான திட்டக் கையேடு தயாரித்தலுக்கு மாவட்டம் ஒன்றிற்கு ரூ.5,000/- வரை இவ்வினத்தின் கீழ் செலவினம் மேற்கொள்ளலாம்.

<u>ஆ) மாவட்ட அளவிலான விளம்பரம், திட்ட செயலாக்கம், ஆவணப்படுத்துதல் மற்றும் ஆய்வுக் கூட்டச் செலவினம் மற்றும் சில்லறைச் செலவினங்கள்</u>

i. இவ்வினத்தின் கீழ் மாவட்ட அளவிலான விளம்பரப்படுத்துதல், திட்ட செயலாக்கம் தொடர்பான ஆவணப்படுத்துதல், ஆய்வுக் கூட்டச் செலவினங்கள் மற்றும் புத்துணர்ச்சி செலவினங்கள் ஆகியவை மேற்கொள்ள மாவட்டம் ஒன்றிற்கு ரூ.15,000/- வரை இவ்வினத்தின் கீழ் செலவினம் மேற்கொள்ளலாம்.

8. மாநில அளவில் :

**i. திட்ட செயலாக்கம், விளம்பரம், ஆவணப்படுத்துதல், ஆய்வுக் கூட்ட செலவினம் மற்றும் சில்லரை செலவினங்கள்**

திட்டத்தினைச் செயல்படுத்தும் போது ஏற்படும் செலவினங்கள், ஆவணப்படுத்துதல், எழுதுப்பொருட்கள், ஆய்வுக் கூட்டச் செலவினங்கள், புத்துணர்ச்சி செலவினங்கள், போக்குவரத்து, தளவாடங்கள் மற்றும் சில்லரைச் செலவினங்கள் இவ்வினத்தின் கீழ் மேற்கொள்ளப்படலாம்.

9. மின்சாரக் கட்டணங்கள்

i. கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 2021-22 ஆம் ஆண்டு முதல் நடப்பு 2025-26 ஆம் ஆண்டு வரை தரிசுநிலத் தொகுப்பில் ஏற்படுத்தப்பட்ட நீர் ஆதாரங்களில் இருந்து பாசனம் மேற்கொள்வதற்காகப் பயன்படுத்தப்படும் மின்மோட்டார்களுக்கான மின் நுகர்வு கட்டணங்கள் இவ்வினத்தின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும்.
ii. தோட்டக்கலை உதவி இயக்குநர் பெயரில் பெறப்பட்ட மின் இணைப்புகளுக்கு உண்டான மின் நுகர்வுக் கட்டணத்திற்கான செலவினத்தை தோட்டக்கலை உதவி இயக்குநர் முதலில் மேற்கொண்டு பின்னர் ரசீது மற்றும் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அத் தொகையினை சம்மந்தப்பட்ட வேளாண்மை உதவி இயக்குநரிடம் இருந்து மீளப் பெற்றுக்கொள்ளவேண்டும்.
iii. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திடமிருந்து மின்நுகர்வுக் கட்டண ரசீதினைப் பெற்ற பின்னரே மேற்காணும் நிதி அரசுக் கணக்கிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும்.

II) <u>தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இனம் வாரியான வழிகாட்டு நெறிமுறைகள்</u>

I. பல்லாண்டு தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு விரிவாக்கம்

பல்லாண்டு தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு விரிவாக்க இனத்தின் கீழ் 3,000 எக்டர் பரப்பிற்கு, ரூ. 5.40 கோடி நிதியில் நடவுச் செடிகள் மற்றும் இதர இடுபொருட்கள் வழங்கப்படும்.

i. இவ்வினத்தின் கீழ் மா, கொய்யா, சப்போட்டா, கொடுக்காபுளி, நாவல், சீத்தா, எலுமிச்சை, புளி, நெல்லி, தென்னை போன்ற தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பினை அதிகரிப்பதற்குத் தேவையான நடவுச் செடிகள் மற்றும் இதர இடுபொருட்கள் வழங்கப்படும்.
ii. இவ்வினத்திற்கு தேவையான நடவுச்செடிகள் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்படும்.
iii. இதர இடுபொருட்கள் மாவட்ட அலுவலர்கள் மூலம் கொள்முதல் செய்து வழங்கப்படும்.
iv. தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி செயல்படுத்தப்படும்.
v. எக்டர் ஒன்றிற்கான மொத்தச் செலவினம் – ரூ.60,000/–
vi. மானியம் – 50 சதவீத மொத்த செலவினத்தில் முதலாமாண்டு, 60 சதவீத மானியமாக எக்டர் ஒன்றிற்கு ரூ.18,000/ வழங்கப்படும்.
vii. இவ்வினத்தின் கீழ் தரிசு நில தொகுப்பில் உள்ள விவசாயிகளும், தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமப் பஞ்சாயத்துகளில் உள்ள விவசாயிகளும் பயன் பெறலாம்.
viii. ஒரு பயனாளி அதிகபட்சமாக 4 எக்டர் வரை பயன்பெறலாம்.
ix. பெண், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட வேண்டும்.
x. இந்த இனத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 70 சதவீதம் சிறு, குறு விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

## II. சந்தைகளில் காய்கறிகள் வரத்தினை அதிகரிக்க காய்கறி சாகுபடியை ஊக்குவித்தல்

காய்கறி சாகுபடியை ஊக்குவித்தல் இனத்தின் கீழ் 3,000 எக்டர் பரப்பிற்கு, ரூ.2.25 கோடி நிதியில் காய்கறி விதைகள் மற்றும் இடுபொருட்கள் வழங்கப்படும்.

i. சந்தைகளில் காய்கறிகள் வரத்தினை அதிகரிக்க காய்கறி சாகுபடியை ஊக்குவிக்கும் பொருட்டு காய்கறி விதைகள் மற்றும் இடுபொருட்கள் மானியத்தில் வழங்கப்படும்.
ii. எக்டர் ஒன்றிற்கான மொத்தச் செலவினம் – ரூ.10,000/-
iii. மானியம் – மொத்த செலவினத்தில் 75 சதவீத மானியமாக எக்டர் ஒன்றிற்கு ரூ.7,500/- வழங்கப்படும்.
iv. விவசாயியின் பங்குத்தொகை ரூ. 2500/எக்டர்.
v. இத்திட்டம் செயல்படுத்துவதற்குத் தேவையான தரமான விதைகள் மற்றும் இடுபொருட்கள் மாவட்ட அலுவலர்கள் மூலம் கொள்முதல் செய்து வழங்கப்படும்.
vi. ஒரு பயனாளி அதிகபட்சமாக 2 எக்டர் வரை பயன்பெறலாம்.
vii. பெண், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
viii. தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து கிராமங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.
ix. இந்த இனத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 70 சதவீதம் சிறு, குறு விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

## III. ஊட்டச்சத்து தன்னிறைவை மேம்படுத்த பழச்செடி தொகுப்புகள் வழங்குதல்

கொய்யா, நெல்லி, சீத்தா, எலுமிச்சை மற்றும் பலா/மா போன்ற 5 வகை பழச்செடிகள் அடங்கிய 4,70,000 தொகுப்புகள் ரூ 7.05 கோடி நிதியில் வழங்கப்படும்.

i. கொய்யா, நெல்லி, பலா/மா, சீத்தா, எலுமிச்சை போன்ற 5 வகையான பழச்செடிகள் அடங்கிய தொகுப்பு வழங்கப்படும்.
ii. தொகுப்பு ஒன்றின் மொத்த விலை – ரூ.200/- (போக்குவரத்து செலவு உட்பட)
iii. தொகுப்பு ஒன்றிற்கு 75 சதவீத மானியமாக ரூ.150/-
iv. பயனாளிகளை உடனடியாகத் தேர்வு செய்து அவர்களின் இடவசதியினை ஆய்வு செய்து, மாவட்ட அலுவலரின் பரிந்துரையுடன் அறிக்கை பெற்ற பின், பரிசீலிக்கப்பட்டு இடவசதிக்கேற்ப ஒரு தொகுப்பினை இரண்டாக பிரித்து 2 அல்லது 3 பழச்செடிகள் (ரூ.100 மதிப்பில்) அடங்கிய சிறு தொகுப்பாக வழங்கிட உரிய அறிவுரைகள் வழங்கப்படும்.
v. வீட்டின் புறப்பகுதிகளில் போதிய இடவசதி இல்லாத பட்சத்தில் வழங்கப்படும் பழச்செடிகளை பயனாளிகளின் வயல்களிலும் நட்டு பராமரிக்கலாம்.
vi. ஒரு குடும்பத்திற்கு அதிகபட்சமாக ஒரு பழச்செடி தொகுப்பு மட்டுமே வழங்கப்படும்.
vii. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
viii. இவ்வினத்திற்குத் தேவையான பழச்செடிகள் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் உற்பத்தி செய்து வழங்கப்படும்.

ix. தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து கிராமங்களிலும் தொகுப்புகள் முறையாக வழங்கப்படுவதை வட்டார அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும்.

**IV. தென்னங்கன்றுகள் விநியோகம்.**

i. நெட்டைத் தென்னங்கன்றுகள் விநியோகத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் தென்னங்கன்றுகள் விநியோகம் செய்யப்பட வேண்டும்.

ii. விநியோகத்தின் போது அதிக அளவில் குறு/சிறு விவசாயிகள் பயனடைதல் வேண்டும்.

iii. ஒரு குடும்பத்திற்கு, அதிகபட்சம் 2 நெட்டை தென்னங்கன்றுகள் மட்டுமே வழங்கப்பட வேண்டும்.

iv. நெட்டை தென்னங்கன்று ஒன்றுக்கு அதிகபட்ச மானியம் ரூ.65/– மட்டும் (39 ஆவது ஆட்சி மன்ற குழு கூட்டத்தின் நெட்டை இரக தென்னங்கன்றின் திருத்திய விற்பனை விலை ரூ.65/–) 100 சதவீத மானியத்தில் வழங்கப்பட வேண்டும்.

v. இத்திட்டத்திற்கு தேவையான அனைத்து நெட்டை இரக தென்னங்கன்றுகள் தோட்டக்கலைத் துறையின் கீழ் இயங்கும் மாநில தென்னை நாற்றுப் பண்ணைகள் மற்றும் அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் மூலம் உற்பத்தி செய்து வழங்கப்படவேண்டும்.

**V. திட்ட செயலாக்கம் மற்றும் ஆவணப்படுத்துதல்**

i. அனைத்து திட்ட செயல்பாடுகளையும் முறையாக ஆவணப்படுத்திட வேண்டும்,

ii. இனவாரியாக, புவியமைவு குறியிடப்பட்ட உயர் தெளிவுத்திறனுடைய (Hi–Resolution) புகைப்படங்களை வட்டார அலுவலர்கள் தங்கள் அதிகார எல்லைக்குட்பட்ட கிராமங்களில் ஆவணப்படுத்திட வேண்டும்.

iii. பயனாளிகளின் தொடர் நடவடிக்கைப் பதிவேடு (Feedback/Follow up register) சீரான இடைவெளியில் பதிவு செய்யப்பட்டு, வட்டார அலுவலகத்தில் பராமரிக்கப்பட வேண்டும்.

**III) <u>வேளாண்மைப் பொறியியல் துறைத் திட்டத்தின் இனவாரியான வழிகாட்டு நெறிமுறைகள்</u>**

**1) தொகுப்பிலுள்ள விவசாய குழுக்களுக்கு நீர் ஆதாரங்களை உருவாக்குதல் :**

வேளாண்மை/ தோட்டக்கலை/ வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மூலம் உருவாக்கப்படும் தொகுப்புகளில் நிலநீர் ஆய்வின் அடிப்படையில் நீர் ஆதாரம் உள்ள இடங்களில் கிணறுகள் அமைத்தல்.

**நிலநீர் ஆய்வு:**

i. நிலத்தடி நீர்வளம் உள்ள சரியான இடத்தினைத் தேர்வு செய்வதற்காக வேளாண்மைப் பொறியியல் துறையின் உதவி புவியியலாளர்கள்/ தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் புவியியலாளர்கள்/ மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம், நீர்வளத்துறையின் புவியியலாளர்கள் மற்றும் தகுதிவாய்ந்த தனியார் நிறுவனம் மூலம் நிலநீர் ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.

ii. நிலநீர் ஆய்வின் அடிப்படையில் மண்ணின் தன்மைக்கு ஏற்ப ஆழ்துளை/ குழாய்/ திறந்தவெளிக் கிணறு அமைக்க முடிவு செய்யப்பட வேண்டும்.

**கிணறு அமைத்தல் – பொது**

i. நிலநீர் ஆய்வின்படி ஆழ்துளை/ குழாய்/ திறந்தவெளிக் கிணறு அமைக்கத் தேர்வு செய்யப்பட்ட இடங்களில் நீரின் தன்மை குறைவாக அல்லது உவர்ப்பாக உள்ள இடங்களில் கிணறு அமைப்பதற்கு முன், அருகில் உள்ள பிற கிணறுகளில் இருந்து கிடைக்கப்பெறும் நீரின் தன்மையைக் கள ஆய்வின் மூலம் ஆராய்ந்து, கிணறு அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ii. சமுதாய நிலங்களில் (புறம்போக்கு நிலங்களில்) ஆழ்துளை/ குழாய்/ திறந்தவெளிக் கிணறு அமைப்பதற்கும் பம்புசெட்டு நிறுவுவதற்கும் வருவாய்த் துறையிடம் தேவையான அனுமதி பெறவேண்டும்.

iii. இத்திட்டத்தின் மூலம் கிணறுகள் அமைத்து மின் இணைப்பைப் பெறுவதற்கு வேளாண்மைத்துறையால் கண்டறியப்பட்டு ஏற்படுத்தப்பட்ட தொகுப்புகளுக்கு உதவி வேளாண் இயக்குநர் பதவியின் பெயரிலும், தோட்டக்கலைத் துறையால் கண்டறியப்பட்டு ஏற்படுத்தப்பட்ட தொகுப்புகளுக்கு உதவி தோட்டக்கலை இயக்குநர் பதவியின் பெயரிலும் விண்ணப்பித்து, அவர்கள் பெயரில், மின் இணைப்பு பெற வேண்டும். இதன்பொருட்டு, வேளாண்மைத் துறை/ தோட்டக்கலைத் துறையினரால் உருவாக்கப்படும் தொகுப்புகளில் கிணறு அமைக்கும் இடத்திற்கு உரிய அனுமதியினை வருவாய்த் துறையிடமிருந்து விவசாயக் குழுக்கள் பெறுவதற்கு அரசுத் துறை அலுவலர்களால் உரிய வழிகாட்டுதல்கள் வழங்கப்பட வேண்டும்.

iv. உருவாக்கப்பட்ட நீர் ஆதாரங்களிலிருந்து (ஆழ்துளை/ குழாய்/ திறந்தவெளிக் கிணறுகள்) கிடைக்கப்பெற்ற நிலத்தடி நீர் குழுவில் உள்ள அனைத்து தனிப்பட்ட விவசாயிகளுக்கும் நிலத்தின் அடியில் புதைக்கப்பட்ட பிவிசி குழாய் மூலம் இணைக்கப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும்.

v. விவசாயம் மற்றும் தோட்டக்கலை பயன்பாட்டிற்காக நிலத்தடி நீரை எடுப்பதற்கும் கொண்டு செல்வதற்கும் தடையில்லாச் சான்றினைப் பெறுவதிலிருந்து 'விலக்கு' அளிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் கால்வாயிலிருந்து 50 மீட்டர் மற்றும் ஆற்றுப்படுகை மற்றும் நீர் நிலைகளில் இருந்து 200 மீட்டர் என தற்போதுள்ள இடைவெளி விதிமுறைகள் குறித்த வழிகாட்டுதல்களுக்கு அரசாணை எண்.142, பொதுப் பணித் (R2) துறை, நாள்:23.07.2014 மற்றும் கிணறுகளுக்குள்ளான இடைவெளி குறித்த வழிகாட்டுதல்களுக்கு அரசாணை எண்.113, பொதுப் பணித் (R2) துறை, நாள்:09.06.2016ன் இணைப்பு –2 குறிப்பிட்டுள்ளவாறு பின்பற்ற வேண்டும்.

vi. ஆழ்துளை / குழாய்/ திறந்தவெளிக் கிணறுகளில் இருந்து கிடைக்கப்பெறும் தண்ணீரின் அளவு மற்றும் தன்மையின் அடிப்படையிலும், மண் பரிசோதனை மற்றும் விவசாயக் குழுக்களின் விருப்பத்திற்கேற்றவாறும் சாகுபடிக்கு ஏற்ற பழ/ மரக்கன்றுகள் வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறைகளின் மூலம் பரிந்துரை செய்யப்படும்.

vii. இத்திட்டத்தின் மூலம் உருவாக்கப்படும் கிணறுகளுக்கு மின்/ சூரிய சக்தி மூலம் நீர் இறைக்கும் அமைப்பு வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் உருவாக்கப்பட்டபின், பாசன நீர் விநியோகக் குழாய்கள் அமைக்கும் பணிகள் மற்றும் சொட்டு நீர்ப்பாசன அமைப்பு நிறுவும் பணிகளுக்காக வேளாண்மைத் துறை/ தோட்டக்கலைத் துறையிடம் ஒப்படைக்கப்படும் (படிவம் – II). இதனைத் தொடர்ந்து, பாசன நீர் விநியோகக் குழாய்கள் அமைக்கும் பணிகள் மற்றும் சொட்டு நீர்ப்பாசன அமைப்பு ஏற்படுத்தும் பணிகள் வேளாண்மைத் துறை/ தோட்டக்கலைத் துறையினரால் மேற்கொள்ளப்படும். பாசன நீர் விநியோகக் குழாய்கள் அமைப்பதற்கு பிரதம மந்திரி – தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் – ஒரு துளி நீரில் அதிக பயிர் – இதர செயல்பாடுகள் – துணை நிலை நீர் மேலாண்மைத் திட்டம் (PM–RKVY – PDMC – OI – SWMA) உடன் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும். மேற்கூறிய திட்டங்களின் பங்களிப்பிற்கு மேல் ஏற்படும் நிதி செலவினத்தை கலைஞர் திட்ட நிதியிலிருந்து வேளாண்மைப் பொறியியல் துறையால் மேற்கொள்ளப்படும்.

viii. இத்திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட அனைத்து கட்டமைப்புகளும் வேளாண்மை/ தோட்டக்கலைத் துறையினரால் உருவாக்கப்படும் தொகுப்புகளில் உள்ள விவசாயக் குழுக்களில் உள்ள விவசாயிகளால் அவர்களின் சொந்த செலவில் கட்டமைப்புகளின் பராமரிப்பினை மேற்கொள்ள வேண்டும்.

ix. தரிசு நில தொகுப்பில் உள்ள உறுப்பினர்களிடையே (நிலத்தின் அளவைப் பொறுத்து) தண்ணீரைப் பகிர்ந்து கொள்வதற்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும், இத்திட்டத்தில் உருவாக்கப்பட்ட கட்டமைப்புகளின் கூட்டுப் பயன்பாட்டிற்கும், பராமரித்தலுக்கும் உரிய விவசாயிகளின் பங்கேற்பினை விவசாயிகளுக்கிடையேயான ஒப்பந்தத்தின் மூலம் இத்திட்டத்தின் செயல்பாட்டின்போதே ஏற்படுத்தப்பட வேண்டும்.

**ஆழ்துளை/ குழாய்க் கிணறு அமைத்தல்**

i. ஆழ்துளை/ குழாய்க் கிணறு அமைப்பதற்கு சமுதாய நிலம் கிடைக்கவில்லை என்றால், குழுவில் உள்ள விவசாயிகளே நிலங்களைப் பெற்றுத்தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்கான வழிகாட்டுதல் மற்றும் நடவடிக்கைகள் கிராம திட்ட செயலாக்கக் குழுவினால் மேற்கொள்ளப்பட வேண்டும். நிலத்தை வைத்திருக்கும் தனிநபர் (குழுவில் உள்ள விவசாயிகளில் ஒருவர்) பட்டா நிலத்தை அரசுக்கு தானமாக எழுதி கொடுக்க அதற்கான ஒப்பந்தம் மூலமாக ஒப்புதல் அளிக்க வேண்டும். இந்த ஒப்பந்தம் ஆழ்துளை/ குழாய்க் கிணறு அமைக்கும் பகுதியிலுள்ள நில உரிமையாளரால் மின் சக்தியால் இயங்கும் பம்புசெட்டுடன் அமைக்கப்படுமாயின் 100 சதுர அடியும் (10 அடி x 10 அடி), சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுடன் அமைக்கப்படுமாயின் 900 சதுர அடியும் (30 அடி x 30 அடி) நிலப்பரப்பினைத் தானமாக வழங்கிட முன்வர வேண்டும்.

ii. ஆழ்துளை/ குழாய்க் கிணறு பகுதிக்கு அணுகு சாலைக்காக நிலத்தை விட்டுக்கொடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அனைத்து நில உரிமையாளர்களும் (தொகுப்பில் உள்ள விவசாயிகள்) சம்மதம் தெரிவித்து ஒப்பந்தம் (படிவம் – I) மேற்கொள்ள வேண்டும். இதற்கான வழிகாட்டுதல் மற்றும் நடவடிக்கைகள் கிராம திட்ட செயலாக்க குழுவினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

iii. ஆழ்துளை/ குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ள இடத்தினைச் சுற்றி நீர் செறிவூட்டும் மண்டலத்திற்குள், வயல்களில் வரப்பு அமைத்தல், தடுப்பணைகள் கட்டுதல், கற்களால் ஆன தடுப்பணைகள், மற்றும் நீர் செறிவூட்டும் கட்டமைப்பு முதலிய கட்டமைப்புகளை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் முன்னுரிமை அடிப்படையில் அமைக்கத் தகுதியான இடத்தின் விபரங்களை, வேளாண்மை இணை இயக்குநருடன் ஒருங்கிணைந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் பகிரப்பட வேண்டும்.

iv. பிரதம மந்திரி – தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் – ஒரு துளி நீரில் அதிக பயிர் – இதர செயல்பாடுகள் – துணை நிலை நீர் மேலாண்மைத் திட்டத்தின் (PM-RKVY – PDMC – OI – SWMA) கீழ் தோட்டக்கலைத் துறையிடம் போதுமான நிதி இருக்கும் பட்சத்தில், பாதுகாப்பான குறுவட்டங்களில் அமைக்க உள்ள அனைத்து ஆழ்துளை/ குழாய்க் கிணறுகளுக்கும் கிணறு அமைக்க ஆகும் மொத்த செலவினம் கலைஞர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டபின், ஒரு கிணறுக்கு ரூ.25,000/– தொகை வீதம் துணை நிலை நீர் மேலாண்மைத் திட்டத்துடன் ஒருங்கிணைத்து அத்திட்ட நிதியிலிருந்து பெறப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

v. கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட கிணறுகளில் (ஆழ்துளை/ குழாய்க் கிணறு) கிடைக்கப்பெற்ற தண்ணீர், பாசனத்திற்குப் போதுமான பாசன நீர் வழங்க முடியாத சூழலில், இத்தகைய கிணறுகளில் தொடர்ந்து மின் அல்லது சூரிய சக்தி மூலம் பாசன அமைப்பு ஏற்படுத்தி செலவு மேற்கொள்ளுதல் பயனுள்ளதாக இருக்காது. மேலும், கூடுதல் தலைமைச் செயலர், நீர்வளத்துறை, சென்னை அவர்களுக்கு முகவரியிட்ட தலைமைப் பொறியாளர், மாநில நிலத்தடி மற்றும் மேற்பரப்பு நீர் ஆதாரங்கள் தரவு மையம், தரமணி, நீர்வளத்துறையின் கடித எண்.OT9/AG-V/scheme/2022. நாள் 15.02.2022–இல் அனைத்து இடங்களிலும் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க அனுமதி வழங்கும்போது அளித்துள்ள குறிப்புரையில் கண்காணிப்பு கிணறுகளை (Monitoring wells) அமைத்துத்தர கோரியுள்ளார்கள். எனவே, பயனுராத/ வெற்றியடையாத/ நீரின் அளவு குறைவாக உள்ள – ஆழ்துளை/ குழாய்க் கிணறுகள் உருவாகும்பட்சத்தில் அந்தக் கிணறுகளையும் கண்காணிப்புக் கிணறுகளாக நீர்வளத்துறைக்கு ஒப்படைத்திட வேண்டும். அப்பணிகளுக்குரிய செலவினத்தை வேளாண்மைப் பொறியியல் துறையின் திட்டப்பணிகளில் உள்ள இனம்–1–ன்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையிலிருந்து மேற்கொள்ள வேண்டும்.

**திறந்தவெளிக் கிணறு அமைத்தல்**

i. நிலநீர் ஆய்வின்படி திறந்தவெளிக் கிணறு முன்மொழியப்பட்ட இடத்தின் விவரங்களை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையிடம் இருந்து நிர்வாக அனுமதி பெற அந்தந்த வேளாண்மை இணை இயக்குநரிடம் பகிரப்பட வேண்டும்.

ii. திறந்தவெளிக் கிணறுகள் அமைய உள்ள இடங்களில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்களின் கீழ் திறந்தவெளிக் கிணறுகள் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

iii. திறந்தவெளிக் கிணறு அமைப்பதற்கு சமுதாய நிலம் கிடைக்கவில்லை என்றால், குழுவில் உள்ள விவசாயிகளே நிலங்களைப்

பெற்றுத்தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்கான வழிகாட்டுதல் மற்றும் நடவடிக்கைகள் கிராம திட்ட செயலாக்கக் குழுவினால் மேற்கொள்ளப்பட வேண்டும். நிலத்தை வைத்திருக்கும் தனிநபர் (குழுவில் உள்ள விவசாயிகளில் ஒருவர்) பட்டா நிலத்தை அரசுக்கு தானமாக எழுதி கொடுக்க அதற்கான ஒப்பந்தம் மூலமாக ஒப்புதல் அளிக்க வேண்டும். இந்த ஒப்பந்தம் திறந்தவெளிக் கிணறு அமைக்கும் பகுதியிலுள்ள நில உரிமையாளரால் 600 சதுர அடி நிலப்பரப்பு கிணறு அமைப்பதற்கும், அமைக்கபட்ட கிணற்றிற்கு மின் சக்தியால் இயங்கும் பம்புசெட் அமைப்பதாயின் 100 சதுர அடியும் (10 அடி x 10 அடி), சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட் அமைப்பதாயின் 900 சதுர அடியும் (30 அடி x 30 அடி) நிலப்பரப்பினை தானமாக வழங்கிட முன்வர வேண்டும். எனவே, மின் இணைப்புடன் கூடிய திறந்தவெளிக் கிணறு அமைக்க தானமாக வழங்க வேண்டிய மொத்த நிலப்பரப்பு 700 சதுர அடி மற்றும் சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுடன் கூடிய திறந்தவெளிக் கிணறு அமைக்க தானமாக வழங்க வேண்டிய மொத்த நிலப்பரப்பு 1500 சதுர அடி ஆகும். கள நிலவரத்தின் அடிப்படையில் இந்நிலப்பரப்பின் அளவு மாறுபடும். ஆகவே, கூடுதலாக நிலப்பரப்பு தேவைப்படுமாயின் அந்நிலப்பரப்பினை அரசிற்கு தானமாக வழங்கிட வேண்டும்.

iv. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலமாக திறந்தவெளிக் கிணறுகள் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்ட பின் நீரிறைக்கும் அமைப்பு (மின்/ சூரிய சக்தி) வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் செயல்படுத்தப்பட வேண்டும்.

**நீர் இறைக்கும் அமைப்பு**

சமுதாயக் கிணறுகளிலிருந்து நீர் இறைப்பதற்கு சூரிய சக்தி அல்லது மின் சக்தி மூலம் இயங்கும் பம்புசெட்டுகள் அமைக்கப்பட வேண்டும். நில நீர் ஆய்வின் அடிப்படையில் ஆழ்துளை/ குழாய்/ திறந்தவெளிக் கிணறு தொழில்நுட்ப ரீதியாக சாத்தியக்கூறு உள்ள இடங்களில் சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகள் அமைக்கப்பட வேண்டும், இதர இடங்களில் அமைக்கப்படும் கிணறுகளுக்கு, மின் இணைப்பு பெற்று பம்புசெட்டு நிறுவப்பட வேண்டும்.

**அ) சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டு அமைப்பு**

i. இத்திட்டத்தின்கீழ் பாதுகாப்பான குறுவட்டங்களில் உள்ள தொகுப்புகளில் உருவாக்கப்படும் சமுதாயக் கிணறுகளில் சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகள் அமைத்திட முதலமைச்சரின் சூரிய சக்தி பம்புசெட்டுகள் திட்டத்திலிருந்து 15 குதிரைத் திறன் வரையிலான சூரிய சக்தி பம்புசெட்டுகளுக்கு ஒன்றிய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் வழிகாட்டுதலின்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள 30% ஒன்றிய அரசின் நிதியும், மாநில அரசின் 40% நிதியும் மீதமுள்ள 30% நிதி கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்திற்கான மாநில அரசு நிதியிலிருந்தும் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்பட வேண்டும். மேலும், முதலமைச்சரின் சூரிய சக்தி பம்புசெட்டுகள் திட்ட ஒதுக்கீடு முடிவுற்றால், சூரிய சக்தி மூலம் இயங்கும் பம்புசெட்டுகள் உத்தேசிக்கப்படும் இடங்களில் கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட நிதியிலிருந்து முழுவதுமாக செயல்படுத்திட வேண்டும். இத்திட்டத்தில் பாதுகாப்பான குறுவட்டங்கள் என தமிழ்நாடு நீர்வள ஆதார அமைப்பு, டைனமிக் நிலத்தடி நீர் ஆதார

மதிப்பீடு, 2023 (மார்ச் 2023 நிலவரப்படி) குறிப்பிட்டுள்ள விவரங்கள் ஆதாரமாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். திட்ட செயலாக்கத்தின் பொழுது திருந்திய நிலத்தடி நீர் ஆதார மதிப்பீடு வெளியிடப்படுமாயின் அதனைப் பின்பற்ற வேண்டும். இதர குறுவட்டங்களில் அமைக்கப்படும் கிணறுகளுக்கு சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகளுக்கு 100 சதவீதம் கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட நிதியில் இருந்து செயல்படுத்தப்பட வேண்டும்.

ii. வேளாண்மைப் பொறியியல் துறையால் செயல்படுத்தப்படும் முதலமைச்சரின் சூரிய சக்தி பம்புசெட்டுகள் திட்டத்தின் கீழ் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் தெரிவுசெய்யப்பட்ட சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகள் நிறுவனங்களின் மாடல் மற்றும் வகை இத்திட்ட செயல்பாட்டில் பயன்படுத்தப்பட வேண்டும்.

**ஆ) மின் சக்தியால் இயங்கும் பம்புசெட்டு அமைப்பு**

i. சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகள் அமைக்கப்படாத இடங்களில் தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தின் (TNPDCL) மூலம் மின் இணைப்பு இத்திட்டம் மூலம் பெற்று வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ii. மின் சக்தியால் இயங்கும் மின் மோட்டார் பம்புசெட்டு, எலக்ட்ரிக் பேனல், ஸ்டார்ட்டர் ஆகியவற்றிற்குத் தேவையான பாதுகாப்புக் கட்டமைப்பு வசதிகளுடன் அதிகபட்சமாக 15 HP கொண்ட மோட்டாருக்கான செலவினம் அரசால் ஏற்கப்படும்.

iii. பிரதம மந்திரி – தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் – ஒரு துளி நீரில் அதிக பயிர் – இதர செயல்பாடுகள் – துணை நிலை நீர் மேலாண்மைத் திட்டத்தின் ( PM – RKVY – PDMC – OI – SWMA ) கீழ் தோட்டக்கலைத் துறையிடம் போதுமான நிதி இருக்கும் பட்சத்தில், மின்மோட்டார் பம்புசெட்டுகள் அமைக்க உள்ள அனைத்து இடங்களிலும், மின்மோட்டாருக்கு ஆகும் மொத்த செலவினம் கலைஞர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டபின் ஒரு மின்மோட்டாருக்கு தொகை ரூ.15,000/– வீதம், துணை நிலை நீர் மேலாண்மைத் திட்டத்துடன் ஒருங்கிணைத்து அத்தொகையினை அரசுக் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

**(2)தனிப்பட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகளுக்கு கிணறுகள் (ஆழ்துளை அல்லது குழாய்க் கிணறுகள்) அமைத்தல்:**

i. தனிப்பட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினரால் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் 2025–26 ஆம் ஆண்டு பணி மேற்கொள்ள தேர்வு செய்யப்பட்ட கிராம பஞ்சாயத்துகளில் 400 விவசாயிகளும், 2021–22 ஆம் ஆண்டு முதல் 2024–25 ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட்ட கிராம பஞ்சாயத்துகளில் 100 விவசாயிகளும், ஆக மொத்தமாக 500 விவசாயிகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்படும்.

ii. இவ்வினத்தில் ஆழ்துளை அல்லது குழாய்க் கிணறு அமைத்து, மின்/ சூரிய சக்தி மூலமாக நீர் இறைக்கும் அமைப்பு ஏற்படுத்திட அதிகபட்சமாக ஒரு தனிப்பட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிக்கு ரூ.8 இலட்சம் செலவினம் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது. கிணற்றின் வகை, ஆழம் மற்றும் திட்ட

செய்யலாக்கத்தின் போது ஏற்படும் கள நிலவரத்தின் அடிப்படையில், ரூ.8 இலட்சத்திற்கு மேல் செலவினம் எதிர்நோக்கப்படுமாயின், அந்தக் கூடுதல் தொகையினை சம்பந்தப்பட்ட விவசாயியே ஏற்க வேண்டும். இதற்கு உடன்படும் விவசாயிகளுக்கே இவ்வினம் செயல்படுத்தப்பட வேண்டும்.

iii. வருவாய்த்துறையின் மூலம் வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழின் அடிப்படையில் இத்திட்டத்தின் பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர்.

iv. நிலநீர் ஆய்வு செய்து தகுதியான இடங்களில் மட்டுமே ஆழ்துளை/ குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டும்.

v. இத்திட்டத்தின் மூலம் உருவாக்கப்படும் கிணறுகளுக்கு மின்/ சூரிய சக்தி மூலம் நீர் இறைக்கும் அமைப்பு வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் உருவாக்கப்பட்டபின், பாசன நீர் விநியோகக் குழாய்கள் மற்றும் சொட்டு நீர்ப்பாசன அமைப்பு நிறுவும் பணிகள் பிரதம மந்திரி – தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் – ஒரு துளி நீரில் அதிக பயிர் – இதர செயல்பாடுகள் – துணை நிலை நீர் மேலாண்மைத் திட்டத்தின் (PM-RKVY – PDMC – OI – SWMA) கீழ் ஏற்படுத்திட வேளாண்மைத் துறை/ தோட்டக்கலைத் துறையினரால் மேற்கொள்ள விவரங்கள் தோட்டக்கலைத் துறையின் தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமையிடம் தெரிவிக்கப்பட வேண்டும்.

vi. சாத்தியமுள்ள இடங்களில் சூரிய சக்தி மூலம் இயக்கப்படும் பம்புசெட்டுகள் (அதிகபட்சம் 15 HP வரை) அமைத்திடலாம்.

vii. இத்திட்டத்தின்கீழ் பாதுகாப்பான குறுவட்டங்களில் உருவாக்கப்படும் ஆழ்துளை/ குழாய்க் கிணறுகளில் சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகள் அமைத்திட முதலமைச்சரின் சூரிய சக்தி பம்புசெட்டுகள் திட்டத்திலிருந்து 15 குதிரைத் திறன் வரையிலான சூரிய சக்தி பம்புசெட்டுகளுக்கு ஒன்றிய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் வழிகாட்டுதலின்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள 30% ஒன்றிய அரசின் நிதியும், மாநில அரசின் 40% நிதியும் மீதமுள்ள 30% நிதி கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்திற்கான மாநில அரசு நிதியிலிருந்தும் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்பட வேண்டும். மேலும், முதலமைச்சரின் சூரிய சக்தி பம்புசெட்டுகள் திட்ட ஒதுக்கீடு முடிவுற்றால், சூரிய சக்தி மூலம் இயங்கும் பம்புசெட்டுகள் உத்தேசிக்கப்படும் இடங்களில் கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட நிதியிலிருந்து செயல்படுத்திட வேண்டும். இத்திட்டத்தில் பாதுகாப்பான குறுவட்டங்கள் என தமிழ்நாடு நீர்வள ஆதார அமைப்பு, டைனமிக் நிலத்தடி நீர் ஆதார மதிப்பீடு, 2023 (மார்ச் 2023 நிலவரப்படி) குறிப்பிட்டுள்ள விவரங்கள் ஆதாரமாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். திட்ட செயலாக்கத்தின் பொழுது திருந்திய நிலத்தடி நீர் ஆதார மதிப்பீடு வெளியிடப்படுமாயின் அதனைப் பின்பற்ற வேண்டும். இதர குறுவட்டங்களில் அமைக்கப்படும் ஆழ்துளை/ குழாய்க் கிணறுகளுக்கு சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகளுக்கு 100 சதவீதம் கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட நிதியில் இருந்து செயல்படுத்தப்பட வேண்டும்.

viii. வேளாண்மைப் பொறியியல் துறையால் செயல்படுத்தப்படும் முதலமைச்சரின் சூரிய சக்தி பம்புசெட்டுகள் திட்டத்தின் கீழ் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் தெரிவுசெய்யப்பட்ட சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகள் நிறுவனங்களின் மாடல் மற்றும் வகை இத்திட்ட செயல்பாட்டில் பயன்படுத்தப்பட வேண்டும்.

ix. ஒன்றிய அரசின் பிரதம மந்திரியின் விவசாயிகள் ஆற்றல் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு (PM-KUSUM) திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி தனிப்பட்ட விவசாயிகளுக்கு 5 முதல் 15 குதிரைத்திறன் வரையிலான சூரிய சக்தி பம்பு செட்டுகளுக்கு 7.5 குதிரைத்திறன் பம்புசெட்டுக்கான மானியத்தொகை வரையறுக்கப்பட்டு முதலமைச்சரின் சூரிய சக்தி பம்புசெட்டுகள் திட்ட நிதியிலிருந்து வழங்கப்படும். மீதமுள்ள தொகை கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைத்த வேளாண் வளர்ச்சி திட்ட நிதியிலிருந்து வழங்கப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும்.

x. சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் அமைக்கப்படாத இடங்களில் தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தின் (TNPDCL) மூலம் மின் இணைப்பு மூலம் பெற்று வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறு மின் இணைப்பு பெறும் கிணறுகளுக்கு வாய்ப்பிருக்கும் பட்சத்தில் மின் மோட்டார் நிறுவ வேளாண்மைப் பொறியியல் துறையின் "உழவர்களுக்கு மானியத்தில் மின் மோட்டார் பம்புசெட்டு வழங்குதல்" திட்டத்துடன் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்பட வேண்டும்.

**2) மழைநீரை விளைநிலங்களிலேயே சேமிக்க பண்ணைக்குட்டைகள் அமைத்தல்:**

i. பண்ணைக் குட்டைகள் அமைக்க விருப்பமுள்ள விவசாயிகள், தங்கள் சொந்த விளைநிலங்களில் மட்டுமே பண்ணைக் குட்டைகள் அமைத்தல் வேண்டும்.

ii. விவசாயிகளிடம் அவர்களது நிலத்தில் பண்ணைக் குட்டைகள் அமைப்பதற்கு எழுத்துப்பூர்வமான ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

iii. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் குறைதீர்க்கும் நாள் கூட்டங்களில் துண்டுப் பிரசுரங்களை (Pamphlet) விநியோகித்து மாவட்ட அளவில் மாவட்ட நிர்வாகம் மூலம் இத்திட்டத்திற்கு விளம்பரம் செய்து, ஆர்வமுள்ள விவசாயிகள் கண்டறியப்பட வேண்டும்.

iv. மானாவாரி விவசாயிகள், ஆதிதிராவிடர்/ பழங்குடியினர், சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

v. பாசனப் பகுதிகளில் பண்ணைக் குட்டைகள் அமைப்பதைத் தவிர்க்க வேண்டும்.

vi. பண்ணைக் குட்டைகள் அதிநுகர்வு குறுவட்டங்கள் (over-exploited), அபாயகராமான குறுவட்டங்கள் (critical), மித அபாயகரமான குறுவட்டங்கள் (semi-critical) உவர் தன்மை குறுவட்டங்கள் (saline) மற்றும் மானாவாரிப் பகுதிகளுக்கு முன்னுரிமை அளித்து அமைக்கப்பட வேண்டும்.

vii. நிலத்தின் சரிவு (Slope) மற்றும் மண்ணின் தன்மையின் அடிப்படையில் பண்ணைக்குட்டை அமைக்கப்படும் இடம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

viii. அதிகப்படியான நீரினை சேகரிக்க ஏதுவாக, போதுமான நீர்பிடிப்புப்பகுதி கொண்ட, விவசாயியின் நிலங்களின் தாழ்வான பகுதிகளைத் தேர்ந்தெடுத்து பண்ணைக் குட்டைகள் அமைக்கப்பட வேண்டும்.

ix. நிலங்களின் தன்மை மற்றும் விவசாயிகளின் தேவைகளுக்கு ஏற்ப பண்ணைக் குட்டைகளின் அளவு மற்றும் ஆழத்தினை மாற்றி அமைத்துக் கொள்ளலாம்.

x. பண்ணைக் குட்டைகளில் நீர் உள்ளே நுழையவும் மற்றும் வெளியே செல்லவும் 30 சென்டி மீட்டர் விட்டம் அளவுள்ள ஆர்.சி.சி பைப்புகள் மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

xi. நீர் உள்ளே நுழையும் இடத்தில் தலைச்சுவர்கள் (Head wall) கட்டப்பட வேண்டும்.

xii. கிடைக்கப்பெறும் நீர் பண்ணைக் குட்டைகளில் தங்கு தடையின்றி உள்ளே நுழைவதற்கும், நுழைவு வாயிலில் உள்ள தலைச்சுவர்களைப் பாதுகாக்கவும், உரிய இடங்களில் கல் பதிக்கும் (stone pitching) பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

xiii. பண்ணைக் குட்டைகள் அமைக்க தோண்டப்பட்ட மண்ணைப் பயன்படுத்தி, சுற்றி கரை வரப்புகள் 0.60 மீட்டர் முதல் 1.00 மீட்டர் உயரம் மற்றும் மேல் அகலம் 0.60 மீட்டர் மற்றும் பக்க சரிவுகள் 1 : 1 என்ற அளவில் பண்ணைக் குட்டை உருவாக்கப்பட வேண்டும்.

xiv. சுற்றிலும் ஒரே மாதிரியான 1.00 மீட்டர் அகலம் (Berm width) கொண்ட பாதை அமைத்து, கரைகள் (Bund) பலப்படுத்தி மட்டம் அடிக்கப்பட வேண்டும்.

xv. குட்டையின் பக்கவாட்டு பகுதியில் உறுதிக்காக சாய்வு 0.5 : 1 இருக்க வேண்டும்.

xvi. விவசாயிகளின் விருப்பத்திற்கேற்பவும், நிலத்தின் தன்மைக்கேற்பவும், பண்ணைக் குட்டைகளின் அளவினை முடிவு செய்து கொள்ளலாம். அதிகபட்சமாக ஒரு பண்ணைக் குட்டைக்கான செலவு ரூ.1.40 இலட்சத்திற்கு மிகாமல் பண்ணைக் குட்டைகள் அமைக்கலாம். ஒவ்வொரு விவசாயிக்கும் அமைக்கப்படும் பண்ணைக் குட்டை அளவிற்கான மதிப்பீட்டினை பொதுப்பணித்துறையின் நடைமுறையிலுள்ள விலை விகித அட்டவணையின்படி தயார் செய்து பணிகள் மேற்கொண்டு, செலவினம் செய்யப்பட வேண்டும்.

xvii. அமைக்கப்படும் பண்ணைக் குட்டைகளில் விவசாயிகள் விருப்பம் தெரிவிக்கும் பட்சத்தில் பண்ணைக் குட்டை அளவிற்கேற்ப சாய்வு தளம் 1 : 12 (Ramp) அமைக்கப்பட வேண்டும்.

xviii. விவசாயிகள் விருப்பம் தெரிவிக்கும் பட்சத்தில், பண்ணைக் குட்டைக்குள் சிறு குளம் (Baby Pond) 10 மீ X 10 மீ X 0.6 மீ என்ற அளவில் அமைக்கப்பட வேண்டும்.

xix. பண்ணைக் குட்டைகளின் கரை வரப்புகளில் வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறையினரின் உதவியுடன் தென்னை வரப்புப் பயிர்கள் மற்றும் பழமரக் கன்றுகள் போன்றவற்றை நட்டு வளர்த்து, கரை வரப்புகளை உறுதிபடுத்துவதோடு விவசாயிகள் கூடுதல் வருமானம் பெறுவதற்கு வழிவகை செய்திடல் வேண்டும்.

xx. மீன் வளர்க்க சாத்தியக்கூறு உள்ள பண்ணைக் குட்டைகளில், மீன் வளர்ப்பதற்கு, மீன்வளத் துறையின் மூலம் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்பட வேண்டும்.

xxi. திட்டப் பணியின் மதிப்பின் அடிப்படையில், பணியை நிறைவேற்றுவதற்கு டெண்டர் நடைமுறை பின்பற்றப்பட வேண்டும்.

xxii. அளவைப் புத்தகத்தில் (M.Book) அளவீடுகள் சரியாகப் பதிவு செய்யப்பட்டு அதற்கேற்ப பணம் வழங்கப்பட வேண்டும்.

xxiii. பணித்தளத்தில் உள்ள அளவுகள், அளவைப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். GPS அளவுகள் பதிவு செய்யப்படுவதுடன் அனைத்து பணிகளும் Geo – tagging செய்யப்பட வேண்டும்.

xxiv. பணி செய்வதற்கு முன்னரும், பணியின் போது, பணி முடித்தவுடன் புகைப்படங்கள் (விவசாயியுடன்) எடுத்து ஆவணப்படுத்த வேண்டும்.

xxv. பிற திட்டங்களின் கீழ் பண்ணைக் குட்டைகள் அமைக்கப்படவில்லை என்பதை உறுதி செய்ய இத்திட்டத்தில் செயல்படுத்தப்பட்டுள்ள பண்ணைக் குட்டைகளின் விவரங்களினை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் திட்ட அலுவலர்/துணை இயக்குநர், மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையிடம் தெரிவித்திடல் வேண்டும்.

**4) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சிறுபாசன குளங்கள், ஊருணிகள், குளங்கள், வரத்து கால்வாய்கள் மற்றும் இதர நீர் சேகரிப்புக் கட்டுமானங்களைத் தூர்வாரி மேம்படுத்துதல்:**

i. மேற்கண்ட பணிகளைத் தேர்வு செய்யும்போது, இதர துறைகளினால் தூர்வாரப்படாமல் உள்ள கிராம திட்ட செயலாக்கக்குழு கண்டறிந்த பணிகளில், தேவையின் அடிப்படையில் முன்னுரிமை அளித்து மேற்கொள்ளப்பட வேண்டும்.

ii. பணிகள் ஆரம்பிக்கும் முன்பு முன்அளவீடுகள் பதிவு செய்யப்பட வேண்டும்.

iii. தூர்வாரும் மண்ணைக்கொண்டு கரைகள் பலப்படுத்தப்படும்போது கரைகளின் மேல் மட்டம் மற்றும் பக்கவாட்டு சரிவுகள் முறையாக அமைக்கப்படுவதை உறுதி செய்தல் வேண்டும்.

iv. ஊருணிகள், குளங்களைத் தூர்வாரும் போது கரைகளைப் பலப்படுத்துதலுக்குத் தேவைப்படும் மண் போக மீதமிருக்கும் மண்ணினை வருவாய்த் துறையின் அனுமதியினைப் பெற்று அருகாமையில் உள்ள இடங்களில் உரிய முறையில் அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

v. தூர்வாரும் பணிகளை டெண்டர் முறையில் மேற்கொண்டு அளவீடு புத்தகத்தில் (M- Book) பதிவு செய்யப்பட வேண்டும்.

vi. இப்பணிகள் மேற்கொள்ளும் முன்பும், நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதும், முடிவுற்ற பின்பும் தேவையான புகைப்படங்கள் முழுமையாக எடுத்து ஆவணப்படுத்தல் வேண்டும் மற்றும் முடிவுற்ற பணிகளின் விவரத்தினை சம்பந்தப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு தெரியப்படுத்த வேண்டும்.

vii. இவ்வினத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியில் சேமிப்பு ஏற்படுமாயின் அச்சேமிப்பு நிதியினை தூர்வாரும் பணிகளுக்கான பொருள் இலக்கினை அதிகப்படுத்தி பயன்படுத்திக் கொள்ளலாம்.

**5) நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள் அமைத்தல்:**

i. கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 2021-22 ஆம் ஆண்டு முதல் 2024-25 வரை மற்றும் 2025-26 ஆம் ஆண்டு தொகுப்புகளில் அமைக்கப்பட்ட/அமைக்கப்படும் சமுதாய ஆழ்துளை/ குழாய்/ திறந்தவெளிக் கிணறுகளில் சாத்தியக் கூறு உள்ள இடங்களில் மற்றும் 2025-26 ஆம் ஆண்டில் தனிப்பட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகளுக்கு அமைக்கப்படும் ஆழ்துளை/ குழாய்க் கிணறுகளில் சாத்தியக் கூறு உள்ள இடங்கள் தெரிவு செய்யப்பட்டு நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள் அமைக்கப்பட வேண்டும்.

ii. தொகுப்புகளில் அமைக்கப்படும் நீர் செறிவூட்டும் கட்டமைப்பினை அமைக்க அத்தொகுப்பு விவசாயிகளிடமும் தனிநபர் ஆதிதிராவிடர்

மற்றும் பழங்குடியினர் விவசாயிகளுக்கு அமைக்கப்படும் நீர் சேகரிப்பு கட்டமைப்பிற்கு சம்பந்தப்பட்ட விவசாயிகளிடமும் உரிய ஒப்புதல் கடிதம் மற்றும் அக்கட்டமைப்பினை அவர்களே பராமரிக்க ஒப்புதலும் பெறப்பட வேண்டும்.

iii. தேர்ந்தெடுக்கப்பட்ட கிணறுகளின் தன்மைக்கேற்பவும் அவற்றைச் சுற்றி உள்ள நிலத்தின் தன்மைக்கேற்பவும், நீர் செறிவூட்டும் கட்டமைப்புகளின் அளவுகள் மாறுபடலாம்.

iv. சமுதாய திறந்தவெளிக் கிணறுகளுக்கு நீர் செறிவூட்டும் கட்டமைப்பு அமைக்கும் போது பட்டா நிலமாக இருப்பின் நில உரிமை மாற்றம் பெற்றுப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

v. இக்கட்டமைப்புகளின் மதிப்பீடுகள் பொதுப்பணித்துறையில், நடைமுறையில் உள்ள விலை விகித அட்டவணையின்படி தயார் செய்து பணிகள் மேற்கொண்டு, செலவினம் செய்யப்பட வேண்டும்.

vi. திட்டப் பணியின் மதிப்பின் அடிப்படையில் பணியை நிறைவேற்றுவதற்கு டெண்டர் நடைமுறை பின்பற்றப்பட வேண்டும்.

vii. அளவைப் புத்தகத்தில் (M–Book) அளவீடுகள் சரியாகப் பதிவு செய்யப்பட்டு அதற்கேற்ப பணம் வழங்கப்பட வேண்டும்.

viii. பணித்தளத்தில் உள்ள அளவுகள், அளவைப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். GPS அளவுகள் (தீர்க்க, அச்சரேகை) எடுத்து மதிப்பீடு மற்றும் அளவு புத்தகத்தில் பதிவு செய்ய வேண்டும்.

ix. பணி செய்வதற்கு முன்னரும், பணியின் போதும், பணி முடித்தவுடனும் புகைப்படங்கள் (தொகுப்பில் உள்ள குழு விவசாயிகள் அல்லது தனிப்பட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயியுடன்) எடுத்து ஆவணப்படுத்த வேண்டும்.

**நீர் செறிவூட்டும் கட்டமைப்பின் தொழில்நுட்ப விவரங்கள்**

**I. திறந்தவெளிக் கிணறு நீர் செறிவூட்டும் மாதிரி வடிவமைப்பு**

i. திறந்தவெளிக் கிணற்றின் அருகில் 3.60 மீட்டர் விட்டமும், 60 சென்டி மீட்டர் ஆழமும் கொண்ட குழி தோண்டப்பட வேண்டும்.

ii. துளையிடப்பட்ட 110 மில்லி மீட்டர் விட்டம் கொண்ட பிவிசி குழாய் வடிகட்டித் திரையுடன் படத்தில் உள்ளவாறு உறுதியான மண் அடித்தளத்தில் அமைக்கப்பட வேண்டும்.

iii. துளையிடப்பட்ட பிவிசி குழாய், தரை மட்டத்திற்கும் அதிகமான உயரம் கொண்டதாக நிறுவப்பட வேண்டும் மற்றும் அந்த பிவிசி குழாயின் மேல் பாகம் தென்னை நாரினால் மூடப்பட்டிருக்க வேண்டும்.

iv. தோண்டப்பட்ட குழிக்குள் 4 முதல் 10 மில்லி மீட்டர் அளவுள்ள நொறுக்கப்பட்ட (ஜல்லி) கற்களால் நிரப்பப்பட வேண்டும்.

v. தரை மட்டத்தில் குழியினைச் சுற்றி 20 மில்லி மீட்டர் முதல் 40 மில்லி மீட்டர் அளவுள்ள கற்களை 60 சென்டி மீட்டர் அகலத்தில் பரப்பி வைக்க வேண்டும்.

vi. 60 சென்டி மீட்டர் விட்டமுள்ள துளையிடப்புட்ட பிளாஸ்டிக் தொட்டி நீர் செறிவூட்டும் அமைப்பிற்கு நடுவில் வைக்கப்பட்டு, அதற்குள் நைலான் திரை அமைக்கப்பட்டு மணல் நிரப்பப்பட வேண்டும் அல்லது 120 சென்டி மீட்டர் விட்டமுள்ள கான்கிரீட் வளையத்தினை பிளாஸ்டிக் தொட்டிக்கு பதிலாக செறிவூட்டும் அமைப்பிற்கு நடுவில் வைத்து அதற்குள் நைலான் திரை அமைத்து மணல் நிரப்பி வைக்கலாம்.


vii. பிளாஸ்டிக் டிரம்/ பேரலில் வடிகட்டும் ஊடகமாக சிலிகா மணல் பயன்படுத்த வேண்டும். சலித்த ஆற்று மணல் நன்றாகக் கழுவிய பிறகு பயன்படுத்தலாம். தயாரிக்கப்பட்ட மணல் (M–Sand) பயன்படுத்தக் கூடாது.

viii. பேரலுக்குள் உள்ள வடிகட்டி உள்வரும் நீருடன் அதிகமான தொடர்பு பரப்பினை கொண்டிருக்கும் வகையில் அமைக்கப்பட வேண்டும்.

ix. பிளாஸ்டிக் பேரலின் மேல் பகுதி சரியாகவும் உறுதியான முறையிலும் மூடப்பட வேண்டும். இதனால் வடிக்கப்படாத நீர் உள்ளே செல்வதைத் தடுக்கலாம்.

x. பேரல்/ டிரம்/ பிளாஸ்டிக் டிரம்மின் கீழ் 4" முதல் 6" வரையிலான T வடிவக் குழாய்கள் பொருத்தப்பட வேண்டும். மேலும் T குழாய்களிலிருந்து நீட்டிப்பு குழாய்களை இணைக்க கூடாது.

xi. வடிகட்டப்பட்ட நீரின் தரத்தை பரிசோதிக்க, 30x30 செ.மீ அளவுள்ள தொட்டி அல்லது 200 லிட்டர் கொள்ளளவுள்ள பிளாஸ்டிக் பேரல் அமைக்கலாம்.




படம். குறுக்கு வெட்டு தோற்றம்



படம். உத்தேசிக்கப்பட்ட திறந்த வெளிக் கிணற்றின் நீர் செறிவூட்டும் அமைப்பு

II. ஆழ்துளை/ குழாய்க் கிணறு நீர் செறிவூட்டும் மாதிரி வடிவமைப்பு

i. ஆழ்துளை/ குழாய்க் கிணற்றைச் சுற்றி 1.50 மீட்டர் ஆழம் மற்றும் 2.10 மீட்டர் விட்டம் கொண்ட குழி தோண்டப்பட வேண்டும். அதில் 120 சென்டி மீட்டர் விட்டம் 30 சென்டி மீட்டர். உயரமும் கொண்ட கான்கிரீட் வளையங்கள் 6 எண்கள் குழியின் நடுவில் நிறுவப்பட வேண்டும்.

ii. கான்கிரீட் வளையங்கள் நன்றாக பொருத்தப்பட்டு, உள்ளும் வெளியும் சரியாக பூசுவேலை செய்யப்பட வேண்டும்.

iii. தரையில் உள்ள மண் மேல் பேவர் பிளாக்குகள் (Paver block) வைக்கப்பட்டு அதன் மேல் கான்கிரீட் வளையங்கள் வைக்கப்பட வேண்டும். இதனால், தண்ணீர் அப்பகுதியில் நுழைந்து, வடிகட்டி ஊடாக மேலே எழுந்து, பின்பு சுத்தமான நீர் குழாய் மூலம் செல்ல ஏதுவாக அமையும்.

iv. கான்கிரீட் வளையங்களுக்குள் அலுமினிய கேசிங் பைப்பினைச் சுற்றி 2.5 சென்டி மீட்டர் தடிமன் மற்றும் 450 கிலோ/ கன மீட்டர் அடர்த்தி கொண்ட பாலியூரித்தீன் நுரை பஞ்சு (Poly urethane foam) வைக்கப்பட வேண்டும். நுரை பஞ்சின் விட்டம் 80 சென்டி மீட்டர்.

v. வளையங்களுக்கும் குழிக்கும் இடையே உள்ள இடைவெளியில் கேசிங் பைப்பை சுற்றிலும் 4 மில்லி மீட்டர் முதல் 10 மில்லி மீட்டர் அளவுள்ள நொறுக்கப்பட்ட (ஜல்லி) கற்களால் நிரப்பப்பட வேண்டும்.

vi. 4 முதல் 10 மி.மீ அளவுள்ள ஜல்லி கற்கள் நன்றாக சலித்த பின்னர், தண்ணீரால் கழுவப்பட வேண்டும், ஏனெனில் அதிக அளவு M.மணல் இருந்தால், வடிகட்டும் திறனை பாதிக்கலாம்.

vii. குழியைச் சுற்றி 20 மில்லி மீட்டர் முதல் 40 மில்லி மீட்டர் அளவுள்ள கற்கள் தரை மட்டத்திற்கு மேல் பரப்பப்பட வேண்டும்.


viii. அலுமினியம் பிரேம் இரண்டு மூலைகளிலும் ஸ்பாஞ்ச் உறுதியான முறையில், எந்த இடைவெளியும் இல்லாமல் பொருத்தப்பட வேண்டும்.

ix. ஸ்பாஞ்ச் (Foam) சுற்றி 1 முதல் 2 அடி உயரத்திற்கு கான்கிரிட் வளையத்திற்குள் மணல் நிரப்பப்பட வேண்டும்.

x. கூடுதலான ஸ்பாஞ்ச் அடுக்குகள் (4 அடுக்குகள் வரை) வடிகட்டுதல் மூலம் தெளிவான நீரினை பெற இயலும்.



படம். உத்தேசிக்கப்பட்ட ஆழ்துளைக் கிணற்றின் நீர் செறிவூட்டும் அமைப்பு

| | |
|---|---|
|   |  |
| படம். குறுக்கு வெட்டுத் தோற்றம் | படம். அலுமினிய கேசிங் பைப்பை சுற்றி நுரை பஞ்சு |

## IV) வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை

i. 2025 – 26 ஆம் ஆண்டு கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட2,338 கிராம பஞ்சாயத்துகளில், உலர்களத்துடன் கூடிய தரம் பிரிப்புக் கூடங்கள் ஏற்படுத்திட முன்னுரிமை அளிக்கப்படும். தகுதியான இடங்கள் தெரிவு செய்ய இயலாத நிலையில் இத்திட்டம், 2021–22 (1,997 கிராமங்கள்), 2022–23 (3,204 கிராமங்கள்), 2023–24 (2,504 கிராமங்கள்) மற்றும் 2024–25 (2,482 கிராமங்கள்) ஆம் ஆண்டுகளில்

கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை மேம்பாட்டுத்திட்ட கிராமங்களில், விவசாயிகளின் தேவை அடிப்படையில் ஏற்படுத்தப்பட வேண்டும்.

ii. இத்திட்டம் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் மூலமாக செயல்படுத்தப்பட வேண்டும்.

iii. உலர்களத்துடன் கூடிய தரம் பிரிப்புக் கூடங்கள் கட்டும் முன்னர் கிராமப் பஞ்சாயத்துகளிடம் முன்அனுமதி பெறப்படவேண்டும்.

iv. இந்த உட்கட்டமைப்பு வசதியினை ஏற்படுத்திட 20 சென்ட் நிலம் தேவைப்படும். அதில் ஒரு பக்க அளவு 20 மீட்டருக்கு குறைவில்லாமால் இருக்கவேண்டும். அவ்விடத்தில் 125 மெடன் கொள்ளளவு கொண்ட தரம் பிரிப்பு கூடம் (12 மீ x 8 மீ) மற்றும் 270 சதுரமீட்டர் (18மீ x 15 மீ) உலர்களம் அமைத்து தரப்படும். உலர்களத்துடன் கூடிய தரம் பிரிப்புக் கூடாரங்களின் மாதிரி வரைபடம் இணைப்பு-VII இல் அளிக்கப்பட்டுள்ளது.

v. உலர்களத்துடன் கூடிய தரம் பிரிப்புக் கூடங்கள் கட்டி முடிக்கப்பட்ட பின்னர், அந்தந்த கிராமப் பஞ்சாயத்துகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

vi. உலர்களத்துடன் கூடிய தரம் பிரிப்புக் கூடங்கள் கட்டி முடிக்கப்பட்ட பின்னர் விவசாயிகளின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட வேண்டும்.

vii. வேளாண் விளைபொருட்களை தரம் பிரிப்பு மற்றும் உலர்த்தும் பணிகளை தவிர பிற பயன்பாட்டிற்கு பயன்படுத்தக்கூடாது.

viii. KAVIADP கிராம பஞ்சாயத்துகள், சுற்றியுள்ள கிராம மக்களும் இத்திட்டத்தின் மூலம் பயனடைவார்கள்.

ix. உலர்களத்துடன் கூடிய தரம் பிரிப்புக் கூடங்கள் அமைக்கப்பட்டபின் விவசாயிகளின் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதை, உதவி வேளாண்மை அலுவலர்கள் (வேளாண் வணிகம்) உறுதி செய்ய வேண்டும்.

<u>V) சர்க்கரைத்துறைத் திட்டத்தின் இனவாரியான வழிகாட்டு நெறிமுறைகள்</u>

i. 2025-26 கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் 2,338 கிராம பஞ்சாயத்துகளில் கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு இத்திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும்.

ii. கூட்டுறவு மற்றும் பொதுத்துறை ஆலைப்பகுதிகளில் செயலாட்சியர்கள்/ தலைமை நிர்வாகிகள் மூலமாகவும், தனியார் சர்க்கரை ஆலைப்பகுதிகளில் வேளாண்மைத்துறை-மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்கள் மூலமாகவும் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும். இதற்கான ஆலைவாரியான, மாவட்ட வாரியான இலக்குகள் சர்க்கரைத்துறை இயக்குநரால் பிரித்தளிக்கப்பட வேண்டும்.

iii. கரும்பு பயிரிடும் விவசாயி ஒருவருக்கு அதிகபட்சமாக இரண்டு எக்டருக்கு மட்டுமே மானியம் வழங்கப்பட வேண்டும்.

iv. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட வேண்டும்.

v. விநியோகத்தின் போது அதிக அளவில் குறு, சிறு மற்றும் பெண் விவசாயிகள் பயனடைதல் வேண்டும்.

vi. தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

**1. பருசீவல் நாற்றுக்கள் வாங்கிட உதவித்தொகை வழங்குதல் ஒரு எக்டருக்கு ரூ.15,625 (50 சதவீத மானியம்) - 200 எக்டர்- (ரூ. 31.25 இலட்சம்)**

i. ஒரு எக்டருக்கு 12500 எண்கள் பருசீவல் நாற்றுக்களுக்கு 50 சதவீத மானியமாக ரூ. 15,625/- வழங்கப்பட வேண்டும்.

ii. கரும்பு இனப்பெருக்க நிறுவனம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கூட்டுறவு, பொதுத்துறை சர்க்கரை ஆலைகள், முன்னோடி விவசாயிகள், தனியார் நாற்று விற்பனை மையங்களிலிருந்து புத்தாக்கம் செய்யப்பட்ட கோ86032, கோ 11015, கோஉ 09356, கோ 0212, கோக 13339, கோகு 6, கோகு 7, கோ 18009 (புன்னகை) ஆகிய கரும்பு இரக பருசீவல் நாற்றுக்களை விவசாயிகள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**2. ஒருபரு விதைக்கரும்பு வாங்கிட உதவித் தொகை வழங்குதல் ஒரு எக்டருக்கு ரூ.5000 (50 சதவீத மானியம்)– 90 எக்டர்– (ரூ. 4.50 இலட்சம்)**

i. ஒரு எக்டருக்கு 2.5 மெட்ரிக் டன் ஒருபரு விதைக்கரும்பிற்கு 50 சதவீத மானியமாக ரூ. 5,000/- வழங்கப்பட வேண்டும்.
ii. கரும்பு இனப்பெருக்க நிறுவனம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கூட்டுறவு, பொதுத்துறை சர்க்கரை ஆலைகள், முன்னோடி விவசாயிகள், தனியார் நாற்று விற்பனை மையங்களிலிருந்து புத்தாக்கம் செய்யப்பட்ட கோ86032, கோ 11015, கோஉ 09356, கோ 0212, கோக 13339, கோகு 6, கோகு 7, கோ 18009 (புன்னகை) ஆகிய கரும்பு இரக ஒரு பரு விதைக்கரும்பு வாங்கிட வேண்டும்.

வ. தட்சிணாமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

அரசாணை (நிலை) எண்.183,   வேளாண்மை–உழவர்நலத் (வேஉ.6(1) துறை, நாள் 23.06.2025

## இணைப்பு – V

## கிராம திட்ட செயலாக்கக்குழு

| | | |
|---|---|---|
| 1 | வேளாண்மை அலுவலர் / தோட்டக்கலை அலுவலர் / துணை வேளாண்மை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர் | தலைவர் |
| 2 | உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர் / உதவி விதை அலுவலர் / உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்) | கிராம அளவிலான திட்ட பொறுப்பு அலுவலர் ( Nodal Officer) |
| 3 | உதவிப் பொறியாளர் – வேளாண்மைப் பொறியியல் துறை | உறுப்பினர் |
| 4 | மீன்வளத்துறை ஆய்வாளர் | உறுப்பினர் |
| 5 | கிராம நிர்வாக அலுவலர் | உறுப்பினர் |
| 6 | கூட்டுறவு சங்க செயலாளர் | உறுப்பினர் |
| 7 | கால்நடை உதவியாளர் | உறுப்பினர் |
| 8 | பஞ்சாயத்து உதவியாளர் | உறுப்பினர் |
| 9 | ஊரக வளர்ச்சித்துறை – ஓவர்சியர் | உறுப்பினர் |
| 10 | மின்சாரத்துறை கம்பியாளர் (Foreman) | உறுப்பினர் |
| 11 | சமுதாய வள ஆர்வலர்– பண்ணை (Community Resource Person - Farm) – TNSRLM | அலுவலரல்லா உறுப்பினர்கள் |
| 12 | பஞ்சாயத்து தலைவர்,பால் சங்கத் தலைவர் மற்றும்முன்னோடி விவசாயிகள் (2–3 நபர்கள்) | அலுவலரல்லா உறுப்பினர்கள் |
| 13 | கிராம பஞ்சாயத்திற்கான அட்மா திட்ட உழவர் நண்பர்கள் | அலுவலரல்லா உறுப்பினர்கள் |

வ. தட்சிணாமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்
23/6/25

## இணைப்பு – VI

## மாவட்ட கண்காணிப்புக் குழு

| | | |
|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சித்தலைவர் | குழுத்தலைவர் |
| 2. | மாவட்ட வருவாய் அலுவலர் | உறுப்பினர் |
| 3. | திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) | உறுப்பினர் |
| 4. | திட்ட அலுவலர் (TNSRLM) | உறுப்பினர் |
| 5. | வேளாண்மை இணை இயக்குனர் | உறுப்பினர்செயலாளர் |
| 6. | கூட்டுறவு இணைபதிவாளர் | உறுப்பினர் |
| 7. | இணை இயக்குநர் (கால்நடை பராமரிப்புத்துறை) | உறுப்பினர் |
| 8. | செயற்பொறியாளர் (நீர்வள ஆதாரத்துறை) | உறுப்பினர் |
| 9. | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) | ஒருங்கிணைப்பாளர் |
| 10. | தோட்டக்கலை துணை இயக்குனர் | உறுப்பினர் |
| 11. | வேளாண்மை துணை இயக்குனர் (வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை) | உறுப்பினர் |
| 12. | மாவட்ட செயற்பொறியாளர் (வேளாண்மை பொறியியல் துறை ) | உறுப்பினர் |
| 13 | செயற்பொறியாளர் (Groundwater) – (நீர்வள ஆதாரத்துறை) | உறுப்பினர் |
| 14. | மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் | உறுப்பினர் |
| 15. | மாவட்ட மின்வாரிய கண்காணிப்புப் பெறியாளர் | உறுப்பினர் |
| 16. | மண்டல மேலாளர் – நுகர்பொருள் வாணிபக் கழகம் | உறுப்பினர் |
| 17. | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் / மாவட்ட கே.வி.கே விஞ்ஞானிகள் | உறுப்பினர் |
| 18. | ஆவின் பொது மேலாளர் | உறுப்பினர் |
| 19. | உதவி இயக்குநர் (மீன்வளத்துறை) | உறுப்பினர் |
| 20 | மாவட்ட ஆட்சியர் சிறப்பு அழைப்பாளர்கள் – முன்னோடி விவசாயிகள் (2 முதல் 3 நபர்கள்) வேளாண்மை / தோட்டக்கலை விவசாயிகள் (ஓராண்டு சுற்றில் புதிய விவசாயிகள் தேர்வு) | உறுப்பினர்கள் |


வ. தட்சிணாமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

//உண்மை நகல்//


பிரிவு அலுவலர்

## இணைப்பு – VII

CONSTRUCTION OF DRYING YARD UNDER KAVIADP **2025-26** SCHEME SIZE - ( 18.00 X 15.00 m )





Plan Details





Section Details


GRADING & SORTING HALL OF (Size - 12.00 X 8.00m ) -WITH DRYING YARD FACILITIES IN KAVIADP **2025-26**




ELEVATION




SECTION – 'A & B'




PLAN

Footing Size - 1.20 x 1.20m - 10 Nos
Column Size - 0.23 x 0.38m -10 Nos
Grade Beam Size - 0.23 x 0.35m
Plinth Beam Size - 0.23 x 0.15m
Lintel Beam Size - 0.23 x 0.15m
Basements Height - 0.75m
M.S Window - 1.80 x 1.20 m - 4 Nos
Rolling Shutter - 2.10 x 2.10m - 2 No

அரசாணை (நிலை) எண்.183, வேளாண்மை-உழவர்நலத் (வேஉ.6(1) துறை, நாள் 23.06.2025

படிவம் I

வேளாண்மைப் பொறியியல் துறை கூட்டு ஒப்பந்தப் படிவம்

**தமிழக அரசின் "கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் - 2025-2026 இன்" பயனாளிகளிடமிருந்து பெறப்படும் கூட்டு ஒப்பந்தம்**

தமிழக அரசுக்கும் (வேளாண்மைப் பொறியியல் துறை) வேளாண்மைத் துறை/ தோட்டக்கலைத் துறையினரால் உருவாக்கப்படும் தரிசு நில தொகுப்பு விவசாய குழு சங்க விவசாயிகளுக்கும் இடையேயான கூட்டு ஒப்பந்தம்

1) தமிழக அரசினால் கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வேளாண்மை/ தோட்டக்கலை/ வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையினரால் உருவாக்கப்பட்டுள்ள தரிசு நில தொகுப்புக் குழுவின் கீழ்க்கண்ட விவசாயிகளான நாங்கள், இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் நீர்ப்பாசன கட்டமைப்பு மற்றும் அவற்றில் இருந்து கிடைக்கப்பெறும் நீரினை சுமுகமாகவும் ஒற்றுமையுடனும் பகிர்ந்து பயன்படுத்த ஒப்புக்கொள்கிறோம்.

(அ) பெயர் தகப்பனார் பெயர்
கிராமம் வட்டம்
மாவட்டம்

(ஆ)

(இ)

(ஈ)

2) தரிசு நிலத்தொகுப்புக் குழு உறுப்பினர்களில் ஒருவரான திரு..........................., ............................... கிராமம் .......................... வட்டம் ................................. மாவட்டத்தில் அமைந்துள்ள விவசாய நிலத்தின் உரிமையாளர் மற்றும் அந்நிலத்தினை நேரடி உடைமையாகக் கொண்டவர் என நாங்கள் சான்றளிக்கிறோம்.

3) கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கூறிய நிலத்தில் பாசனத்திற்காக ஆழ்துளை/ குழாய்/ திறந்தவெளிக் கிணறு அமைக்க நாங்கள் விண்ணப்பிக்கின்றோம். பத்தி எண் - 2ல் கூறிய தரிசு நிலத் தொகுப்புக் குழு உறுப்பினர், நீர்ப்பாசன கட்டமைப்புகளை அமைக்க தனது நிலத்தினை அரசுக்கு தானமாக கொடுப்பதுடன், கட்டமைப்புகள் இயங்கக்கூடிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி மேலும் கூடுதல் நிபந்தனைகளுக்கும் ஒப்புக் கொள்கிறோம்.

4) எதிர்காலங்களில் மேற்கண்ட பாசன கட்டமைப்புகள் மூலம் எடுக்கப்படும் பாசன நீர் பிற விவசாயிகளின் விவசாய நிலத்திற்கு பயன்படுத்துவதற்கு தமிழக அரசுக்கு உரிமையுண்டு என்பதை அறிந்திருக்கிறோம். இத்தருணங்களில் தமிழக அரசு எடுக்கும் முடிவுகளில் நாங்கள் எச்சூழலிலும் தலையிடுவது இல்லை எனவும் அரசின் முடிவே இறுதியானது எனவும் உறுதியளிக்கிறோம்.
5) நிலத்தடி நீர்ப்பாசனக் கட்டமைப்புகளாகிய .............................. கிணறு பம்புசெட்டுகள் மற்றும் .................. ஆகியவற்றினை பாதுகாப்பது எங்களுடைய பொறுப்பாகும். அக்கட்டமைப்புகளை விவசாயத்திற்கு மட்டுமே பயன்படுத்துவோம் என உறுதியளிக்கிறோம். மேற்கூறிய விவசாய நிலத்தில் ஏற்படுத்தப்பட்ட கட்டமைப்புகளின் மூலம் எடுக்கப்படும் நிலத்தடி நீரினை எவ்விதமான விற்பனை செய்யவும் எங்களை உட்படுத்திக் கொள்ள மாட்டோம் எனவும் கிடைக்கப்பெறும் நீரினை எங்களது தொகுப்புக் குழு விவசாயிகளிடையே சுமுகமாகவும் ஒற்றுமையுடனும் பகிர்ந்து பயன்படுத்த ஒப்புக்கொள்கிறோம் எனவும் உறுதியளிக்கிறோம்.
6) மேற்கூறிய அனைத்தும் நாங்கள் அறிந்தவரை உண்மையாகும்.
7) இக்கூட்டு ஒப்பந்தத்தின்படி எவ்வித விதிமுறைகளையும் மீறினால் அதற்கு நாங்களே பொறுப்பு. மேலும் உண்மைக்கு புறம்பான அல்லது தவறான தகவல்களை அளித்தால் சட்டப்படி சட்ட நடவடிக்கைகளுக்கு பொறுப்பாவோம் என்பதனை அறிந்திருக்கிறோம்.

தரிசு நிலத்தொகுப்புக் குழு
உறுப்பினர்களின் பெயர் /
முகவரி மற்றும் கையொப்பம்

கிராம திட்ட பொறுப்பு அலுவலரின்
கையொப்பம்

வேளாண்மைப் பொறியியல் துறை
அலுவலரின் கையொப்பம்

**அரசாணை (நிலை) எண். 183, வேளாண்மை–உழவர்நலத் (வேஉ.6(1) துறை, நாள் 23.06.2025**

**படிவம் II**

**வேளாண்மைப் பொறியியல் துறை**

**பொறுப்பு ஒப்படைப்பு படிவம்**

கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் 2025–26 மூலம் வேளாண்மைத் துறை / தோட்டக்கலைத் துறையால் உருவாக்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட தரிசு நிலத் தொகுப்புகளில் வேளாண்மைப் பொறியியல் துறையால் ஏற்படுத்தப்பட்ட நீர் ஆதார கட்டமைப்புகளை சம்பந்தப்பட்ட வேளாண்மைத் துறை/ தோட்டக்கலைத் துறையிடம் ஒப்படைப்பு செய்யும் படிவம்.

................................................ மாவட்டம் .............................. வட்டாரம் .................................. பஞ்சாயத்து ............................ கிராமத்தில் வேளாண்மைத் துறை/ தோட்டக்கலைத் துறையினரால் உருவாக்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட ......................... தரிசு நிலத் தொகுப்பிற்கு வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் மேற்குறிப்பிட்ட கிராமத்தில் ..................... சர்வே எண்ணில் ஆழ்துளை/ குழாய்க் கிணறு ....................... அடியில் புதிய நீர் ஆதாரமாக உருவாக்கப்பட்டு, மின் / சூரிய சக்தி மின்மோட்டார் அமைக்கப்பட்டு அதன் மூலம் நல்ல முறையில் நீர் இறைக்கப்பட்டு இயங்கி வரும் நீர் ஆதார அமைப்பு ஒப்படைக்கப்படுகிறது.

பொறுப்பு ஒப்படைப்பவர்

பொறுப்பு பெற்றுக்கொள்பவர்

உதவி செயற்பொறியாளர் (வே.பொ)

உதவி வேளாண்மை இயக்குநர் /
உதவி தோட்டக்கலை இயக்குநர்

முன்னிலை

1. கிராம திட்ட பொறுப்பு அலுவலர்
2. தரிசு நிலத் தொகுப்பு குழு தலைவர்

**வ. தட்சிணாமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசு செயலாளர்**

**//உண்மை நகல்//**

பிரிவு அலுவலர்